NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
WE OFFER SERVICES IN:
Real Estate
Corporate Law
Litigation
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

September 2018

# ஏகுருவி

ekuruvi.com
$1 WOW!

Bring your parents & Grandparents worry free!
SuperVisa. Today
416 321 6000
support@supervisa.today



## நம்பிக்கைத் தமிழர்களும் தமிழர்களின் நம்பிக்கையும்

## ஒண்டாரியோவை சூழும் சர்வாதிகார மேகங்கள்?

## ஜஸ்ரின் ரூடோ தடுமாறுகின்றாரா?

## தேர்தலில் நிற்பவர் யாரோட ஆள்?!

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Buying or selling a home?
Thipan Raj
Sales Rep.
Cell: 416-629-2444

MORTGAGE ALLIANCE THE GUARDIAN
GET A TEAM OF EXPERIENCED PROFESSIONALS WORKING FOR YOU.
WE HAVE THE Right Mortgage for you!
Cell : (416) 830-3241
Tel : (416) 556-7002
Fax : (416) 556-5115
info@mortgageguardian.ca
Gini Annarasa
Mortgage Broker
Independently owned and operated franchise of the Mortgage Alliance Network | Lic#12521
gini.annarasa@gmail.com
Cell : (416) 830-3241
80 Nashdene Rd, Unit D221-222, Toronto, ON M1V5K4
www.mortgageguardian.ca

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON. M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change
$24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
The Local Experts
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Protect You & Your Family
"JOIN OUR TEAM"
Get your industry licence at no cost...
Comprehensive skills training and mentoring by over 30 yrs.Experienced industry legend
Free in class teaching
Guna Thuraisingham
416 528 1407

வீடு விற்க... வாங்க...
Ram Krishnamurthy
SALES REPRESENTATIVE
Direct 416-526-4996
ROYAL LEPAGE
IGNITE REALTY- BROKERAGE 795 Milner Ave, Toronto, ON M1B 3C3 | 416-282-3333

PAIN?
PHYSIOTHERAPY
CHIROPRACTIC
MASSAGE
ORTHOTICS
ACUPUNCTURE
CAR ACCIDENTS
PRO-LIFE WELLNESS CENTRE
416.357.2808
OPEN 7 DAYS
1-1221 Markham Rd Toronto
COME FEEL THE DIFFERENCE!
www.prolifewellnesscentre.com
AJAY THAVAM
416.704.8074

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com

www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

## தரிசிக்கவேண்டிய நிகழ்காலம்.

ஒரு சமூகம் எப்படி இருந்தது என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? வாரலாற்றை வகிடெடுத்துப் படித்துப் பாருங்கள். அதே சமூகத்தின் நிகழ்காலத்தை தரிசிக்க வேண்டுமா? கல்லூரிக்குப் போங்கள்.

கவனித்தல் என்று ஒரு சொல் தமிழில் உண்டு. அற்புதமான சொல் எந்தெந்த இடத்தில் வருதோ அந்தந்த இடத்தை அழகு செய்யும். வகுப்பறையில் ஆசிரியர் கவனி என்றால் பாடத்தைக் கிரகித்துக்கொள் என அர்த்தப்படும். புகையிரத நிலையத்தில் பயணிகளின் கவனத்துக்கு என்பது பயண அறிவுறுத்தல் என அர்தப்படும். ஓர் திருமண நிகழ்வில் என்னை நன்றாகக் கவனித்தார்கள் என்பது சிறப்பான விருந்தோம்பலைக் குறிக்கும். வைத்தியசாலையில் நோயாளியை நன்றாகக் கவனித்தார்கள் என்பது சிறப்பாக பராமரித்தார்கள் எனப் புரிந்து கொள்ளலாம். காவல் நிலையத்தில் கவனித்தார்கள் என்பது தண்டனையைக் குறிக்கும். ஒருவர் பெரிய கூட்டத்திலும் என்னைக் கவனித்தார் என்பது முக்கியத்துவம் பெறுவதைச் சுட்டிக்காட்டுகிறது. இப்படியாக அழகாக... அழகாக... அர்த்தங்கள் சொல்லும் சொல் இன்று எப்படி ஆகி விட்டது என்றால் "என்னைக் கவனியுங்கள் அந்த வேலையை முடித்துக் கொடுத்து விடகிறேன்" என இலஞ்சச் சொல்லாகி விட்டது.

ஈழத்தமிழர்கள் வாழ்வியலில் சமூகத்தின் நிகழ்காலத்தை "கவனிக்க வேண்டிய" காலத்தில் காலச்சக்கரம் எங்களை நிறுத்தி வைத்திருக்கிறது என்றே கூறவேண்டும். இங்கே "கவனிக்க வேண்டிய" என்பது முன்னேற்றம், மாற்றம், அடுத்த இலக்கு, ஆட்சியாளர்களுடனா அரசியல் பேச்சு, நட்பு, நேசிப்பு, புதியன புகுதல், கல்வி, கற்பித்தல், விவசாயம், சட்டம் ஒழுங்கு, நாகரீகம், வாள் வெட்டு என பல உள்ளுடன்களைக் கொண்ட ஓர் விரூட்ச நிலையைக் குறித்து நிற்கிறது. இவை அனைத்தும் போருக்கு முற்பட்ட காலத்தில் முறைப்படுத்ப்பட்டிருந்தும் 30வருட போர் முற்றாக அனைத்தையும் "கவனித்து" விட்டது.

தமிழ் புலம் என்றும், புலம்பெயர் தேசம் என்றும் தன்னைக் "கவனித்துக்" கொண்டது. தமிழும் வீரமும் புலத்தில் வெற்றிகளையும், அரசியலையும் வேட்கையுடன் கவனிக்க, தமிழும், உணர்ச்சியூட்டலும் புலம்பெயர் நிலம் எங்கும் சேகரிப்புகளைம், வியாபாரங்களையும், வேறுபலவற்றையும் மேன்மையுடன் கவனித்துக் கொண்டது. புலத்துப் போரில் மௌனிப்பை அறிவித்த இனமாக அடி பயிலத் தொடங்கி இன்று ஒன்பது ஆண்டுகளை கடந்தபோதும் கவனிப்பார் அற்றவர்களாக இருப்பது கொடுமை. அதிலும் புலம்பெயர் தேசத்தில் தமிழால் பெற்றதை எல்லம் கவனித்துக் கொண்டு தங்கள் தலைநகர் அரசியல்களிலும், வர்த்தகத்திலும் கவனம் செலுத்தும் ஓர் புலம்பெயர் தமிழ் இனமாக இருப்பது கொடுமையிலும் கொடுமை.

புலத்தில் பெயர் சொல்லும் கல்லூரிகள் போதைப் பொருட்களின் கோவில்களாகவும் மாணவர்கள் துதிபாடி மகிழும் பக்தர்களாகவும் கவனிக்கப்படுகிறார்கள். கேரளத்து கஞ்சா கடல் கடந்து, கடல் படைகளைக் கடந்து, காலால் படைகளைக் கடந்து, புலனாய்வாளர்களைக் கடந்து வட+கரைகளின் வாசல் வருகிறது. தமிழ் அரசில்வாதிகளும், சமூக ஆர்வலர்களும் அரசே சூத்திரதாரி என கைகாட்டிவிட்டு தமது அன்றாடங்களைக் கவனிக் கச் சென்றுவிட்டனர். அரசோ நானோர் அப்பாவி எனச் சொல்லிவிட்டு தனது காரியங்களைக் கவனிக்கிறது.

தமிழே மூச்சு. தமிழே பேச்சு என்னும் தமிழ் அரசியல் வாதிகளே? எடுத்துக்கெல்லாம் ஆர்ப்பாட்டமும், பகிஷ்கரிப்பும், ஹர்த்தாலும் கூட்டும் தமிழ் அரசியல் வாதிகளே? இந்த போதைவஸ்தை ஒழிப்பதற்க ஒரு ஊர்வலமாவது சென்றதுண்டா? மாகணசபையில் பேசியதுண்டா? பாராளுமன்றத்தில் குற்றஞ் சுமத்தியதுண்டா? கேட்டால் இதெல்லாம் விளலுக்கு இறைத்த நீர் என்பீர்கள். ஆனால் உங்களின் தக்கவைப்புகளுக்காக தமிழர்களைக் கொண்டு எது வேண்டுமென்றாலும் செய்விப்பீர்கள் அதை அரசியல் என்றும் அர்த்தப்படுத்துவீர்கள். அரசாங்கம் இதைச் செய்கிறது என்றால் உங்கள் சிலரின் ஆதரவும் வியாபாரமும் நிடசயமாக உண்டு. காரணம் அரசின் அங்கத்தில் நீங்களும் உண்டு.

ஒரே வேண்டுகோள். எங்கள் சமூகத்தின் நிகழ்காலத்தை தரிசிக்க வேண்டுமா? உங்கள் தொகுதிகளில் உள்ள கல்லூரிக்களுக்கு ஒரு முறையாவது போங்கள், அப்பொழுதான் உள்ளூர் மாணவர்களின் நிலைபுரியும். உங்களின் பிள்ளைகள் போல் வெளிநாடு சென்று கல்வி கற்கமுடியாதவர்கள் அவர்கள்.

**இகுருவி பத்திரிகை ஒரு டொலர் சிவத்த உண்டியல் ... நம்பிக்கை**

வர்தக நிறுவனங்கள் தோறும் எமது சிவப்பு உண்டியல்கள் இகுருவிப் பத்திரிகை அருகில் கரம் கூப்பி உங்களின் ஒவ்வொரு டொலர்களையும் அன்போடு பெற்றுக் கொள்கிறது. ஜூன் மாதத்திலிருந்து உங்கள் அன்பினாலும், ஆதரவினாலும் சிவப்பு உண்டியல்களை மகிழ்வித்தீர்கள்.



சிலர் இத்தனை இலவச பத்திரிகைகளுக்குள் காசு பத்திரிகை சாத்தியமா? உண்டியலுக்குள் பணம் போடாமல் பத்திரிகையை எடுத்துச் சென்றால் என்ன செய்வீர்கள்? போன்ற கேள்விகள் எம்மை நோக்கி வந்த வண்ணமே உள்ளன. இதற்கு எங்களிடம் ஒரே பதில் தான் உண்டு அந்தப் பதில்....... நம்பிக்கை தான் வாழ்க்கை.

நீங்கள் பத்திரிகைக்காக கொடுக்கும் ஒவ்வொரு டொலர் அன்பளிப்புக்கும் புதிய வெளிச்சமூடாக தாயகத்தில் பல கல்வி, பொருளாதார, செயற்பாடுகளை செய்யலாம் என்று நம்புகின்றோம்

இந்த செப்டம்பர் மாத இகுருவி பத்திரிகையை அதற்குரிய பெறுமதியான $1 ஐ சிவத்த உண்டியலில் வழங்கி வாங்குவீர்கள் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

## இந்த இதழில்....

ஒண்டாரியோவை சூழும் சர்வாதிகார மேகங்கள்
- Triden V Balasingam

நம்பிக்கைத் தமிழர்களும் தமிழர்களின் நம்பிக்கையும்
- ரமணன் சந்திரசேகரமூர்த்தி

தலிபான் கானின் நயா பாகிஸ்தான் - ரதன்

நீரிழிவைப் பற்றி விரிவாகக் காண்போம்

நல்லூரின் இராஜதானியும் நல்லைக் கந்தனும்...!
-வல்வை ந அனந்தராஜ்

மேரி கொல்வினின் "A Private War" திரைப்படமாகின்றது

தேர்தலில் நிற்பவர் யாரோட ஆள்?! - குயின்ரஸ் துரைசிங்கம்

ஜன பலய கொழும்பட்ட: ராஜபக்ஷக்களுக்கிடையிலான குத்து வெட்டு! -புருஜோத்தமன் தங்கமயில

டொரோண்டோவில் அதிகரித்துவரும் துப்பாக்கி தொடர்பான வன்முறைகள் - தர்ஷினி உதயராஜா

ஜஸ்ரின் தடுமாறுகின்றாரா - ரதன்

அன்றைய இன்றைய திருமண வாழ்க்கையும்
- செல்வா செல்லத்துரை

பெருக்கெடுக்கும்ஈழத்தமிழர்வதிவிடங்கள் - குரு அரவிந்தன்

கனடா இனி கஞ்சா தேசமா ? - Dr. போல் ஜோசேப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Re-Elect **Juanita Nathan**
As Your Public School Board Trustee

**Ward 7 & 8 - Markham**

## Putting Students First!
## Oct 12 - 22 .2018

### Juanita Nathan

Experienced Leadership

- Community Outreach Worker
- Youth Addiction Counselor
- Domestic Abuse Counselor
- Parenting Worker
- Senior Support Worker

Juanita is advocating for:
- Equity and Inclusivity
- Parent Engagement with Schools
- Student Success and Well-being.

## Voting Oct 12 - 22 .2018



*"Education needs to be at the top of the agenda in every community, in every school and in every family"*
*- Juanita Nathan*

**PUTTING STUDENTS FIRST!**
**416 857 6308**
**Juanitanathan@gmail.com**
**www.juanitanathan.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒண்டாரியோவை சூழும் சர்வாதிகார மேகங்கள்?

> **திறந்த வாக்கெடுப்பு நடக்கும் பட்சத்தில்...**
> தமிழ் பிரதிநித்துவம் என்பதை பகடையாக பாவித்து குயீன்ஸ்பார்க் சென்ற கனவான்களும் இன்ன பிற சிறுபான்மை இன பிரதிநிதிகளும் இதயசுத்தியுடன் வாக்களிப்பார்களா அல்லது Ford இன் தாளத்துக்கு ஆடும் பொம்மைகளாக இருப்பார்களா என்பதே!

"Notwithstanding Clause" என்றால் என்ன? நேற்றுவரை எங்களுக்காக குயீன்ஸ்பார்க் போனவர்களுக்கே இது குறித்து தெரியுமா என்றால் விடை, சந்தேகமே!

ஆனால் இப்போது ஒண்டாரியோ முழுவதும் பேசுபொருளாக இருப்பது இந்த "நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிர்மாறான அமுலாக்கல்களை அனுமதிக்கும் அரசியல் சாசன உட்பிரிவு". வெறுமனே கட்சிகளுக்குள்ளும் புரிதலற்ற இடைவெளிகளை நிரப்பும் கனவு கொள்கைகளுக்குள்ளும் தொலைந்து கிடந்ததே இதுவரை கனேடிய தமிழ் அரசியல் மரபு என்பதோடு காளான்களாக உருவெடுக்கும் தற்குழப்பம் மிக்க தமிழ் அரசியல்வாதிகள் இந்த பேசுபொருள் தொடர்பில் மக்களுக்கான தெளிவுரையை வழங்க மாட்டார்கள் என்பதும் வெளிப்படை. எனவே தமிழர்கள் கட்சி மற்றும் கொள்கை பேதமின்றி இந்த சட்டவரைபு தொடர்பிலும் இதனை பிரயோகிக்க முயல்வதன் பின்னணி தொடர்பிலும் புரிதலை ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.

"குசினி இணக்கம்" என வர்ணிக்கபடும் நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிர்மாறான அமுலாக்கல்களை அனுமதிக்கும் சட்ட உட்பிரிவு, கனேடிய அங்கீகரிக்க பட்ட சலுகைகள் மற்றும் சுதந்திரம் குறித்த சட்ட வரைபுகளின் 33 வது பிரிவாகும். 70களில் ஜனநாயக முறையில் தெரிவுசெய்த மாகாண அரசு ஒன்று தவறான விதத்தில் சட்டவரைபுகளை நிறைவேற்றும் போது நீதிமன்றங்கள் தலையிடும் வழிவகைகள் மட்டுமே இருந்தன. மாறாக நீதிமன்றை புறக்கணித்து இயங்க அரசுக்கு இடமிருக்கவில்லை. எனவே 1980களின் முற்பகுதியில் மாகாண சபைகளுக்கான புதிய அரசியலமைப்பு கருதி 33வது பிரிவை முதலில் முன்மொழிந்தவர்கள் Peter Lougheedம் Merv Leitchம் ஆவார்கள். பின்னர் அரசியலமைப்பு மாநாடு ஒன்றில் இணக்கம் எதுவும் எட்டப் படாமல் தோன்றிய இக்கட்டான சூழலில் லிபரல் அரசின் நீதியமைச்சராக இருந்த Jean Chrétie, Roy McMurtry மற்றும் Roy Romanow ஆகியோர் வளாக சமையல் அறைக்குள் கூடி ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். ஆனால் அதனை நிறைவேற்றிய அப்போதைய பிரதமர் Pierre Trudeau Jean Chrétie உடன் 33வது பிரிவு குறித்து தொடர்ந்து முரண்பாடு கொண்டிருந்தார்.

அடுத்து உயர்நீதிமன்ற தீர்ப்பு குறித்த புரிதலை ஏற்படுத்திக்கொள்வது அத்தியாவசியமாகிறது. மாகாண முதல்வர் Ford சொல்கிற உண்மைக்கு புறம்பான அல்லது தரவுகளற்ற வியாக்கியங்களுக்கு அப்பால் ஒண்டாரியோ உயர் நீதிமன்ற தீர்ப்பில் பின்வரும் விடயங்கள் மிகுந்த விளக்கத்துடன் ஆராயப்படுகிறது. Ford தேர்தல் அறிவிக்கபட்டதன் பின்னதாக குயின்ஸ்பார்க்கில் கொண்டு வந்த டொரோண்டோ நகரசபை உறுப்பினர் குறைப்பு தீர்மானம் (Bill 5) ஜனநாயகத்துவத்துக்கு அப்பாற்பட்டது. அது எவ்விதமான உசாத்துணைகளையோ ஆய்வு முடிவுகளையோ அடிப்படையாக கொண்டமையாது எழுந்தமானமாக வெறுமனே வேட்பாளர்களின் சுதந்திர உரிமைகளையும் வாக்காளர்களின் உரிமைகளையும் நிராகரிக்கும் வகையில் அமைந்தது என்பதே தீர்ப்பின் சாராம்சம். இந்த தீர்ப்பு மாகாண சபைகள் நகரசபை தொடர்பாக கொண்டிருக்கும் அதிகாரத்துவம் தொடர்பிலோ உறுப்பினர் குறைப்பு விவாகரங்களில் மாகாண சபைக்கு இருக்கும் வலு தொடர்பிலோ தலையீடு செய்யவில்லை.

டொரோண்டோ மாநகர சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை தேர்தல் அறிவிக்கபட்ட பின் 25ஆக குறைக்கும் சட்டம் சுதந்திரத்துக்கும் அரசதிகாரம் அனுமதிக்கும் அடிப்படை சலுகைகளுக்கும் எதிரானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வெளியிட்ட சில மணிகளில் Ford மாகாண அரசு அதனை நிராகரித்து செயற்படவிருப்பதாக அறிவித்ததன் பின்னணிதான் என்ன? மாநகரசபை உறுப்பினராக இருந்த காலங்களில் ஆக்கபூர்வமான அல்லது குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஏதேனும் ஒரு தீர்மானம் ஒன்றை கூட செயற்படுத்தவோ முன்மொழியவோ முடியாத ஒருவராக இருந்த மாகாண முதல்வர் தனக்கு கிடைத்திருக்கும் உச்சபட்ச அதிகாரங்களை டொரோண்டோ மாநகரசபையில் கொட்டி தாளிதம் பண்ண முயல்வது காழ்ப்புணர்வின் பாற்பட்டதாகவிருக்கலாம். அல்லது ஒண்டாரியோ ஒரு தகுதியற்ற வெறுமனே சர்வாதிகார சிந்தனை போக்கில் மூழ்கித்திழைக்க முயலும் பழமைவாத அரசின் பிடிக்குள் நான்காண்டுகள் சிக்கி சீரழியவேண்டும் என்கிற துரதிஷ்டம் மிக்க விதியாக கூட இருக்கலாம்.

மாறாக அரசியல் பகுத்தறிவு சார்ந்து சிந்தித்தால் Ford இன் பிற்போக்கான அறிவிப்புகள் பலவற்றை எதிர்த்து கிளம்புகிற நீதிமன்ற வழக்குகள் அடுத்தடுத்து மாகாண அரசை அழுத்தம் மிக்க பாதாளத்துக்குக்குள் தள்ளுவதாகவே அமைகிறது. பெரும்பான்மை பலமுள்ள Ford செல்ல முயலும் பிற்போக்கான பயணத்தின் வேகத்தை மட்டுப்படுத்த நீதிமன்ற நடவடிக்கைகளே இப்போதைக்கு உதவும். மின்சார வாகன வரிவிலக்கு தொடர்பாக டெஸ்லா நிறுவனம் தொடர்ந்த வழக்கில் மாகாண அரசு பெரும் பின்னடைவை சந்தித்தது. அடுத்ததாக தற்போது வெளிவந்துள்ள தீர்ப்பும் மாகாண அரசை சஞ்சலமடைய வைத்துள்ளது. பாலியல் கல்வி குறித்த வழக்கும் பீதியை ஏற்படுத்துவதாகவே உள்ளது. நீதிமன்ற தீர்ப்பை அனுசரித்து மாகாண அரசு நடந்து கொண்டால் அது ஒரு பெரும்பான்மை அரசை அவமானகரமான நிலைக்கு தள்ளும் என Ford கும்பல் கருதியிருக்க இடமுண்டு. அத்தோடு திஷ்கஷ்பீ குறிப்பிடுவது போன்றல்லாது பழமைவாதிகளே வெறுக்கின்ற நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிர்மாறான அமுலாக்கல்களை அனுமதிக்கும் சட்ட உட்பிரிவை அரசதரப்பில் இருக்கும் எத்தனை பேர் சுயபுத்தியுடன் ஆதரிக்கிறார்கள் என்பது கடவுளுக்கே வெளிச்சம். மேலும் நீதிபதிகளை நியமிக்கப்பட்டவர்கள் என்றும் தன்னை மில்லியன் கணக்கான வாக்குகள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் எனவும் காட்ட முயல்வது மூன்றாம் உலக நாடுகளின் தரம் கெட்ட அரசியல் போக்கை உள்வாங்குவது போன்றதாகும். ஒண்டாரியோ மாகாணத்தில் முதன்முதலாக 33வது பிரிவு படி பழமை வாத அரசு உயர் நீதிமன்றை நிராகரித்து சர்வாதிகார போக்குடன் நடந்துகொள்ளும் சந்தர்ப்பத்தில் இது சரி செய்யமுடியாத ஒரு வரலாற்று தவறாக மாற்றமடையும்.

இனிவரும் நாட்களில் எதிர்கட்சிகள் பெரும்பான்மை அரசுக்கு தகுந்த காலாவகாசத்தை குயீன்ஸ் பார்க்கில் வழங்காமல் இழுத்தடிப்பதன் மூலம் நீதிமன்ற தீர்ப்பை நிராகரித்து செயற்பட முயலும் பழமைவாத அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் என எதிர்பார்க்கலாம். மத்தியில் இருக்கும் லிபரல் அரசு

உச்சபட்சமாக 33வது பிரிவை வாபஸ்பெறும் அதிகாரத்தை கொண்டிருக்கிறது. மாறாக 7 மாகாணங்களின் பெரும்பான்மையுடன் 33வது பிரிவு வாபஸ்பெறப்படலாம் என கருதுவோரும் உண்டு.

இப்போதிருக்கும் ஒரே கேள்வி இதுதான். மாநகரசபை உறுப்பினர் குறைப்பு நேரடியாக சிறுபான்மை பிரதிநிதித்துவம் மேல் கைவைக்கிறது. தமிழர்களின் அரசியல் பிரசன்னத்தை இது மறுதலிக்கிறது . அப்படியாயின் நீதிமன்ற தீர்ப்பு புறக்கணிப்பு தொடர்பாக திறந்த வாக்கெடுப்பு நடக்கும் பட்சத்தில்

தமிழ் பிரதிநித்துவம் என்பதை பகடையாக பாவித்து குயீன்ஸ்பார்க் சென்ற கனவான்களும் இன்ன பிற சிறுபான்மை இன பிரதிநிதிகளும் இதயசுத்தியுடன் வாக்களிப்பார்களா அல்லது Ford இன் தாளத்துக்கு ஆடும் பொம்மைகளாக இருப்பார்களா என்பதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒண்டாரியோவை சூழும் சர்வாதிகார மேகங்கள்?

பிந்திய இணைப்பு

- முதல்வர் Ford எப்பேர்ப்பட்ட தலைகீழ் முயற்சியின் மூலமேனும் உயர்நீதிமன்றை புறக்கணித்து தீர்மானம் மேற்கொள்ளும் நோக்கில் புதன்கிழமை மாகாண சபையை கூட்டிய போது நகரசபை உறுப்பினர் எண்ணிக்கையை துண்டாடும் நோக்கில் பிரேரிக்கப்பட்ட Bill 5 உயர் நீதிமன்ற தீர்ப்பு புறக்கணிப்புடன் கூடிய புதிய Bill 31 ஆக முன்மொழியப்பட்டது.
- பார்வையாளர்கள் பகுதியில் தயாராக இருந்த கலக நோக்கமுடைய வயோதிப எதிர்ப்பாளர்கள் இந்த தீர்மானம் குறித்தான விவாதத்தை திசை திருப்ப முயன்ற கட்டத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூலமாக விலங்கிட்டு வளாகத்துக்கு வெளியே அழைத்து செல்லப்பட்டனர்.
- இந்த அமுலாக்கத்தின் முதல் கட்ட வாசிப்பு சிறுபான்மை எதிர்க்கட்சியான NDPயின் பெரும்பாலானா உறுப்பினர்கள் மேசைகள் மீது தட்டி ஒலியெழுப்பியும் "அவமானம்" என கூச்சலிட்டும் சபையை விட்டு வெளியேற்றபட்ட நிலையில் 63க்கு 17 என்கிற உறுப்பினர்களின் பிரசன்னத்துடன் நிறைவேறியது.
- இந்த பிரேரணை சட்ட அமுலாக்கலாக மாற்றமடைய 8 தொடக்கம் 10 நாட்கள் தேவைப்படும் நிலையில் எதிர்வரும் இரண்டு கிழமைகளுக்கு 4 நாள் அமர்வுகளையே முன்னெடுக்க திட்டமிட்டிருந்தனர். மாநகரசபை 13ம் திகதி கூடும் நிலையில் அவர்கள் தங்கள் பங்குக்கு மீதமிருக்கும் சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய முயல்வார்கள்.


### டொரோண்டோ நகரசபை தேர்தலின் உண்மை நிலை என்ன ?

பாத்திர கடைக்குள் புகுந்த யானை போல் செயல்படும் மாகாண முதல்வரால் மாநகரசபை தேர்தல் மிகுந்த சிந்தனை குழப்பங்களை தோற்றுவித்துள்ளது. 25 மற்றும் 47 வட்டாரங்கள் கொண்ட இரண்டு அந்தங்களுக்குள் ஊசலாடும் இத்தேர்தல் வேட்பு மனு தாக்கல்கள் தேதிவாரியான குழப்பங்களை உண்டு பண்ணியுள்ளது. நகரசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட புதிய வேட்பாளர்கள் பலரும் வெளிப்படையாகவே குழம்பி போயுள்ளனர் . இன்னும் தெளிவாக சொல்வதானால் பல பழமைவாதிகளே இன்னும் 25 வட்டாரங்கள் அடங்கிய தேர்தலுக்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் ஒரு தேர்தல் 25 வட்டாரங்களுடன் நடந்தேறினால் அது எந்தவகையான ஒரு சமநிலையில் நகரசபை ரீதியாக கொண்டிருக்கும் என்பது கேள்வியே.

### FORD இன் நாடகங்கள் கொண்டு வரப்போகும் நீண்டகால தாக்கங்கள் என்ன ?

சர்வாதிகார போக்கை கையாளும் Ford 2019 தேர்தலில் மக்களுக்கு PC கட்சி மீதான வெறுப்புணர்வை அதிகப்படுத்தும் நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகிறார். சென்ற மாத பிரசுரத்தில் "வரம்பு மீறுகிறதா மாகாண அரசு?" என்கிற கட்டுரையின் கீழ் எதிர்வுகூறிய விடயங்கள் ஒவொன்றாக அரங்கேற தொடங்கியுள்ள நிலையில் மத்திய லிபரல் அரசு ஒண்டாரியோ மாகாண அரசின் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்த்து வரும் என்றே எதிர்பார்க்கலாம். இதுவே பெரும்பாலும் ஒண்டாரியோ வாக்காளர் க்ஷகளின் பழமைவாத கட்சி மீதான வெறுப்பலைக்கான ஆரம்ப புள்ளியாக இருக்கும். தவிர மாகாண அரசை புறக்கணித்து நேரடியாக நகரசபைகளுக்கு நிதி வழங்க ஆரம்பித்துள்ளமையால் மத்திய லிபரல் அரசு கடும்போக்கான முடிவுகளை எடுக்க வேண்டிய தேவையும் இல்லை.

நகரசபை உறுப்பினர் எண்ணிக்கை 25 ஆக இருந்தால் அடுத்ததாக ஆட்சியமைக்கும் அரசு விரும்பும் பட்சத்தில் பெரும்பான்மை பலத்துடன் தகுந்த எண்ணிக்கை மீள அறிமுகப்படுத்தப்படலாம். அத்தோடு Fordஇன் வழிமுறைகளை பின்பற்றி பிற மாகாணங்களும் நீதிமன்ற முடிவுகளை இரண்டாம் பட்சமாக்க எத்தனிக்கலாம்.




### நம்மவர் நிலை - மீள்பார்வை

தமிழ் மாகாணசபை உறுப்பினர்கள் இந்த வாக்கெடுப்பை ஒரு கட்சி சார்ந்த முடிவு என்கிற தொனிப்பொருளில் அணுக முயன்றால் அது அவ்வாறு இருக்கவேண்டும் என்கிற எந்த விதமான அறிவுறுத்தல்களும் முதல்வரால் வழங்கப்படவில்லை என்பதை Ford இன் பேச்சாளர் மீள உறுதிசெய்துள்ளார்.

சிறுபான்மை நலன்களுக்காக சிறுபான்மை வாக்குப்பலத்துடன் குயின்ஸ்பார்க் போனவர்கள் சிறுபான்மை அரசியலுக்கான சந்தர்ப்பங்களை நிராகரிக்கும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தால் மக்களுக்கான நேரம் அடுத்த தேர்தலுக்கு கதவு தட்டும் படலத்தின்போது ஆரம்பிக்கும் என்பதே வெளிப்படை உண்மை!•

Triden V Balasingam

அனைத்து விதமான உடல் பிரச்சனைகளுக்கும் பக்க விளைவுகளற்ற முழுமையான தீர்வுக்கும் நமது 5000 வருட பாரம்பரிய மருத்துவ முறையான ஆயுர்வேத மருத்துவமே சிறந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்




**Treatments Available For**
PSORIASIS, ECZEMA and all types of skin problems, ARTHRITIS, LOW BACK ACHE, SCIATICA, STROKE, GYNAECOLOGIC PROBLEMS, PCOS, MALE AND FEMALE INFERTILITY, KIDNEYSTONE, PILES, ULCER, HEADACHE, DIABETES, HYPERTENSION, OBESITY, HAIR FALL, DANDRUFF, SPECIAL TREATMENT FOR STRESS RELIEF & ALL KINDS OF MALE SEXUAL PROBLEMS.

இவ்விடத்தில் பாரம்பரிய கேரளா முறைப்படி இங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்ப சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது

கேரளா பாரம்பரிய முறை பஞ்சகர்மா சிகிச்சை, உடலில் உள்ள நச்சுத்தன்மைகளை நீக்கி புத்துணர்வு அளிக்கும் – ஷிரோதாரா சிகிச்சை, நாட்பட்ட தலைவலி, தலைமுடி உதிரல், போன்றவற்றை நீக்கவல்லது.

மற்றும் ஆயுர்வேத தைலங்களால் அனைத்து வித வாத நோய்களுக்கும் மசாஜ் சிகிச்சையளிக்கப்படும்.



VASISHTA AYURVEDIC

**Vasishta Ayurvedic Wellness Inc**
**2199 Midland Avenue, Unit# 1 Scarborough ON, M1P 3E7**
**For Appointments : (647) 532-1255**
**(416) 291-6730**
**www.vasishta.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொரோண்டோவில் அதிகரித்து வரும் துப்பாக்கி தொடர்பான வன்முறைகள்



கனடாவில் அதிக சனத்தொகை கொண்ட டொரோண்டோ பெரும்பாகம், அதில் உள்ளடங்கியுள்ள Ontarioஇன் தலைநகர் Toronto மற்றும் Brampton, Mississauga நகரங்களில் துப்பாக்கி வன்முறைகள், கொலைகள், வாகனவிபத்து சம்பவங்கள் என்பன அதிகளவில் இடம்பெறத் தொடங்கியுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இந்த சம்பவங்கள் மிக அதிக அளவில் இடம்பெறுகின்றன. இவற்றில் துப்பாக்கி தொடர்பான வன்முறைகள் பற்றி அலசுவதே இந்த கட்டுரையின் நோக்கம்.

2009 காலப்பகுதியில் அதிகரித்திருந்த துப்பாக்கி தொடர்பான வன்முறைகள், 2013 வரை படிப்படியாக குறைந்து, பின்பு 2015 இல் இருந்து தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. 2013—2016 காலப்பகுதிகளில் துப்பாக்கியை பயன்படுத்தி நிகழும் வன்முறைகள் அதிகம் இடம்பெற்ற நகரமாக Edmonton இருந்தது. பின்பு, அது Calgary நகராகவும், தற்போது Toronto நகராகவும் மாறியுள்ளது.

Toronto-இல் இவ்வருடத்தின் ஆரம்பம் முதல் செப்டம்பர் 2 வரையான காலப்பகுதியில் 285 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றன. இதில் 37 பேர் இறந்தனர். கடந்த ஆண்டு இடம்பற்ற மொத்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களின் எண்ணிக்கை 263 ஆக இருந்தது. இதில், 26 பேர் இறந்தனர். அத்துடன் Peel பிரதேச சபையின் கீழ் உள்ள Brampton, Mississauga பகுதிகளில் கடந்த ஆண்டு, 40 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றன. இந்த ஆண்டில் இம்மாதம் நான்காம் தேதிக்குள், 44 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 5 பேர் இறந்துள்ளனர். இந்த வன்முறைகளில் தாங்கள் பாதிக்கப்படுவோமோ என்ற அச்ச உணர்வு 55% சதவீத Toronto மக்களில் காணப்படுவதாக Ipsos கருத்துக்கணிப்பு காட்டுகிறது.

இந்த துப்பாக்கி தொடர்பான வன்முறைகளைக் கட்டுப்படுத்த இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை கவனிக்கலாம்:

- Toronto காவல்துறைக்கு 200 மேலதிக காவல்துறையினர் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர்.
- Toronto காவல்துறைக்கு Ontario மாகாணத்தினால் வழங்கப்படும் 76 millionக்கு மேலதிகமாக, துப்பாக்கி மற்றும் குற்றக் கும்பல்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு 4 வருட காலங்களுக்கு 25 million வழங்கப்படும்.
- இதில் 7.6 million தொகை ஒவ்வொரு நீதிமன்றங்களிலும், அரச தரப்பு வழக்கறிஞரின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு, இந்த குழுவினர் (SWAT Team), துப்பாக்கி தொடர்பான வன்முறைகளின் கீழ் கைது செய்யப்படுபவர், பிணையில் செல்லாது சிறையில் இருப்பதையும், மற்றுமொரு குழுவினர், பிணையில் செல்லுபவர்கள் கட்டுப்பாடுகளை மீறாத வகையிலும் கவனித்துக்கொள்ளும்
- மிகுதி 18 million தொகை - விசாரணை மற்றும் பகுப்பாய்வுகளுக்கான தொழில்நுட்ப மற்றும் விசேட கருவிகளை பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும்.

இதேநேரம் சமஷ்டி மற்றும் மாநகர சபைகளும் இந்த தொகைகளுக்கு இணையான தொகையை வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் பயனளிக்கக்கூடியவை என்பது பற்றி பல விமர்சனங்களும் உண்டு. குறிப்பாக ஷிகிஜி ஜிமீணீ அமைக்கப்படுவது தொடர்பான வழக்கறிஞர்களின் கருத்துப்படி, தற்போதுள்ள நடைமுறையிலேயே துப்பாக்கி வன்முறை தொடர்பில் கைதுசெய்யப்படும் ஒருவர், விதிவிலக்கான சூழ்நிலை இருப்பதாகத் தகுந்த காரணங்களோடு நிரூபித்தாலே அன்றி, பிணையில் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அப்படியிருக்க, அமைக்கப்படும் குழுக்கள் புதிதாக எதையும் செய்வதற்கில்லை என்று கூறப்படுகிறது.

GTAஇல் சட்டவிரோதமாக பெறப்படும் துப்பாக்கிகள் அதிகரித்துள்ளன. இவை பெரும்பாலும் அமெரிக்காவில் இருந்து கனடாவுக்கு கடத்தப்படுகின்றன. அத்துடன் பெரியளவான போதைப்பொருள் வலையமைப்பும் இங்கு உள்ளது. இவர்கள் தமது பெருமைக்காகவும், மற்றவர்களிடத்தில் பயத்தை ஏற்படுத்தவும் துப்பாக்கிகளை வைத்திருக்க விரும்புகின்றனர். அத்துடன் தமக்கான பிரதேச எல்லைகளை வகுத்துக் கொண்டு, துப்பாக்கி வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். உதாரணத்துக்கு Alexandra Park, Regent Park பகுதிகளைக் கூறலாம்.

அத்துடன், சட்டபூர்வமாகத் துப்பாக்கி வைத்திருக்க விரும்பும் ஒருவருக்கு அதனைப் பெற்றுக்கொள்வதில் பெரிய சிரமங்கள் இல்லை. 2016 இல் கனடாவில் சட்டபூர்வமான வகையில் துப்பாக்கி வைத்திருப்பதற்கான அனுமதிப்பத்திரம் உள்ளவர்களின் எண்ணிக்கை 2,076,840 ஆக இருந்தது. இவர்களுடன் அந்த வருடத்தில் 406,592பேருக்கு மேலதிகமாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. 2,223 அனுமதிப்பத்திரங்கள் மீளப்பெறப்பட்டன.

இந்த நிலையில், கைத்துப்பாக்கிகளை தடைசெய்வது பலன் தருமா என்று அலசப்படுகிறது. அண்மையில் Nanos நடத்திய கருத்துக்கணிப்பில் 48% வீதமான கனடியர்களும், Toronto மாநகர முதல்வர் John Toryயும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால் ON முதல்வர் Doug Ford மற்றும் Toronto காவல்துறை சபை தலைவர் Mike McCormack உட்பட சிலர், இதனால் மாற்றம் ஏற்படாது என்று தெரிவிக்கின்றனர்.

இந்த துப்பாக்கி தொடர்பான வன்முறைகளுக்கான சில காரணங்களை அலசும் போது, சமூக வலைத்தளங்களில் ஆரம்பிக்கும் பகை கூட, துப்பாக்கி மூலம் தீர்த்துக்கொள்ளப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜூன் 30ம் திகதி, 21 வயதான "Smoke Dawg" என்று அழைக்கப்படும் rapper ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரின் மரணத்துக்கு சமூக வலைத்தளமூடாக ஏற்பட்ட பகை காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அவர் அணிந்த "416" என்ற இலக்கங்களைக் கொண்ட சங்கிலியைத் திருடி அணிந்து, மற்றுமொரு rapper, You Tube இல் ஒளிப்பதிவொன்றை வெளியிட்டிருந்தார். இந்த ஆத்திரமூட்டும் செயலுக்கு Smoke Dawg இன் பதில் என்னவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதாம்.

இந்த வன்முறைகளுக்கான ஏனைய காரணங்களாக : தாங்கள் ஒதுக்கப்பட்டதான உணர்வு, தாழ்வு மனப்பான்மை, மற்றவர்களில் இரக்க குணம் இல்லாமை, திடீரென்று ஏற்படும் கோபம், தாங்கள் நியாயமான வகையில் நடத்தப்படவில்லை என்ற உணர்வு, தங்கள் நியாயத்தை கேட்க யாருமில்லை, இந்த பரந்த சமூகத்தில் தமக்கான ஒரு இடம் இல்லேயே என்ற உணர்வு, நம்பிக்கையற்ற தன்மை, குடும்ப பின்னணி, வேலைவாய்ப்பின்மை, இனரீதியிலாக பாகுபாடு, உடல் மற்றும் உள நலக்குறைவு என்பவற்றோடு வறுமை நிலையும் சேரும் போது, ஒருவர் குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கிறது. அத்துடன் மது, கஞ்சா மற்றும் இதர போதைப்பொருள் பாவனை இதற்கு வலுச் சேர்க்கிறது. அத்துடன் கிறிஸ்தவ, ஜூவிஸ், முஸ்லீம், கறுப்பினத்தர் மீதான வெறுப்பு காரணமாகவும் வன்முறைகள் இடம்பெறுகின்றன.

கடந்த காலங்களில் வன்முறைகளைக் கட்டுப்படுத்தக் காவல்துறையினால் திடீரென்று வழிமறித்து பரிசோதிக்கப்படும் Carding செயற்பாடு நடைமுறையில் இருந்தது. இதில் பெரும்பாலும் ஆபிரிக்க கனடியர்களே காரணமின்றி பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. அத்துடன் Toronto Anti-Violence Intervention Strategy (TAVIS) <https://nowtoronto.com/news/premier-tells-ford-to-ante-up-on-gun-crime/> கீழ், பொதுமக்களிடையே பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அதுவும் தேவையற்ற அழுத்தத்தை மக்களுக்கு கொடுப்பதாகக் கூறி நிறுத்தப்பட்டது.

ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின் போதும் முந்திய ஆட்சியைக் குறை கூறி, புதிய திட்டங்களைக் கொண்டு வரும் தலைவர்கள் — அவை மக்களுக்கு சரியான முறையில் பயன்படுகின்றனவா என்பதையும் கவனிக்கவேண்டும். மக்களே, விழித்திருங்கள்!•

**தர்ஷினி உதயராஜா**

## இந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம் ?

மது, போதை போன்றவற்றுக்கு அடிமையானவர்களுக்கான தகுந்த சிகிச்சை, வறிய நிலையை மேம்படுத்துவதற்கான வழிகள், வீட்டு வசதி, மனநலன் தொடர்பான பிரச்சனைகளுக்கான ஆதரவுத் திட்டங்கள், தொழிற் பயிற்சி, இளையோர் குற்றக்கும்பல்களில் இருந்து வெளியேறுவதற்கான திட்டங்கள் அனைத்தும் இன்னும் சிறப்பாக செயற்படுத்தப்பட வேண்டும் அதற்கு போதுமான நிதியுதவி அளிக்கப்படவேண்டும்.

ஒருவர் துப்பாக்கியை வைத்திருப்பதற்கான அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்கும் போது, அவரின் கடந்த 5 ஆண்டுகால செயற்பாடுகள் மட்டும் பார்க்கப்படாமல், ஆயுள் முழுவதுமான செயற்பாடுகள் ஆராயப்படவேண்டும். துப்பாக்கி விற்பனை நிலையங்கள் தாங்கள் வைத்திருக்கும் துப்பாக்கிகளின் விபரம், கொள்வனவு செய்தவரின் முழு விபரங்களைப் பேணவேண்டும்.

துப்பாக்கி தொடர்பான வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் அதற்கான கடுமையான தண்டனைகளை நீண்ட காலத்துக்கு வெளியில் வரமுடையாதபடி அனுபவிக்குமாறு சட்டங்கள் கடுமையாக்கப் படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜன பலய கொழம்பட்ட:

# ராஜபக்ஷக்களுக்கிடையிலான குத்து வெட்டு!


கொழும்பை முடக்கும் போராட்டமொன்றை 'மக்கள் சக்தி கொழும்புக்கு (ஜன பலய கொழம்பட்ட: #JanaBalayakolambata)' எனும் பெயரில் கூட்டு எதிரணி (மஹிந்த அணி) கடந்த 05ஆம் திகதி நடத்தியது. குறைந்தது பத்து இலட்சம் மக்களையாவது நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கொழும்புக்கு அழைத்து வந்து, 'அரபு வசந்தத்துக்கு (Arab Spring)'இணையான ஆர்ப்பாட்டப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்பதே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும், அவரது மகன் நாமல் ராஜபக்ஷவினதும் திட்டம். ஆனால், ஆர்ப்பாட்டப் போராட்டம் ஆரம்பித்த காணத்திலேயே தோல்வி முகத்தைக் காட்டியது. சீரான ஒழுங்கமைப்பு இன்மை மற்றும் போதை ஆட்டத்தினால் கொழும்பை நோக்கி அழைத்து வரப்பட்டவர்கள் அலைக்கழிக்கப்பட்டார்கள். என்ன நோக்கத்திற்காக கொழும்பை முற்றுகையிட நினைத்தார்களே, அந்தக் காரணங்கள் ஏதும் வெளிப்படுத்தப் பாடாமலேயே, கூட்டம் கலைந்து சென்றுவிட்டது.

## ராஜபக்ஷ அதிகார யுத்தம்

உண்மையிலேயே இந்தப் போராட்டம் அரசாங்கத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நோக்கில் நடத்தப்பட்டதா?, என்று கேள்வி எழுப்பினால், 'இல்லை' என்றே பதில் எழுத வேண்டியிருக்கும். ஏனெனில், இது, அடிப்படையில் ராஜபக்ஷக்களுக்கிடையிலான அதிகாரத்தை அடையும் போட்டியின் விளைவினால் நடத்தப்பட்ட ஒன்று. மஹிந்தவை முன்னிறுத்திக் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்து ராஜபக்ஷக்களும் கூட்டு எதிரணியில் இணைந்திருந்தாலும், ஒவ்வொரு ராஜபக்ஷவுக்கும் தனிப்பட்ட ரீதியில் அதியுச்ச அதிகாரத்தை அடைவதே இலக்கு. அதன்போக்கில், தனித்தனியான திட்டங்களோடும் இயங்கி வருகிறார்கள்.



2015 ஜனாதிபதித் தேர்தலில் அதிகாரத்தை இழந்த ராஜபக்ஷக்கள், மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே அதிகாரத்தை மீண்டும் அடையும் கட்டத்தை நோக்கி குறிப்பிட்டளவு நகர்ந்து வந்திருக்கிறார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான தொடர் இழுபறி அரசாங்கத்தின் மீதான நல்லெண்ணத்தை நாளாந்தம் குறைந்து வரும் நிலையில், அதனை ஒரு பொருட்டாக வைத்து தென்னிலங்கையை தங்களின் பக்கத்தில் ஒருங்கிணைக்க முடியும் என்று ராஜபக்ஷக்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். குறிப்பாக, ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு வெளிநாட்டுக்கு தப்பிச் சென்ற பஷில், நாடு திரும்பியதும், மஹிந்தவை முன்னிறுத்திக் கொண்டு கூட்டு எதிரணியை நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு சாதாரண மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்கிற கட்சியை ஆரம்பித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அளவுக்கு வளர்த்தெடுத்த விதத்திலும் அவரின் கையே ஓங்கியிருந்தது. குறிப்பாக, கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன (கூட்டு எதிரணி) தென்னிலங்கை முழுவதும் பெற்ற வெற்றியும் அதனைப் பதிவு செய்தது. தேர்தல் முறையில் காணப்பட்ட குழப்பங்களும்— வட்டார முறைமையும் பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு மறைமுகமாக சற்று வலுச் சேர்ந்திருந்தாலும், ஒட்டுமொத்தமாக நோக்கினாலும் அதிகூடிய வாக்கினைப் பெற்ற கட்சியாக எழுந்து நின்றது. இதுவெல்லாம் சேர்ந்து அதிகாரத்தின் அருகாமைக்கு வந்துவிட்டோம் என்கிற நினைப்பு ராஜபக்ஷக்களிடம் குத்து வெட்டுக்களை அரங்கேற்ற வைத்திருக்கின்றது.



## நாமலின் எதிர்கால அச்சுறுத்தல்

மஹிந்தவின் ஒரே இலக்கு, 2025ஆம் ஆண்டு நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதே. அதற்காக யாரையும் அவர் புலிகொடுக்கத் தயாராக இருக்கின்றார். கூட்டு எதிரணி ஆரம்பித்த காலம் முதல், அதன் ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவே என்பது தென்னிலங்கை பூராவும் பரப்பப்பட்ட ஒன்று. சிறந்த நிர்வாகியாகவும், நாட்டின் ஒருமைப்பாட்டை காத்தவராகவும் கோட்டாபயவை அடையாளப்படுத்தும் நோக்கில், 'வியத்மக' எனும் பெயரில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அமைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதில், புத்திஜீவிகள், இராஜதந்திரிகள், முன்னாள் இராணுவத் தளபதிகள், பௌத்த பிக்குகள், பெரு முதலாளிகள், அரசியல்வாதிகள் என்று தென்னிலங்கையின் கடும் போக்காளர்களில் அதிகமானவர்கள் அங்கம் வகித்தார்கள். கண்டி முதல், நாட்டின் பல பகுதிகளிலும் அந்த அமைப்பின் கூட்டங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு கூட்டமும் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் கோட்டபாய என்கிற விடயத்தை அழுத்தமாக முன்வைத்து வந்தன. ஆனால், அந்த அமைப்பின் கூட்டங்களையும், கோட்டாபயவின் பின்னால், திரளும் கூட்டத்தினையும் மஹிந்தவோ, நாமலோ ரசிக்கவில்லை. அது, நாமலின் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தலான ஒன்றாக அவர்களினால் உணரப்பட்டது.

இன்றைக்கு சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களின் பெரும்பான்மையானவர்களை பொதுஜன பெரமுன பிடித்துக் கொண்டிருக்கின்றது. அத்தோடு, அரசாங்கத்துக்குள் காணப்படும் இழுபறி நாட்டு மக்களை எரிச்சலடைய வைக்கின்றது. இந்தக் காரணங்களின் வழி நின்று விடயங்களை அணுக மஹிந்தவும், மகனும் முனைகிறார்கள். அது, 2020இல் ஆட்சியைப் பிடிப்பதைக் காட்டிலும், 2025இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது சார்ந்திருக்கின்றது. ஆனால், பொதுஜன பெரமுன வழி, கூட்டு எதிரணியை மக்களிடம் பெருமளவு கொண்டு சேர்ந்த பஷிலுக்கு, 2020இல் தான் பிரதமராக வேண்டும் என்பதே பிரதான இலக்கு. அதன்போக்கில், விடயங்களை அவர் கையாண்டு வந்தார். எனினும், பஷிலை கட்சியை பலப்படுத்தும், பிரபலப்படுத்தும், ஒழுங்கமைக்கும் கட்டத்திற்கு அப்பால், ஆட்சி அதிகாரக் கட்டிலில் அனுமதிக்கும் மனநிலைக்கு மஹிந்த என்றைக்குமே வந்ததில்லை. தன்னுடைய தோல்விக்கு, பஷில் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களும் காரணம் என்று அவர் இன்னமும் நம்புகிறார். அப்படியான நிலையில், ஒரு கட்சியின் முகமாகவோ, ஆட்சியின் முகமாகவோ பஷிலை நிறுத்திக் கொள்வதை மஹிந்த விரும்பவில்லை. அத்தோடு, பஷிலிடம் அதிகாரம் செல்லும் பட்சத்தில், அவர் ஒக்டபஸ் போல, எல்லாவற்றையும் பற்றிக் கொண்டு, தன்னையும், மகனையும் அகற்றிவிடுவார் என்றும் அஞ்சுகிறார். அதன்போக்கில்தான், கடந்த இரண்டு வருடங்களாக பெரும் மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த பஷிலை கைவிட்டு, கொழும்பை முடக்கும் போராட்டத்துக்கான பொறுப்பை இம்முறை நாமலிடம் கொடுத்தார். இதனைடுத்து, பஷில் வெளிநாடு சென்றுவிட்டார்.

போராட்டம் ஒட்டுமொத்தமாக மஹிந்தவையும் நாமலையும் முன்னிறுத்தியே ஒருங்கிணைக்கப் பட்டது. தவிர்க்க முடியாமல் கோட்டாபய போராட்டத்தில் சிறுதி நேரம் கலந்து கொண்டாலும், ஒழுங்கமைப்பு மற்றும் திட்டமிடல்களில் அவரின் பங்கு இருக்கவில்லை. அவரின் 'வியத்கம' அமைப்பும், இந்தப் போராட்டம் குறித்து அதிக ஆர்வம் காட்டவில்லை. அத்தோடு, பெரும் போராட்டமொன்றை நடத்துவதற்கு இது பொருத்தமான காலம் இல்லை என்பதை கோட்டாபயவும், பஷிலும் மஹிந்தவிடம் பலமுறை எடுத்துக் கூறிய போதும், அவர் அதனைக் கருத்தில் எடுக்கவில்லை. நாமலின் தனித்த பலத்தைக் காட்டுவதற்கும், தன்னுடைய காலத்துக்குப் பின்னர் நாமலின் பின்னால் கூட்டு எதிரணியின் முக்கியஸ்தர்கள் திரள வேண்டும் என்பதையும் கணக்கிட்டே போராட்டத்தைத் திட்டமிட்டார். ஆனால், போராட்டம் பெரும் ஏமாற்றத்தைக் அவருக்கு கொடுத்திருக்கின்றது.

செப்டம்பர் 05ஆம் திகதி கொழும்பை முடக்கும் போராட்டத்தை முன்னெடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின் ஜனாதிபதி பதவி

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான சூழல் இல்லை. அதற்கு அமெரிக்கா அனுமதிக்காது என்கிற தொனிப்பட செய்தியொன்று வெளியிடப்பட்டது. குறிப்பாக, அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை மேற்கோள் காட்டியே அந்தச் செய்தி வெளியிடப்பட்டது. ஆனால், அந்தச் செய்திக்கு இன்னொரு பக்கம் இருப்பதாகவும், கோட்டாபயவுக்கு ஆதரவானவர்கள் கருதுகிறார்கள். அதாவது, மஹிந்த ராஜபக்ஷவே, குறித்த யாழ் பத்திரிக்கை ஆசிரியரைக் கொண்டு இவ்வாறான செய்தியை வெளியிட வைத்திருக்கிறார் என்று. அந்தச் செய்தியின் ஊடாக கோட்டாபயவை ஜனாதிபதி வேட்பாளராவதற்கு அமெரிக்கா அனுமதிக்காது, ஆகவே மாற்றுத் தெரிவொன்றுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது என்ற தோற்றப்பாட்டினை உருவாக்குதலாகும். இதனை, உரையாடலொன்றின் போது, வெளிநாட்டு தூதரக அதிகாரியொருவரும் சில ஊடகவிய லாளர்களிடம் பகிர்ந்திருக்கின்றார். ராஜபக்ஷக் களுக்கிடையிலான வெட்டுக் குத்து, சிலவேளை ரணிலின் பெருங்கனவான ஜனாதிபதிப் பதவியில் அமர்த்திவிடுமோ என்பதுதான், கூட்டு எதிரணியிலுள்ள முக்கியஸ்தர்கள் சிலரின் இப்போதைய கவலை!



போவதாக கூட்டு எதிரணி அறிவித்தது முதல், போராட்டம் நடத்தப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் வரையில், போராட்டம் இடம்பெறும் இடங்கள், நேரம் பற்றி எந்தவொரு விடயத்தையும் வெளிப்படுத்தவில்லை. ஒருவகையில் இனம்புரியாத ஜனவசியத்தை இதன்மூலம் ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று நாமல் நம்பினார். ஒவ்வொரு நாளும் அவர் கூட்டிய ஊடக மாநாடுகளும், அவரின் அறிவித்தல்களும் அதன்போக்கில்தான் இருந்தன. அரபு வசந்தத்துக்கு ஒப்பான ஒன்றை தான் ஒருங்கிணைப்பதாக அவர் மனசார நம்பினார். ஆனால், நடந்தது வேறு. போராட்டத்தை ஆரம்பித்து, கொழும்பு நகர வீதிகளை மக்கள் கூட்டத்தினால் நிரப்பி, இரவு முழுவதும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில், புரட்சி அடையாளம் பெற்று தலைவனாக வேண்டும் என்பதே அவரது பெருங்கனவு. ஒருவித நாயகத் தோற்றத்தோடு எழு விரும்பினார். ஆனால், அந்தக் கனவில், போராட்டங்களில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியினர் ஆடிய போதை ஆட்டமும், செய்த சில்லறைத்தனங்களும் ஊடகங் களில் வெளிப்பட்டு கல்லை எறிந் திருக்கின்றன. போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் 80க்கும் அதிகமானவர்கள் அளவுக்கு மீறி போதை, உணவு ஒவ்வாமை உள்ளிட்ட காரணங்களினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் இறந்துவிட்டார். இதுதான், போராட்டத்துக்கு அடுத்த நாள் ஊடகங்கள் முழுவதும் செய்திகளாக வெளியாகியிருக்கின்றன. கிட்டத்தட்ட 'சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது' என்கிற எரிச்சலான நிலைக்கு மஹிந்த ஆளாகியிருக்கிறார்.•

**புருஜோத்தமன் தங்கமயில்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான் கானின் நயா பாகிஸ்தான்

இம்ரான் கான் முன்னால் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக கிரிக்கெட் குழுத் தலைவர். ஒகஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றவர். உலக கிரிக்கெட் கோப்பையை பாகிஸ்தான் ஒரேயொரு தடவையே வென்றது. இவரது தலைமையிலேயே பாகிஸ்தான் அவ் வெற்றியைப் பெற்றது. சிறந்த வேகப் பந்து வீச்சாளர். நன்றாக துடுப்பெடுத்துடுவார். இவரது முன்னால் மனைவி இளவரசி டயனாவின் சிநிகேதி. இலண்டனில் கல்வி கற்ற காலங்களில் இவர் ஒரு பிளே போயாகத்தானிருந்தார் என ஊடகங்கள் கூறுகின்றன. இவர் மூன்று தடவைகள் திருமணம் செய்தவர்.

Pashtuns, Pathans Kan, Kogan என்ற வம்சாவளியில் ஒக்ரோபர் 5, 1952ல் இம்ரான் அவதரித்தார். இவரது மூதாதையர் மொங்கோலியாவில் தோன்றி பின்னர் ஈரான், ஆப்கான், பாகிஸ்தான் பிரதேசங்களுக்கு புலம் பெயர்ந்தனர் என நம்பப்படுகின்றது. பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள லாகூர் நகரில் பிறந்து, அங்கேயே கல்வி கற்று, பின்னர் இங்கிலாந்தில் உயர் தரம் கற்று, ஒகஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி கற்றார். Worcestershire மற்றும் ஒக்ஸ்போர்ட் துடுப்பெடுத்தாட்ட அணிகளுக்காக விளையாடினார். தனது 18வது வயதில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக விளையாடத் தொடங்கினார். சகல துறை வீரரான இவர் ஓய்வு பெற்ற போது மொத்தமாக 3807 ஓட்டங்களையும், 362 விக்கெட்டுக்களையும் பெற்றிருந்தார். சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் 3709 ஓட்டங்களையும், 182 விக்கெட்டுக்களையும் பெற்றிருந்தார்.

2002ல் முதற் தடவையாக Tehreek-e-insaf கட்சி சார்பாக வெற்றி பெற்று பாரளுமன்றம் செல்கின்றார். கடந்த தேர்தலில் இவரது இக் கட்சி பிரதான எதிர்க்கட்சியானது. இவ் வருடம் நடைபெற்ற தேர்தலில் இவரது கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இம்ரான் கான் பிரதமரானார்.

தேர்தலில் பல வாக்குறிதிகள் வழங்கப்பட்டன. செல்வந்தர்கள் அதிக வரி கட்ட வேண்டும். ஊழல் ஒழிக்கப்படும். பயங்கர வாதம் நிறுத்தப்படும். ஏழை விவசாயிகளுக்கு உபரிப் பணம் வழங்கப்படும். சிறுபான்மையினர்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாழலாம். அனைவருடனும் இணைந்து செயல்படுவோம். இந்தியாவுடன் நட்பாக இருப்போம். இவை நிறைவேற்றப்படுமா?

இவரை தலிபான் கான் என மேற்கத்திய ஊடகங்கள் வர்ணிக்கின்றன. ஜிகாட் பல்கலைக்கழகமே இவரது தேர்தலுக்கு நிதி உதவி வழங்கியது. அமெரிக்கா மற்றும் நேட்டோவுக்கு எதிராக கடுமையான கருத்துக்களைக் கூறியுள்ளார். பாகிஸ்தானின் பணத்தின் பெறுமதி குறைந்து கொண்டு செல்கின்றது. கடந்த காலங்களில் சீனாவிடமிருந்து 60 பில்லியன் டொலர்களுக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளது. 1980களின் பின் பகுதியிலிருந்து சர்வதேச நாணய நிதியம் 12 தடவைகள் பாகிஸ்தானுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. தற்சமயம் இம்ரான் கான் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சீனா, சவூதி அரேபியா போன்ற நாடுகளையே நாட வேண்டிய நிலையுள்ளது. டானால்ட் ரம்பை அறிவற்றவர், நன்றியில்லாதவர் (ignorant and ungrateful எனத் திட்டியுள்ளார். தலிபானுடன் பல தடவைகள் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்தார். அமெரிக்காவையும் பகைத்துவிட்டார். பாகிஸ்தான் இராணுவத்தை இவரால் பகைக்க முடியாது. தலிபானின் கட்டளைகளுக்கு இவர் செயல்பட வேண்டிய நிலையில் உள்ளார்.

பாராளுமன்றத்தில் முன்னால் பிரதமர் சரீப் கட்சி அல்லது குடும்பம் பல ஆசனங்களைக் கொண்டுள்ளது. அதே போல் பூட்டோ குடும்பமும் பல ஆசனங்களைக் கொண்டுள்ளது. அனுபவமற்ற இம்ரான் கான் என்ன செய்வார்?


மோடியையும் முஸ்லீம் எதிர்ப் பாளர் என கடந்த காலங்களில் விமர்சித்துள்ளார். சர்வதேச தலைவர்களை தனது தேர்தல் வெற்றிக்காக விமர்சித்து வந்துள்ளார். வெற்றியும் பெற்று விட்டார். நிழலில் இருந்து நிஜத்துக்கு வந்துள்ளார். நயா (Naya) அதாவது புதிய பாகிஸ்தான் அமைப்பேன் எனக் கூறி பதவியும் ஏற்றுவிட்டார். முன்னைய பிரதமர்கள் போல் அல்லாது, ஆடம்பரமற்ற அன்றாட வாழ்விற்கு தன்னைத் தயார்படுத்தியுள்ளார். நல்ல விடயம். பாதுகாப்பு விடயத்தில் மட்டும், இவர் பாதுகாப்பு படைகளின் ஆலோசனைகளை கேட்க வேண்டும். குண்டு துளைக்காத வாகனம் போன்றவற்றை கட்டாயம் பயன்படுத்த வேண்டும். இது தவிர்க்க முடியாது.

Asia Pacific Group (APG) பாகிஸ் தானுக்கு, சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட பணத்தில் மோசடி நடைபெற்றதாக கூறியுள்ளது. பாகிஸ்தான் மேலும் எதிர்பார்க்கும் 12 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன், சீனாவிற்கான கடனையடைக்க பாவிக்கப்படலாம் என இவ் அமைப்பு அச்சம் தெரிவித்துள்ளது. சில்க் பாதையை மீள அமைக்க முயற்சிக்கின்றது. இப் பாதையானினால் அனைத்து நாடுகளும் பயன் பெற்றன. பி.ஆர்.ஐ Belt and Road Initiave – BRI இதில் பெல்ட் என்பது நிலத்தையும், றோட் என்பது கடலையும் குறிக்கும். சீனா இரு வழிகளிலும் விரிவாக்கம் பெற விரும்புகின்றது. இதற்காக பாகிஸ்தானிலும் சீனா முதலீடு செய்துள்ளது. தற்போது பாகிஸ்தானின் மிக நெருக்கமான நண்பர்கள் சீனா மற்றும் சவூதி அரேபியா. இம்ரான் கான் சர்வதேச நாணய நிதியத்துக்கு என்ன பதில் கூறப்போகின்றார்?

புதிய பாகிஸ்தான் அல்லது இவர் நினைக்கும் பாகிஸ்தான் அமைக்க இவர் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளார். உள்ளே பாகிஸ்தான் இராணுவம், சீனா, அருகில் இந்தியா, வெகு நெருக்கமாக தலிபான் மற்றும் முஸ்லீம் தீவிரவாதக் குழுக்கள், கடன் கொடுத்த சர்வதேச நாணய நிதியம், பணத்துடன் காத்திருக்கும் சவூதி அரேபியா, கோபத்துடன் அமெரிக்கா, சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கும் ருசியா இவர்கள் அனைவரையும் இவர் சமாளிப்பாரா?

இம்ரானுக்குத் தெரியும் இது ஒன்றும் கிரிக்கெட் அல்ல என்பது. ஆடுதளம் முழுவதும் முட்கம்பிகள் உள்ளன. ஓடி விக்கெட் எடுப்பதும் கடினம், அடித்து ஓட்டங்கள் எடுப்பதும் சிரமம். பார்வையாளராக மாறிவிடுவாரோ என்பதே அச்சம் தரும் கருத்து. •

ரதன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MARKHAM

# WARD - 5

## நீங்கள் உங்கள் வாக்கை எனக்கு அளியுங்கள்...

## நான் உங்களுக்குத் தந்த வாக்கை நிறைவேற்றுவேன்.



மே 1988 இலிருந்து தொடங்குகிறது எனது கனடிய வாழ்க்கை நான் Georges Vanier secondary School இலும் பின்னர் Seneca College இலும் எனது கல்வியை கற்றுக்கொண்டேன், அதன் பின்னர் முழுநேரமாக வேலை செய்துகொண்டிருந்தாலும் எனது சமூகப்பணிகளிலும் 1990களிலேயே ஈடுபடக்கூடியதாயிருந்தது.

பின்னர், 2001 ம் ஆண்டு பெப்பிரவரியில் எனது ஊடகப்பணி கனடியத் தமிழ் வானொலி மூலம் தொடங்கியது. சமூகத்தின் எல்லாத் தரப்பினரோடும் பழகும் வாய்ப்பினால் விரைவில் எமது சமூகமும் என்னை அரவணைத்துக்கொண்டது.

TVi, CMR இன் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றியிருந்தேன்.

எமது சமூகம் சம்பந்தமான பணிகள் எந்தவித தடங்கலுமின்றித் தொடர்ந்தன. எந்த ஒரு சமூக நிகழ்வானாலும் நான் எனது பங்களிப்பைச் செய்துகொண்டே இருந்தேன்.

மே 2007 முதல் மார்க்கம் நகரின் 5ம் வட்டாரத்தில் வசிக்கும் நான், நகரசபை உறுப்பினராகத் தெரிவானால் எனது வட்டாரத்தில் வாழும் மக்களின் கோரிக்கைகள், விண்ணப்பங்கள், குறைபாடுகள் என்பவற்றைச் செவிமடுத்து உரிய நடவடிக்கைகளை எடுக்க அயராது உழைப்பேன்.

**SRI**
**SIVASUBRAMANIAM**
FOR CITY COUNCILLOR

**www.sriforward.com**

647-929-3991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## யாழ்ப்பாண நகர மேயருக்கு கனடாவில் வரவேற்பு



யாழ்ப்பாண நகர மேயர் இமானுவேல் ஆனோல்ட் மரியாதை நிதித்தமாக ரொறன்ரோ நகர மேயரைச் சந்தித்தார். யாழ்ப்பாணத்தில் மற்றும் சிறிலங்காவில் வனையப்பட்ட கைவினைப் பொருட்கள் அடங்கிய ஒரு பரிசுக் கூடையை மேயர் ரோறிக்கு அன்பளிப்பாக வழங்கினார். மேயர் ரோறி ரொறன்ரோ நகரம் பற்றிய நூல் ஒன்றைப் பரிசாக வழங்கினார்.

இந்தச் சந்திப்பில் மாநகர சபை உறுப்பினர் நீதன் சாண், கனேடிய தமிழர் பேரவையின் நிறைவேற்று இயக்குநர் டான்ரன் துரைராசா மற்றும் கனேடிய தமிழர் பேரவையின் வடக்கு கிழக்கு மேம்பாட்டு திட்டத்தின் பொறுப்பாளர் பிரசாந்த் ஸ்ரீசந்திரமோகன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## ஒருத்தி இசைத் தட்டு வெளியீட்டு











கனடா வாழ் வானொலிக் கலைஞரும் நாடக மற்றும் திரைப்பட நடிகருமான பிஎஸ். சுதாகரனின் தயாரிபபிலும் இயக்கத்திலும் வெளியாகவுள்ள

"ஒருத்தி" என்னும் முழு நீள திரைப்படத்தின் பாடல் இசைத் தட்டு வெளியீட்டு விழா கனடா ஸ்காபுறோ நகரில் உள்ள குயின் பெலஸ் மண்டபத்தில் ஓகஸ்ட் 24 ம் திகதி நடைபெற்றது.

ஊடக நண்பர்கள், நாடக மற்றும் திரைப்படக் கலைஞர்கள் இசைக் கலைஞர்கள் என பலர் கலந்து கொண்ட இந்த விழாவில் திரைப்படததிற்கான பாடல்களைப் பாடியுள்ள "சுப்பர் சிங்கர்" புகழ் பாடகி ஜெசிக்கா யூட்ஸ், "செந்தூரா" புகழ் லக்சுமி சிவனேஸ்வரலிங்கம் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

வானொலி மற்றும் இசைக் கலைஞர் திரு எம்பி. கோணேஸ் பாடல் இசைத் தட்டை மேடையில் கலைஞர்கள் நடிகர்கள் கூடியிருக்க வெளியீட்டு வைத்தார்.

Ps Suthakaran production/direction - Oruththi (ஒருத்தி) - Tamil Movie Audio release -

Amazing music and songs. - well done all the singers & Lyrics writers.

Song1- "Mekangal Puthu Mazhai"- Sathyaprakash D & Sahithiya Gajaruban(SriLanka)
Lyrics: Ku Karthik

Song2 -"Kalakangal Ean Vendum Penne"
Jessica Judes & Charlotte N Kalanesan ( England)
Lyrics: Vadivarasu Pradeepan

Song3- " Athisaya Poove Azhakiya THeevay"
Devan Ekambaram & Luksimi Sivaneswaralingam
Lyrics: Kirunthuja Srikanth & Ku Karthik

Song4 - Nila Ondru Vennilavu
Geethiyaa Varman
Lyrics: Ps Suthakaran Panchadcharam - Ku Karthik

Check the songs in this link
http://www.oliparappu.com/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் நிற்பவர் யாரோட ஆள்?!



புலம்பெயர் அரசியல் எதை நோக்கிச் செல்கிறது என்று அங்கலாய்ப்பவர்களும், அனுதாபக் கண்ணோடு நோக்குபவர்களும், ஐயகோ என்று அபலக்குரல் எழுப்புபவர்களும் ஒரு பக்கம். தமிழினம் எக்கேடு கெட்டாலென்ன என்று, தாங்களும் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களும் என்றவகையில் தம்போக்கில் தமிங்கிலராக வாழும் தமிழர்கள் இன்னுமொரு பக்கம். யார் என்ன சொன்னால் நமக்கென்ன என்ற போக்கில் தம் சுயநலன் சார்ந்து மட்டுமே செயற்பட்டு தமக்கான தனிப்பட்ட வருவாய்க்காக, புகழுக்காக, விளம்பரத்திற்காக அல்லது அரசியல் ஆதாயங்களுக்காக சூட்சுமமான அரசியல் காய் நகர்த்தலில் ஈடுபடும் தனிநபர்கள் பிறிதொரு பக்கமென, வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் அரசியல் நகர்வுகள், குறிப்பாக கனடாவில் பெருமளவில் தமிழர்கள் செறிந்து வாழும் ரொறன்ரோ, மார்க்கம், மிசிசாகா, பிராம்டன், மொன்றியல் போன்ற பெருநகரங்களில் வாழும் தமிழர்களின் அரசியல் நகர்வுகள், எதிர்கால தமிழ்—கனடியர்களின் ஒன்றுபட்ட அரசியல் பலத்தைக் கேள்விக்குறியாக்கி வருகின்றன.

எதிர்வரும் ஒக்ரோபர் 22ம் திகதி, ரொறன்ரோ பெரும்பாகத்தின் பல நகரசபைகளிலும் தேர்தல் நடைபெறவிருக்கிறது. நகரபிதாவையும், நகரசபை உறுப்பினர்களையும் தெரிவுசெய்யும் இந்தத் தேர்தலில், கல்விச்சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

வருகிற வருடம் 2019 ஒக்ரோபர் 21ம் திகதி, கனடாவின் 43வது பொதுத்தேர்தல் நாடளாவிய ரீதியில் நடக்க இருக்கிறது. இதில் மூன்று இளம் கட்சித் தலைவர்கள் தங்கள் பலத்தைப் பரீட்சிக்க இருக்கிறார்கள். லிபரல் கட்சியில் ஜஸ்ரின் ரூடோ, கன்சவ்வேட்டிவ் கட்சியில் அன்ரூ சியர், என்.டி.பி. கட்சியில் ஜக்மீட் சிங் ஆகிய மூவரும், ஏனைய புளொக் குபேக்குவா மற்றும் பசுமைக் கட்சியின் தலைமைகள் உட்பட, ஆட்சியைக் கைப்பற்ற களத்தில் இறங்குகிறார்கள்.

இவ்வருடம் இடம்பெறும் நகரசபை உறுப்பினர் மற்றும் கல்விச்சபை உறுப்பினர் தேர்தல்களில், பல தமிழர்களும் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர். இதுபோன்று, வருகிற வருடம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவும் பல தமிழர்கள் தங்களைத் தயார்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தேர்தலில் போட்டியிடும் பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒரு தமிழர் தகுதியானவரா, தகுதரம் கொண்டவரா என்பதைவிட, ஆள் நம்மவரா, நமக்கு ஏதும் லாபமிருக்கிறதா, நமது எதிரி தரப்புக்கு ஆதரவு கொடுத்துவிட வாய்ப்பிருக்கிறதா என்பதையே பல சக்திகளும் ஆராய்ந்து வருவது துயரமாக உண்மை. தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகப் பகிரங்கமாகவே உரிமை கோரிக்கொள்ளும் இரண்டு மூன்று பிரதான அமைப்புக்களும்கூட, தமிழர்களின் பிரதிநிதிகள் தங்கள் சகாக்களாக, சகபாடிகளாக, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றுபவர்களாக, இன்னும் சொல்லப்போனால் தாங்கள் சொல்வதற்கெல்லாம் 'ஆமா' போடும் கைப்பொம்மைகளாக, வெறும் அடிவருடிகளாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதும், களமிறக்குவதும், பின்னேயிருந்து பல திருகுதாளங்கள் மூலம் தங்கள் சகாக்களையே வெற்றிபெற வைத்துவிட படாதபாடுபடுவதும் வேதனை மிகுந்த புதிய அத்தியாயங்களாக கனடாவில் காட்சிப்படுத்தப் படுகின்றன.

இன்னும் ஒருபடி மேலேபோய், தங்களது சொந்த தொடர்பாடல்களையும், தனிப்பட்ட செல்வாக்கையும், அத்துடன் தமிழர் அமைப்பு என்பதால் கிடைக்கின்ற கௌரவ அந்தஸ்தையும்கூட, தங்களதுசகபாடிகளுக்கும் அடிவருடிகளுக்கும் மட்டுமே பாவிக்க முயற்சிப்பதும் அதிகரித்து வருகிறது. ஒரு தமிழருக்கு போதிய அறிவும் அனுபவமும் அரசியல் ஈடுபாடும் இருக்கிறதா என்பதை விட, அந்தத் தமிழர் தங்களுக்கு 'கூஜா' தூக்குவாரா என்பதிலேயே இந்த அமைப்புக்கள் அதிகரித்த கவனம் செலுத்துவது வருத்தத்திற்குரியது மட்டுமல்ல, மிகுந்த கண்டனத்துக்குரியதுடன், மிக ஆபத்தான தமிழின நகர்வுகளாகவே கருதப்பட வேண்டியன.

இது தவிர, இந்த அமைப்புக்கள் தங்களுக்குள் ஒருவித அடிப்படை புரிந்துணர்வையும் சகிப்புத் தன்மையையும் வளர்க்கத் தவறி வருவதால், ஒரு அமைப்பு களத்தில் இறக்கும் நபரை ஏனைய அமைப்புக்கள் தங்களுக்கு எதிரானவர் என்ற வகையில் பார்ப்பதும் செயற்படுவதும்

## எது ஜனநாயகம்?

யாழ் மண்ணில் வாழும் தமிழறிஞர் அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அவர்கள் எழுதிய ஜனநாயக விழுமியங்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரையொன்றில், ஜனநாயகம் பற்றி இவ்வாறு எழுதுகிறார்:

'ஜனநாயகம், தன்னிறைவு கொண்ட அறநெறி முறைமையல்ல,(not self sufficient moral system). அதாவது ஜனநாயக முறைமைகளைப் பயன்படுத்துகையில், தீர்வுகள் தானாக வந்துவிடும், புரையோடிய பிரச்சினைகள் மறைந்துவிடும் என்று நம்புவதற்கில்லை.

ஜனநாயகம் ஒரு ஊடகம். அறநெறிக்கும் மனித உரிமைக்கும் எதிராக பெரும்பான்மையினரது பராக்கிரமத்தினால்; சிறுபான்மையினர் உரிமைகளை இழக்கவைக்கக்கூடிய ஓட்டைகளைத் தன்னகத்தி;த கொண்டது அது. மக்களின் வாக்;குரிமைகளைப் பெற்று முகிழும் அரசியல் சார் ஜனநாயகத்தின் (Political democracy) உயிரோட்ட வளர்ச்சிக்கு மூலவிசை, சமூகநீதி சார் ஜனநாயகம் (Social democracy)" என்று எழுதுகிறார்.

ஆக, ஜனநாயகம் என்பது ஒரு தீர்வு அல்ல, அது ஒரு முறைமை மட்டுமே என்கிறார் ஆசிரியர்.

இந்த முறைமையை, ஜனநாயக விழுமியங்களுக்கும் மனித மாண்புகளுக்கும் சட்ட முகாந்திரங்களுக்கும் அமைவாக, சிறப்பாகப் பாவிக்கின்ற, அதற்கேற்ப நடக்கின்ற, அந்த முறைமையில் வாழுகின்ற ஒரு இனமாக எமது தமிழினத்தை வளர்ப்பதில் அனைவரும் இணைந்து கைகோர்ப்போம் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்நிலையில், தேர்தலில் போட்டியிடும் பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒரு தமிழர் தகுதியானவரா, தகுதரம் கொண்டவரா என்பதைவிட, ஆள் நம்மவரா, நமக்கு ஏதும் லாபமிருக்கிறதா, நமது எதிரி தரப்புக்கு ஆதரவு கொடுத்துவிட வாய்ப்பிருக்கிறதா என்பதையே பல சக்திகளும் ஆராய்ந்து வருவது துயரமாக உண்மை.**

அவதூறுகளை அள்ளி வீசுவதும், எப்படியாவது கழட்டிவிடத் துடிப்பதும் கவலைக்குரியது. அரசியல் சார்ந்த பொது விடயங்களை மட்டுமன்றி, தனிநபர் காழ்ப்புணர்வை அதிகரித்து, அந்நபரின் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம், பெற்றோர் உறவினரின் குறை நிறைகளை சமூகவலைத்தளங்களில் அள்ளிவீசுவதும், உண்மைக்குப் புறம்பான திரிபுச் செய்திகளைப் பரப்புவதும், அத்துடன் பொய்களையும் வதந்திகளையும் புனைகதைகளையும் கூட உருவாக்கி, அந்நபரின் நற்பெயருக்குக் களங்கள் ஏற்படுத்துவதும் வருத்தத்திற்குரியது. புனைபெயர்களில் உருவாக்கப்படும் மின்னஞ்சல்களைப் பாவித்து, தனிநபர் சார்ந்த உண்மைக்குப் புறம்பான தகவல்களை, ஆயிரமாயிரம் ஈமெயில்களுக்கு இரகசியமாக அனுப்பி, அந்நபருக்கு அவப்பெயரைச் சம்பாதித்துக் கொடுப்பதன்மூலம் அந்நபருக்கான அரசியல் அஸ்தமனத்திற்கு இரவுபகலாகச் செயற்படுகிறார்கள் அற்பர்கள் பலர். அத்துடன் தங்களை சமூகவாதிகள் என்று தாங்களே அழைத்துக்கொள்ளும் சிலரும்கூட, தங்களது சொந்த ஈமெயில்களைப் பாவித்து, நடுநிலை அல்லது பொதுநிலை சார்ந்து பயணிக்க எத்தனிக்கும் தமிழர்களையும், தாம் சார்ந்த அமைப்பிற்கு அல்லது கருத்திற்கு ஆதரவு வழங்காதவர்களையும் கடித்துக் குதறுவதும், பொய் வதந்திகளைப் பரப்புவதும் நிறையவே நடக்கிறது.

இவ்வருடம் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள நகரசபை மற்றும் கல்விச்சபை தேர்தல்களில் போட்டியிடும் தமிழ் பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே கல்லெறிகளும் வதந்திக் கணைகளும் தொடுக்கும் வேலையில் பலர் இறங்கியிருப்பதை சமூக வலைத்தளங்களும் தனியார் இணையத் தளங்களும் கட்டியம் கூறுகின்றன. அடுத்த வருடம் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் தோற்ற எத்தனிக்கும் தமிழர்களுக்கும் இரகசியமான இழுத்துவிழுத்தும் வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. கனடியத் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்கள் என்று தங்களை இனம்காட்டும் குழுமங்கள், தங்கள் செயற்பாடுகளையும், தங்களது அமைப்பிலுள்ள அங்கத்தவர்களின் முன்னெடுப்புக்களையும், தகுதரம்கொண்டவையாக, கனடிய சட்டதிட்டங்களுக்கும், நியமங்களுக்கும், மனிதத்திற்கும் இழுக்கு ஏற்படுத்தாக வகையில் மேற்கொள்ள வழிகோலுவது அவசியம். முரண்நிலை தவிர்த்து, நேரடிச் சந்திப்புக்களை ஏற்படுத்தி, கௌரவமான உரையாடல்களை உருவாக்கி, தனிநபர் வசைபாடல்களையும் குடும்ப விடயங்களையும் தவிர்த்து, கருத்துக்களுடன் மட்டும் மோதி, நல்ல விழுமியங்களைப் பேணி, ஜனநாயக விதிகளை மதித்து, தனியான தமிழ் அமைப்புக்களைவிட ஒட்டுமொத்த தமிழினத்தின் பெயர் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்வதும் செயற்படுத்துவம் அவசியம்.

ரொறன்ரோ பெரும்பாகத்தையும் அதன் சுற்றுப்புற பிராந்தியங் களையும் உள்ளடக்கிய பிரதேசத்தில், சுமார் இரண்டரை இலட்சத்திலிருந்து 3 இலட்சம் ஈழத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று கணிப்பிடப்படுகிறது. எனவே கனடியப் பல்லினச் சமுதாயக் கட்டமைப்பில், கனேடிய தேசிய நீரோட்டத்திற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும் ஒரு பலமான சக்தியாக தமிழ் சமூகம் வளர்ச்சி பெறவேண்டியது அவசியம்.

சுமார் 80க்கு மேற்பட்ட மொழி பேசுபவர்கள் வாழ்கின்ற ரொறன்ரோ பெரும்பாகத்தில் ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக முதன்மையாகப் பேசப்படுகிற சுமார் பத்து மொழிகளில் தமிழும் ஒன்று என்கிறது அரசதரப்பு தகவல்கள். இந்தத் தரவுகளைப் பின்புலத்தில் ஆராய்ந்தறிந்த பல அரசியல் பிரமுகர்கள், தமக்கான ஆதரவைப் பலப்படுத்திக்கொள்ள தமிழர் விழாக்களைப் பயன்படுத்துகிறார்களே தவிர, தமிழ் பிரமுகர்களை, காத்திரமான பங்காளிகளாக மாற்றவேண்டும் என்பதில், அத்தனைதூரம் ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை.

ஜனநாயகம் என்று நாம் மிக அதிகமாகப் புகழ்ந்துகொண்டாலும், இதற்குப்பின்னே நடப்பதெல்லாம், சுயநல அரசியல் நாடகங்கள் தான் என்பதை, அரசியல் ஆய்வாளர்கள் கூட ஒத்துக்கொள்ளவே செய்கிறார்கள்.•






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✓Elect

# Regional Councillor

## ஒரே ஒரு தமிழ் வேட்பாளர்

# நிரான் ஜெயநேசன்

- ✓ முன்னுதாரனத்திற்குரிய மனிதாபிமானி
- ✓ காவல்த்துறையின் கண்ணிய செயற்பாட்டாளர்
- ✓ நேர்மை நெறியாளர், மக்கள் தொண்டர்.
- ✓ முதல் 15 வயது வரை ஈழத்திலும், 15ல் இருந்து 20 வயது வரை தமிழகத்திலும் கல்வி கற்று 20 வயதில் கனடா வந்த இளைஞர்.
- ✓ ரொறன்ரோவில் அதிக சவால்கள் கொண்ட பகுதியை தனது சேவைப் பகுதியாகத் தேர்ந்தெடுத்து அந்த சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி, அதனால் ரொறன்ரோ காவல்த்துறை கல்லூரியில் விசேட விரிவுரை நிகழ்த்திய பெருமையாளர்.



**மார்க்கம் நகரிற்கான ஒரே ஒரு தெரிவு ...!**

# NIRAN JEYANESAN

**REGIONAL COUNCILLOR CANDIDATE, CITY OF MARKHAM**


*Someone who cares!*

905-350-1274 | info@niranjey.ca

Authorized by the CFO for the Niran Jeyanesan Campaign



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மேரி கொல்வினின்
# A PRIVATE WAR
# திரைப்படமாகின்றது





தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உலகளாவிய அளவில் வெளியில் எடுத்து சென்றவரும் இறுதி இன அழிப்பின் சாட்சிகளில் ஒருவருமான மேரி கொல்வின் அம்மையாரின் வரலாற்றைப் பேசும் "A Private War" திரைப்படமாகின்றது

நவம்பரில் திரைக்கு வரும் இத் திரைப்படம் நிச்சயம் தமிழீழம் குறித்த ஒரு பரவலான கவனத்தை உலகளவில் ஏற்படுத்தும் என்று நம்பலாம்.

ஏனெனில் கொலிவூட் திரைப்படங்களின் ரசிகப் பரப்பும் அதன் பின்னுள்ள அரசியலும் அத்தகையது.

மேரி கொல்வின் அமெரிக்காவில் பிறந்து பத்திரிகையாளராக பணியாற்றி பின்னர் பிரித்தானியாவின் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் பணியாற்றியவர் மேரி கொல்வின். இவர் சிரியாவில் செய்தி சேகரிப்பதற்காக கிளர்ச்சி படைகளின் கட்டப்பாட்டுப்பகுதிக்குள் தற்காலிகமாக அமைக்கப்பட்ட ஊடக மையத்தில் தங்கியிருந்த போது சிரிய ராணுவத்தின் ஆட்லெறி தாக்குதலின் பின்னர் நடந்த ரொக்கற் தாக்குதலில் சிக்கி இறந்தார் .

1956ம் ஆண்டு ஜனவரி 12ம் திகதி அமெரிக்காவில் பிறந்த இவர் 1985 ஆண்டிலிருந்து த சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் ஒரு இதழியலாளராக பணியாற்றினார். சிரியாவின் கிளர்ச்சி தொடர்பானசெய்திசேகரிப்பிலீடுபட்ட போது 2012ம் ஆண்டு பெப்ரவரி 22 இல் கொல்லப்பட்டார்.

மானுடவியலில் தனது முதல் பட்டத்தை 1978 இல் பெற்றுக் கொண்ட மேரி கொல்வின் ஓராண்டு கழித்து பொலிஸ் ரிப்போட்டராக நியுயோர்க் யுனைற்றட் பிறஸ் இன்ரநாசனலில் இணைந்து பணியாற்றினார். பின்னர் 1985 பிரித்தானியாவின் த சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் இணைந்து பணியாற்றினார்.முதலில் மத்திய கிழக்கு விடயங்களுக்கான விசேட செய்தியாளராக நியமிக்கப்பட்டு பின்னர் 1995 தொடக்கம் உலக விடயங்களை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டார்.

1986 இல் இவரே முதல் முதலில் முகமட் கடாபியை நேர்காணல் செய்தவரென்பது குறிப்பிடத்தக்கது. மத்திய கிழக்கு விடயங்களில் சிறப்பு தேர்ச்சி கொண்டவரான மேரிகொல்வின் செச்சினியா, கொசோவோ, சியராலியோன், சிம்பாவே, கிழக்கு தீமோர், இலங்கை போன்ற யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் மிக ஆபத்தான சூழ்நிலைகளில் பணியாற்றியிருக்கிறார்.

1999ம் ஆண்டு கிழக்கு தீமோரில் யுத்தப்பிரதேசத்தில் அகப்பட்டிருந்த 1,500 பெண்களையும் சிறுவர்களையும் ஐ.நா அமைதிப்படையுடனிருந்து

> In 16 April 2001, It was 10pm, on the forward defence line of the Sri Lankan army at Parayanlankulam, about 3A miles from the Madhu road junction
>
> I began to shout
>
> "Journalist! Journalist! American! USA!"
>
> A soldier sighted on the sound and fired. This army was not taking prisoners.– Marie Colvin.
>
> biographical drama of American war correspondent,

> One of the most celebrated war correspondents of our time, Marie Colvin is an utterly fearless and rebellious spirit, driven to the frontline of conflicts across the globe to give voice to the voiceless.
>
> Director: Matthew Heineman
>
> Writers: Marie Brenner (based on the Vanity Fair article "Marie Colvin's Private War" by), Arash Amel
>
> Stars: Rosamund Pike, Jamie Dornan, Stanley Tucci | See full cast & crew »
>
> முன்னோட்டம் இது.
>
> https://www.youtube.com/watch?v=WQH1kRgaLfY&feature=youtu.be

தனது அறிக்கையிடல்கள் மூலம் உலகின் கவனத்தை ஈர்த்து காப்பாற்றியிருக்கிறார்.

சர்வதேச பெண்கள் ஊடக அமைப்பின் இதழியலின் தற்துணிவுக்காக வழங்கப்படும் சர்வதேச விருதை கொசொவோ செச்சினிய முரண்பாட்டு சூழலை வெளிக்கொண்டுவந்ததற்காக பெற்றுக் கொண்டார்.இவர் பல ஆவணப்படங்களையும் தயாரித்துள்ளார் அதில் அரபாத் பற்றி அவர் தயாரித்த ஆவணப்படம் முக்கியமானது.

2001ம் ஆண்டு ஏப்ரல் 16ம் திகதி விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று செய்தி சேகரித்து மீண்டும் இலங்கை ராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழையும் போது 'பத்திரிகையாளர் பத்திரிகையாளர்' என்ற அழைப்பின் பின்னான இலங்கை இராணுவத்தின் ஆர்.பி.ஜீ தாக்குதலினால் தனது இடது கண்ணை இழந்த மேரி கொல்வின் அதனை மறைப்பதற்கு கறுப்பு துணி அணியும் வழக்கத்தையும் கொண்டிருந்தார்.

இலங்கையில் நடைப்பெற்ற உள்நாட்டுயுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சரணடைந்தது தொடர்பான விடயங்களில் ஐ.நா, இலங்கை அரசு மற்றும் விடுதலைப்புலிகள் இடையேயான தகவல் பரிமாற்றப் பணியை இறுதி நேரத்தில் மேற் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது முயற்சியால் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சரணடைந்தனர் என்றும் பின்னர் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பதும் சர்ச்சைக்குரிய விடயமாகியிருந்தன. இலங்கையரசுக்கு எதிரான போர் குற்றசாட்டில் இவர் ஒரு முக்கியமான சாட்சியாகக் கருதப்பட்டார். மிகச் சர்ச்சைக்குரியதான சனல்4 தொலைக்காட்சியின் 'இலங்கையின் கொலைக்களம்' ஆவணப்படத்தில் இவரது தகவல்களும் பதிவாக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பெப்ரவரி 22 மேரி கொல்வின் சட்டவிரோதமாக சிரியாவுக்குள் நுழைந்து செய்தி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார். சிரிய அரசாங்கம் பத்திரிகையாளர்களை கிளர்ச்சி நடைபெறும் பகுதிகளுக்குள் அனுதிக்கவில்லை சிரியாவின் பாபாஅமீர் நகரத்தில் கிளர்ச்சியாளர்களின் தற்காலிக ஊடக மையத்திலிருந்து தனது ஒலி,ஒளிபரப்பினை 21ம் திகதி பி.பி.சி, சி.என்.என, சனல்4 மற்றும் ஐ.ரி.என் சேவைகளில் தோன்றி வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.;.தனது சற்றிலைட் தொலைபேசியின் உதவியுடன் தனது சேவையை தொடர்ந்த போது சற்றிலைட் தொலைபேசி சிக்கல்களை பின்தொடர்ந்து சிரிய ராணுவத்தால் நடத்தப்பட்ட தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார். தான் தங்கியிருந்த கட்டடம் தாக்கப்படுவது தெரிந்து தப்பி ஓடும் போது அவர் கொல்லப்பட்டாரென்று செய்திகள் தெரிவிக்கின்றன. இவரோடு விருது பெற்ற பிரெஞ்சு நாட்டின் புகைப்படப்பிடிப்பாளர்ரெமிஓச்லினும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மிகத்துணிச்சலுடன்முரண்பாட்டுப் பகுதிக்கு சென்று தங்கியிருந்து செய்திகளை சேகரித்து உலகுக்கு உண்மைகளைக் கொண்டுவரும் மேரி கொல்வின் போன்றவர்கள் தாம் பணிபுரியும் துறைக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் பணியாற்றியிருப்பதை பத்திரிகையாளர்கள் முன்மாதிரியாக கொள்ள வேண்டும். இன்று களத்துக்கு செல்லாமல் செவிவழி செய்திகளை தொலைபேசிகளில் கேட்டு தகவல் ,தரவு மற்றும் நேர்த்தி பிறள்வுகளுடன் செய்தி சேகரிக்கும் வியாபாரிகளின் நவீன யுகத்தில் உண்மையைத்தேடும் தனது முயற்சியில் மேரி கொல்வின் தன் உயிரை நீத்திருந்தது முக்கியமான விடயமாகும்.மேரி கொல்வின் எந்தவொரு சூழ்நிலைக்குள்ளாலும் தப்பித்து வந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் காத்திருந்த உலகத்துக்கு அவரது இழப்பு ஈடு செய்யமுடியாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூரின் இராஜதானியும் நல்லைக் கந்தனும்...!

ஈழத்தில் தமிழர்கள் வாழ்ந்த வரலாற்றின் எச்சங்களாகவும், அவர்கள் சிறப்புடன் ஆட்சிசெய்த வரலாறுகளையும் எடுத்துக்காட்டுகின்ற தொன்மையான சின்னங்களைக் கொண்டதாக யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் இன்றும் கலைப் பாரம்பரியத்துடன் காட்சிதருகின்றது.

நல்லூர் இராசதானி என்பது, அரசர்களுக்குரிய வதிவிடத்தைக் குறிப்பதுடன், அரசர்களின் செயற்பாடுகள் மற்றும் அவர்களது வாழ்க்கை முறைகளை ஒன்றிணைக்கும் இடமாகவும் காணப்படுவதால்,அத்தகைய ஒரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகவே இன்றைய நல்லூரும் விளங்குகின்றது. அந்த வகையிலேயே வரலாற்று ஆசிரியர்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தையும், அதனைச் சூழ உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டும்.

இலங்கையில் பிரித்தானியரின் வருகைக்கு முன்னர், அன்று காணப்பட்ட யாழ்ப்பாண இராட்சியம், கண்டி இராட்சியம், கோட்டை இராட்சியம் ஆகிய மூன்று அரசுகளிலும் தனித்துவமும், பண்பாடுகளும் கொண்டதாக விளங்கிய, யாழ்ப்பாண இராட்சியத்தின் ஆட்சி முறைகளும் நகர வடிவமைப்புக்களும், மக்களின் வாழ்க்கை முறைகளும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தன. அந்த வகையில் தமிழ், சைவப் பாரம்பரியம் ஒன்று யாழ்ப்பாணத்துக்கென இருந்து வந்தாலும், இலங்கையின் அரச பரம்பரை வரலாற்றில் அதன் பெருமையானது, சுதந்திரத் தமிழரசின் தோற்றத்தோடு மேலும் சிறப்படைந்திருந்தமையைக் காணலாம்.

யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களிலும், பிற வரலாற்று மூலங்களிலிருந்தும் இதன் சிறப்புக்களை அறிய முடிகிறது. அவ்வரலாற்று மூலங்கள் ஒவ்வொன்றும் இவ்வரசின் தலைநகர் 'சிங்கை', 'யாப்பாபட்டுன', 'நல்லூர்' என வேறுபட்ட தகவல்களைத் தருகின்றன. ஆயினும் இவ்வாறான தலைநகர் மாற்றங்கள் என்பன வேறுபட்ட தகவல் களை உடையதாக இருந்தபோதிலும்கூட, தற்போது நல்லூரைத் தவிர ஒரு இராசதானிக்குரிய கட்டிட அழிபாடுகள் யாழ்ப்பாணத்தில் வேறு எந்த ஒரு பிரதேசத்திலும் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.


இத்தகைய சிறப்பும்,அழகும் வாய்ந்த நல்லூர் இராசதானியின் அமைப்புப் பற்றியும், நல்லூர் நகரம் உருவாக்கப்பட்டது பற்றியும், யாழ்ப்பாண வைபவமாலையில்.

*"நாலு மதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்கா விடுவித்து மாட மாளிகையும், கூட கோபுரங்கைளயும், பூங்காவையும், பூங்காவின் நடுவிலே ஸ்நான மண்டபமும். முப்படைக்கூபமும் உண்டாக்கி அக்கூபத்தில் யமுனா நதி தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு நீதிமண்டபம், யானைப்பந்தி, குதிரை லாயம், சேனாவீரர் இருப்பிடம் முதலியன கட்டுவித்து கிழ்திசை வெய்யிலுக்குகந்த பிள்ளையார் கோயிலையும், மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






*கோயிலையும், தென்திசைக்கு கைலாய பிள்ளையார் கோயிலையும், வடதிசைக்கு சட்ட நாதேஸ்வரர் கோயில் தையல்நாயகி அம்மன் கோயில் சாலை விநாயகர் கோயிலையும் அமைப்பித்தனர்"*

என்னும் வர்ணனையின் மூலம், யாழ்ப்பாண நகரத்தின் அழகு விபரிக்கப்படுகின்றது. இதன்படி, முப்புடைக் கூபம் எனக் குறிப்பிடப் பட்டது ப வடிவில் அமைந்த கேணியையே ஆகும். இது யாழ்ப்பாணத்தைக் கடைசியாக ஆண்ட சங்கிலியனின் மாளிகை அமைந்திருந்த சங்கிலித்தோப்பு வளவில் உள்ளது. இது சிங்கையாரியச் சக்கரவர்த்தி காலத்தில் கட்டப்பட்டது என யாழ்ப்பாண வைபவ மாலை குறிப்பிடு கின்றது. அரச பரம்பரையினரின் பெண்கள் நீராடுவதற்காகவே இந்தக் கேணி அமைக்கப்பட்டது.

இதனை அமைத்ததும், இந்தியாவில் உள்ள புனிதமான யமுனா நதியின் நீர் கொண்டு வந்து கலக்கப்பட்டதால் இது; யமுனா ஏரி எனப்பட்டது. யமுனா ஏரி,சங்கிலியன் தோப்புக்கு கிழக்குப் புறமாக தற்போது அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சின் எல்லையுடன் "பானா" வடிவத்தில் அமைந்து காணப்படுகின்றது

தனித் தமிழர் ஆட்சி ஒன்றை நிலைநாட்டிய யாழ்ப்பாண அரசின் வரலாற்றுச் சின்னங்களுக்கு ஆதாரமாக இன்றும் நல்லூர்பிரதேசத்தில் காணப்படும், யமுனா ஏரி, சங்கிலியன் தோப்பு,அமைச்சரவை மண்டபம், வீரமாகாளி அம்மன் கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில், கைலாசப்பிள்ளையார் கோயில், பண்டாரக்குளம், சட்டநாதர் கோயில், பூதவராயர் கோயில் ஆகியவற்றுடன் சென்ஜேம்ஸ் தேவாலயமும் நல்லூர் இராஜதானியின் அரசபெருமையை எடுத்துக் காட்டும் சின்னங்களாக இன்றும் விளங்குகின்றன.

அன்று மிடுக்குடன் ஆட்சிபுரிந்த தமிழரசர்கள் நல்லூரில் அரசிருக்கைகள் அமைத்து கோட்டை கொத்தளங்களுடன் ஆட்சி நடத்தியமையை யாழ்ப்பாண வரலாறு கூறும் இலக்கியங்களின் ஊடாக அறியமுடிகின்றது.

சிங்கை பரராசசேகரன் ஆட்சியின் போது (கி.பி 1478ல்) யமுனா ஏரியைக் கட்டுவித்தான். யாழ்ப்பாண இறுதிஅரசன் சங்கிலியன் 1619ல் கைது செய்யப்பட்டு கோவாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டான்.அவன் நினைவாகவே சங்கிலித்தோப்பு என அழைக்கப் படுகிறது. கோபுரத்தோடு கூடியஅரசமாளிகையின் தலைவாசல் இன்றும் காணப்படுகிறது.

சங்கிலித்தோப்பு அல்லது பூதத்தம்பி வளைவு என்பது யாழ்ப்பாணஅரசின் கடைசி மன்னனான சங்கிலியனின் மாளிகை அமைந்திருந்த இடம் எனக் கருதப்படுகின்றது. தற்காலத்தில் பல்வேறு பயன்பாடுகளுக்கு உட்படுத்தப் பட்டுவிட்ட இந் நிலப் பகுதியின் வரலாற்று முக்கியத்து வத்துக்கான குறியீடுகளாக இருப்பவை, சங்கிலித் தோப்பு வளைவு எனக் குறிப்பிடப் படுகின்ற கட்டிட மொன்றின் வாயில் வளைவும், அதற்குப் பின்புறமாக உள்ள யமுனா ஏரியும் ஆகும். இதற்கு அருகிலேயே சிறிது தூரத்தில் யாழ்ப்பாண அரசர்களால் அமைக்கப் பட்ட சட்ட நாதர் சிவன் கோயிலும் காணப்படுகின்றது. இது தவிர யாழ்ப்பாண அரசர் காலத்தில் நல்லூர் கந்தசாமி கோயில் அமைந்திருந்த இடமும், ஆரம்பத்தில் இவ்விடத்துக்கு அருகிலேயே இருந்தது.

இத்தனை பெருமைக்கும் மகுடம் வைத்தாற்போல் விளங்கும் நல்லூர் முருகன்கோயிலின் வருடாந்த உற்சவம் நெருங்கும் வேளையில் நல்லூர் கந்தனின் அற்புதங்களை நாங்கள் நினைத்துப் பார்க்கின்றோம்.

நல்லூர் இராஜதானியுடன் தொடர் பட்டபலநினைவுச் சின்னங்களைக் குறிப்பிடும்போது சென்.ஜேம்ஸ் தேவாலயம் பற்றிக் குறிப்பிடாமலும் இருக்க முடியாது. அந்த அளவுக்கு நல்லூருக்கும் இந்தக் கிறிஸ்தவ தேவாலயத்திற்கும் இடை யிலான தொடர்பு இன்றைய வரலாற்றுக்கு முற்பட்ட தமிழர் இராட்சியத்துடனான தொடர்பாகும்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போத்துக்கேயத் தளபதியான பிலிப் டி ஒலிவேராஇ 1620ல் அரசின் தலை நகரத்தை யாழ்ப்பாணத்துக்கு மாற்றிய போது தொன்மையும் பெருமையும் வாய்ந்த நல்லூர்முருகன் கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கும்படி உத்தரவிட்டான். இதிலிருந்து பெறப்பட்ட கற்களைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் அவர்களுக்கான கோட்டை கட்டுவதற்குப் பயன் படுததப்பட்டது. மதமாற்றங்களை மேற்கொண்டுவந்த போர்த்துகேயர் அன்று புகழ் பெற்றிருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் முருகன் ஆலயம் இருந்த இடத்தில் சிறிய கத்தோலிக்க தேவாலயமொன்றை அமைத்தனர்;. அவ்வாறு அவர்களால் திருத்தியமைக்கப்பட்ட தேவாலயமே இன்று செம்மணி வீதியில் காணப்படும் சென்.ஜேம்ஸ் தேவாலயமாகும்.

யாழ்ப்பாண அரசு போர்த்துக் கேயரால் கைப்பற்றப்பட்ட பொழுது, யாழ்ப்பாண அரசின் இறுதிக்காலத்தில் நல்லூரிலிருந்த மிகப்பெரிய கோவில் இதுவேயென்பது போத்துக்கேயருடைய குறிப்புக்களிலிருந்து தெரிய வருகிறது.

யாழ்ப்பாண அரசு பின்னர் 1658 இல் ஒல்லாந்தர் கைக்கு மாறியதும் கத்தோலிக்க தேவாலயமாக இருந்த ஆலயத்தை புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ தேவாலயமாக மாற்றினர் டச்சுக்காரரின் மதகுருவாக விளங்கிய போல் டேயிஸ் பாதிரியாரின் நூலில் இத் தேவாலயம் பற்றிய குறிப்புக்களும் அதன் வரைபடமும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவே செம்மணிவீதியில், கிட்டு பூங்காவுக்கு அருகாமையில் தற்போதுள்ள புனித ஜேம்ஸ் தேவாலயமாகும்.

இவ்வாறு ஈழத் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களை ஆக்கிரமித்தும், தமிழ் மக்களின் பண்பாட்டின் சின்னங்களையும் அழித்து மதவெறியுடன் ஆட்சி அதிகாரத்தையும் நிலை நாட்டிவந்த அன்னியர் ஆட்சியிலும் கந்தக் கடவுளின் அருளாட்சி இருந்ததால், முருகனின் ஆலயத்தையோ அவனை வழிபடு வோரையோ போரத்துக்கேயராலோ அல்லது ஒல்லாந்தராலோ அழித்துவிட முடியாமல் போனமை அந்த நல்லைக் கந்தனின் அற்புதமாகும்.

ஆனால், இத்தனை ஆக்கிரமிப்புக் கள் மதம் பரப்பும் செயற்பாடுகள் போர்தது்க் கேயரினதும், ஒல்லாந்தரினதும் கலை அழிப்புக் கொள்கைகளின் மத்தியிலும் இந்து மதமும், இந்து ஆலயங்களும் பல அழிவுகளைச் சந்தித்த போதும் அழியாது இருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயில் ஈழத்தில் மிகவும் புகழ் பெற்ற ஒருசைவப் பாரம்பரியததின் அடையாளமாக விளங்குவதுதான் எங்களுக்குப் பெருமைதரும் விடயமாகும்.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சர்களில் ஒருவரான புவனேகவாகு என்பவரால் இக் கோயில் கட்டுவிக்கப்பட்ட தென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இதற்கு ஆதாரமான தனிப்பாடல், 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப் படும் கைலாய மாலை என்னும் நூலின் இறுதியில் காணப்படு கின்றது.

நல்லூரில் தற்போது அமைந்துள்ள முருகன் கோயிலின் அமைப்பானது முன்றாவது கோயில் கட்டுமானம் ஆகும். இந்த 3வது கோயிலின் அமைப்பில் அதுவரை இருந்த பழைய ஆலயத்தின் எந்த கட்டுமானங் களும் சம்பந்தப்படாத அளவிலேயே புதிய கட்டிட வடிவமைப்பைக் கொண்டதாக இன்றைய நல்லூர் ஆலயம் அமைந்துள்ளது. அதுதான் இப்போதுள்ள நல்லூர்கந்தன் ஆலயம் ஆகும்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் (1658–1798) இறுதி ஆண்டுகளில் இந்துக் கோயில்கள் அமைப்பது தொடர்பாக ஆட்சியாளர்களின் இறுக்கம் ஓரளவு தளர்ந்தபோது, நல்லூர் கந்தசுவாமி கோயில் மீள அமைக்கப்பட்டது. முன்னைய இடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் இருந்தபடியால் இன்னொரு இடத்தில் கோயிலை அமைத்தார்கள்.

இன்று நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் புதுப் பொலிவு பெற்றுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நல்லைக் கந்தன் ஒரு அலங்காரக் கந்தன் என்று வர்ணிக்கப்படுவதுபோல் நல்லை ஆலயமும் தங்கம் பொன்று அழகுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் பெருமைக்குச் சான்றாகவும் அரசிருக்கைக்குச் சான்றாகவும் அமைந்துள்ள நல்லூர் முருகன் ஆலயம், ஈழத் தமிழர்களின் வாழ்வாதாரத்திற்கான ஒரு அடையாளம் என்ற வகையில் ஒவ்வொரு தமிழனும் பெருமைப்பட வேண்டும்.•

**வல்லை ந.அனந்தராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

# ஜஸ்ரின் ரூடோ தடுமாறுகின்றாரா?

2019ன் பிற்பகுதியில் மீண்டும் ஒரு தேர்தலை கனடிய மக்கள் சந்திக்கவுள்ளார்கள். அடுத்த தேர்தலில் யாரை தேர்ந்தெடுப்பது என சிந்திக்க தொடங்கிவிட்டார்கள். ஒன்ராரியோவில் ஊழல் லிபரல் அரசுக்கு எதிராக 40 வீதமான வாக்குகளை மட்டும் பெற்று அதிக ஆசனங்களைப் பெற்ற பழமைவாதக் கட்சி ஆட்சியில் அமர்ந்தது. ஆட்சிக்கு வந்த ஒரு சில மாதங்களிலேயே நீதி மன்ற முடிவுகளையே புறந்தள்ளி, சர்வாதிகாரப் போக்கை கடைபிடிக்கத் தொடங்கிவிட்டது. அவ்வாறான ஆட்சி மத்தியில் இல்லை. ஆனால் முன்னால் பிரதமர் பியறி எலியட் ரூடோவின் மகன் ஜஸ்ரின் ரூடோ பலத்த எதிர்பார்ப்புக்கள் மத்தியில், கடும் போக்கை கடைப்பிடித்த ஸ்ரீபன் காப்பர் அரசை அதி பெரும்பான்மையாக வெற்றி கொண்டு ஆட்சிக்கு வந்தார். (இவர் வாரிசு அல்ல. பியறி எலியட் ரூடோ, ஒரு பொழுதும் ஜஸ்ரின் பிரதமராக வருவாரோ அல்லது தன்னைப் பின்பற்றுவாரோ என நினைத்திருக்கமாட்டார். பியறி ரூடோ உயிருடன் இருக்கும் வரை ஜஸ்ரின் அரசியலில் தீவிர கவனம் செலுத்தவும் இல்லை)

ஜஸ்ரினின் ரூடோவின் அமைச்சரவை சிறுபான்மையினர், அதிக பெண்களைக் கொண்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டாலீர். முதன்மைக் குடிகளுக்கும் முக்கியத்தவமளிக்கப்பட்டது. பெண்கள் முக்கிய அமைச்சர்களாக பதவிவகிக்கின்றனர். பல சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இவரது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களாகவுள்ளனர். சோமலியாவிலிருந்து அகதியாக வந்து கனடாவில் வழக்கறிஞராக தேர்வானவர் குடிவரவு, குடியகல்வு அமைச்சர். இவை வட—அமெரிக்காவில் ஏன் மேற்கு நாடுகளில் நினைத்துப்பார்க்க முடியாதவை. அவ் வகையில் கனடா போன்ற பல்லின நாட்டில், அதன் நோக்கத்துக்கு அமைய சமத்துவத்தை அதிகார பூர்வமாக அறிவித்த அல்லது நிலை நாட்டிய ஜஸ்ரின் ரூடோ பாராட்டுக்குரியவர். அவரது துணிச்சல் மதிக்கத்தக்கது.


ஜஸ்ரின் ரூடோவின் தென் பார்வை, வோசிங்கடன் மேட்டில், ஆட்சியில் டொனால்ட் ரம்ப். இது ஆரம்பத்தில் நட்பாக இருந்து, பின்னர் பகையாக மாறிவிட்டது. ரம்ப்பின் பார்வை உலகை ஒரு தடவை பின்னோக்கி தள்ளிவிட்டது. அவர் எவரையும் விட்டுவைக்கவில்லை.

ரூடோவிற்கும், ரம்பிற்குமான சொற் போர்

*மே 25— ரம்ப் — நீங்கள் (கனடியர்கள்) வெள்ளை மாளிகையை எரித்தீர்கள் தானே?”*

Trump Twitter War

June 8 – On Day 1 of the summit, Trump jokes to reporters that "Justin has agreed to cut all tariffs, all trade barriers between Canada and the United States." Trudeau responds with a laugh: "So I'd say NAFTA is in good shape."



PM Justin Trudeau of Canada acted so meek and mild during our @G7 meetings only to give a news conference after I left saying that, "US Tariffs were kind of insulting" and he "will not be pushed around." Very dishonest & weak. Our Tariffs are in response to his of 270% on dairy!

4:04 PM - 9 Jun 2018

Canadians, we're polite, we're reasonable, but we also will not be pushed around.Prime Minister Justin Trudeau

இவை சிறு உதாரணங்கள். தொடர்ந்தன. நட்புக் கிரகமாக இருக்க வேண்டிய தெற்கு, எதிர்க்கிரகமாகிவிட்டது. இதன் பிரதான காரணம் நப்ரா எனப்படும் வட—அமெரிக்க சுதந்திர வர்த்தக வலயமாகும்.


இதன் ஆரம்பமே ரீகனால் தொடங்கப்பட்டது. இவர் 1979ல் தேர்தல் பிரச்சாரமாக மூன்று வட—அமெரிக்க (மூன்று தான் உள்ளது) நாடுகள் இணைந்து சுதந்திரமாக வர்த்தகத்தில் ஈடுபடவேண்டும் என பிரச்சாரம் செய்தார். 1988 கனடிய பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியும், என்.டி.பிக் கட்சியும் சுயாதீன வர்த்தக வலயத்துக்கு எதிராக பிரச்சாரம் செய்தன. இந்த தேர்தலில் கொன்சவேற்றிவ் கட்சி 43 வீதம் வாக்குகளைப் பெற்றது. கொன்சவேற்றிவ் கட்சியின் சுயாதீன வர்த்தக வலயத்தை முன்னிலைப்படுத்தி பிரச்சாரப்படுத்தியிருந்தது. கனடியர்கள் பெருமளவில் சுயாதீன வர்த்தக வலயத்துக்கு எதிராக வாக்களித்திருந்தும், பாரளுமன்ற ஜனநாயகம் கொன்சவேற்றிவ் கட்சிக்கு ஆதரவாக அதிகளவு ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தது1988ல் கனடிய—அமெரிக்க சுதந்திர வர்த்தக வலயம், 1994 தை மாதத்திலிருந்து வட—அமெரிக்க சுதந்திர வர்த்தக வலயமாக மாறியது. இது நடைமுறைக்கு வந்தது. அப்போது அமெரிக்க அதிபராக பில் கிளின்ரனும், கனடிய பிரதமராக ஜீன் கிறிச்சியனுமிருந்தனா

இந்த சுதந்திர வணிக வலயம் கனடியர்களுக்கு சாதகமானதா? இல்லையெனில் ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும். ஓட்டைகள் இவை

1. நப்ராவின் பிரகாரம் அமெரிக்க நிறுவனங்கள், கனடிய நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைஎடுக்கலாம். இதுவரை 42 தடவைகள் அமெரிக்க நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்திருக்கின்றன. கனடிய வணிக சட்டங்களுக்கு எதிராகவே வெற்றி பெற்றுள்ளன. இது வரை கனடிய நிறுவனங்கள் 200 மில்லியன் டொலர்களை அபராதமாகக் கட்டியுள்ளன. 100 மில்லியன் டொலர்கள் அமெரிக்க நிறுவனங்களின் வழக்குரை அபராதம் கட்டியுள்ளன. வேற்று நாட்டு நிறுவனங்கள், கனடிய சட்டதிட்டத்துக்கமைய உள்ள கனடிய நிறுவனங்களுக்கு எதிராக, கனடிய சட்டதிட்டங்களை மையமாவைத்தே அபராதம் பெறுவதற்கும், தமக்கு சாதகமாக வணிக நடவடிக்கைகளை மேற்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வதற்கும் ஏன் நாம் அனுமதிக்க வேண்டும்? கனடிய நிறுவனங்களும், அமெரிக்க நிறுவனஙகள் மீது வழக்கு தொடர்ந்துள்ளன. ஆனால் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன.

2. அமெரிக்காவிற்கு ஏற்றுமதி யாகும் பொருட்களின் விலை, கனடிய நுகர்வு நிறுவனங்கள் வழங்கும் விலையை விட அதிகமாக இருக்க முடியாது. நப்ரா ஒப்பந்தத்தில் கனடா இந்த ஒப்புதலை வழங்கியுள்ளது. ஏன் கனடா இந்த ஒப்புதலைச் செய்தது?

3. அமெரிக்காவிற்கு ஏற்றுமதி யாகும் பொருட்கள், சக்தி போன்றன வற்றின் எண்ணிக்கையில் மாற்றமேற்ற முடியாது. அவ்வாறு செய்வதாயின் கனடிய விநியோக எண்ணிக்கையும் குறைக்கப்பட வேண்டும். கனடிய நுகர்வாளர்களுக்கே கனடா ஏன் பாரபட்சம் காட்ட வேண்டும்?

4. அமெரிக்க நிறுவனங்கள். கனடிய நிறுவனங்களை வாங்குவதற்கு எந்த வித தடையும், கட்டுப்பாடும் இல்லை. (ஒரு சில விதிவிலக்குகள் உண்டு). 1867ம் ஆண்டு அலாஸ்கா மாநிலத்தை , அமெரிக்கா 7 மில்லியன் டொலர்களுக்கு வாங்கியது.

5. நப்ரா ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னர், கனடிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. மாறாக வீழ்ச்சியடைந்துள்ளது.

6. நப்ரா சுதந்திர வர்த்தக வலய அமைப்பல்ல. இது வட அமெரிக்க கண்ட பொருளாதார ஒருங்கிணைப்பு அல்லது தொகையீடு. ஒருங்கிணைப்பு என்பது கனடாவைப் பொறுத்த வரை கனடாவை இழத்தலாகும் (Integration means assimilation and that for Canada means the end of our country) தற்போதைய ரம்பின், கனடா மீதான கட்டுப்பாடுகள் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

7. நப்ராவினுள் நாம் கட்டங்குவது என்பது, நாம் அமெரிக்காவை பின்பற்றுவதாகின்றது. நாம் பொருளாதாரத்தில் அமெரிக்கா மீது தங்கியிருக்க வேண்டியுள்ளது. இதனால் சுலபமாக அவர்களது வெளிநாட்டுக் கொள்கைகளையும், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பின்பற்ற வேண்டியுள்ளது. இதனால் நாம் எமது சுயத்தை இழக்கின்றோம். எமது இயல்பு திறமையையும் இழக்கின்றோம்.

8. முன்னால் கனடிய பிரதமர்கள் அமெரிக்காவுடனான வர்த்தகத்தை கண்டித்துள்ளார்கள். சேர். ஜோன் மக்டொனால்ட் "கனடாவிற்கான மறைமுகமான துரோகம்" என குறிப்பிட்டுள்ளார். ஜஸ்ரின் ரூடோயின் தந்தை பியரி எலியட் ரூடோ "கனடாவிற்கு செய்யப்படும் பயங்கர வஞ்சனை. கனடாவின் இறையான்மையை, அமெரிக்காவிற்கு பொருளதாரத்தின் பெயரிலும், கனடிய வளங்களின் பெயரிலும் தாரைவார்ப்பதாகும்" என்றார். ஜோன் ரேர்னர் "கனடாவை விற்கும் சட்டம்" என்றார்.

9. கனடாவின் ஆரம்ப நாட்களில், கனடியர்கள் எவரும் வருமான வரி கட்டவில்லை. அவ்வாறான வரி சட்டத்திலேயே இருக்கவில்லை. கனடாவிற்கு இறக்குமதியாகும் பொருட்களுக்கான சுங்க வரிப் பணத்திலேயே கனடிய அரசு நடைபெற்றது. நாட்டிற்கான கடன் அப்போது இல்லை. கடந்த மூன்று தசாப்தங்களாக இந் நிலை மாறி 1.2 ரில்லியன் டொலர்கள் கனடிய அரசுக்கான கடனாகவுள்ளது. வீடற்றோர் தொகை அதிகமாகவுள்ளது. (Homeless) உணவு முத்திரையை நம்பி பல கனடியர்கள் வாழ்கின்றனர்.

10. கனடிய பொருளாதாரத்தை விட, அமெரிக்க பொருளாதாரம் பத்து மடங்கு பெரியது. நாம் எமது பொருளாதாரத்தை, வளங்களை, எமது இறையாண்மையை, எமது மக்களை பாதுகாக்க வேண்டும். இல்லையேல் அமெரிக்காவால் உறுஞ்சப்பட்டுவிடுவோம். உலகரங்கில் எமது பெருமையை, கண்ணியத்தை காப்பாற்ற வேண்டுமெனில், நாம் நப்ராவை விட்டு வெளியேற வேண்டும்.

11. அமெரிக்கா 452 பில்லியன் டொலர்களை கனடா—மெக்சிக்கோவில் முதலீடு செய்துள்ளது. மாறாக கனடா—மெக்சிக்கோ 240.2 பில்லியனையே அமெரிக்காவில் முதலீடு செய்துள்ளது.

12. புதிய நப்ரா பேச்சுவார்த்தைகளின் போது, கனடிய—மெக்சிக்கோ அரச தேவைகளை (Opening up more Canadian or Mexican government contracts to U.S. companies) அமெரிக்க நிறுவனங்களே பூர்த்தி செய்யும்.

13. அமெரிக்கா தனது ஏற்றுமதியை கனடாவிற்கு படிப்படியாக அதிகரித்து வருகின்றது. அதே சமயம் கனடாவிலிருந்து இறக்குமதியை குறைத்துவருகின்றது.

14. நப்ராவை விட்டு வெளியேறுவது சுலபம். ஆறு மாத கால அறிவிப்புக் கொடுத்தால் எந்த வித அபராதமும் அற்று வெளியேறலாம். கனடா, அமெரிக்கா, மெக்சிக்கோ ஆகிய நாடுகள் அனைத்தும் உலக வணிக மையத்தில் உறுப்பினர்கள். (WTO- World Trade Organization ). கனடா நப்ராவில் இருந்த காலங்களை விட உலக வணிக மையத்தில் செயற்பட்டபோது எமது பொருளாதாரம் ஆரோக்கியமாக இருந்தது. உலக வணிக மைய சட்ட திட்டங்களுக்கமைய செயற்படுவோம்.

அண்மைக் காலங்களில் டொனால்ட் ரம்பிற்கு, ஜஸ்ரின் ரூடோ மீது கோபம் ஏற்பட்டது. அது ஜஸ்ரின் விட்டுக் கொடுக்காத போக்கும், டொனால்ட்டின் சர்வாதிகாரப் போக்கிற்குமான மோதலாக பார்க்கலாம். நப்ரா ஒப்பந்தம் பல படிகளில் மீளப் பரிசீலிக்கப்பட்டாலும், குறிப்பாக பால் விடயத்தில் சிக்கலில் உள்ளது. அது என்ன பால்?

கனடிய பாற் பொருட்கள் பண்ணைகள் "வழங்கல் மேலாண்மை" முறையை பின்பற்றுகின்றன. அத்துடன் கனடிய அரசும் சுமார் 17 ஆயிரம் பண்ணைகளுக்கு உதவி படிகளும் வழங்குகின்றது. வழங்கல் மேலாண்மை முறை என்பது (Supply Management) தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்படும் முறை. இது 1970களில் நடைமுறைக்கு வந்தது. 1950—1960 களில் அளவுக்கதிகமான பாற் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஒவ்வொரு வருடமும் சி.டி.சி (Canadian Dairy Commission (CDC), இதன் அளவுகோளைத் தீர்மானிக்கும். இதனால் அளவுக்கு அதிகமான இறக்குமதியும் கட்டுப்படுத்தப்படுகின்றது. இறக்குமதிக்கான "ஒதுக்கீட்டு" எல்லையைத் தாண்டி எப் பொருளும் இறக்குமதி செய்ய முடியாது. ஒவ்வொரு கனடிய பண்ணைக்கும் இவ்வாறான ஒதுக்கீடு உள்ளது. இது "நியாயமான விலை", "அதிக உற்பத்தி தவிர்ப்பு", "இறக்குமதிக் கட்டுப்பாடு" ஆகிய மூன்று விடயங்களை உள்ளடக்குகின்றது. கொக்கோ கோலா போன்ற மிகப் பெரிய நிறுவனங்கள் கனடிய பாற்சந்தையில் களமிறங்க, இங்கேயே உற்பத்தியை மேற்கொள்ளவுள்ளன. பீற்றபறோவில் உள்ள மினிற்மெய்ட் உற்பத்திச்சாலையை விரிவாக்கி, அங்கு இனிப்புக் குறைந்த பாலை, கொக்கோ கோலா உற்பத்தி செய்யவுள்ளது (lactose-free milk that is rich in protein and lower in sugar than traditional milk.) நப்ராவினால் மெக்சிகோ பெரும்பாலான மெக்சிகோ பண்ணைகள் மூடப்பட்டுள்ளன.

இவ்வளவு பிரச்சினைகளுக்கு அப்பால், அமெரிக்கா, மெக்சிகோவுடன் வணிக உறவு ஒன்றுக்கு வந்துள்ளது. குறிப்பாக அமெரிக்க வாகன உற்பத்தியாளர்கள், ரம்பின் "ஒன்றே அமெரிக்கா" என்ற கோஷத்தின் கோரத்தை அறிந்துள்ளார்கள். ஒரு தொழிலாளிக்கு, ஒரு மணிக்கு 16 அமெரிக்க டொலர்கள் கொடுத்து வாகனங்களை உற்பத்தி செய்தால், சந்தையில் யாரும் வாகனங்களை வாங்கப்போவதில்லை. மாறாக 2.20 அமெரிக்க டொலர்கள் வேதனமாக கொடுத்து தயாரித்தால் வாகனங்களின் விலைகள் குறைவாக இருக்கும். சந்தையிலும் இலகுவாக விற்கலாம். கனடா நப்ராவிலிருந்து வெளியேறினால், கனடிய வாகன உற்பத்திகள் சுமார் 50 வீதத்தால் குறையும். ஒன்ராரியோவைச் சுற்றியுள்ள வாகன உற்பத்திச்சாலைகளில் அதிகமானோர் வேவை இழப்பார்கள். விளைவு மீண்டும் ஒரு மிக மோசமான பொருளதார தேய்வுக்கு ஒன்ராரியோவும், கனடாவும் செல்லும். ஒகஸ்ட் மாதம் சுமார் என்பாதியிரம் தொழிலாளர்கள் வேலை இழந்ததாக ரொரன்ரோ ஸ்ரார் குறிப்பிடுகின்றது. இது உண்மையாயின் ஆரம்பமே மோசமாகவுள்ளது.



ஜஸ்ரின் ரூடோ நப்ராவைக் காப்பாற்றுவாரா? அல்லது அவரிடம் மாற்றுத் திட்டங்கள் உள்ளனவா?

அல்பேட்டா மாநிலத்திலிருந்து எண்ணெய்யை குழாய்கள் மூலம் பிரிட்டிஸ் கொலம்பியா மாநிலத்திற்கு ஊடாக கொண்டு செல்லும் திட்டத்தை செய்து முடிப்பேன் என வைராக்கியமாக கருத்துக்களை வெளியிட்ட ஜஸ்ரின் ரூடோவால் அதனை ஆரம்பிக்கவே முடியாமல் உள்ளது. Kinder Morgan பைப் லைன் என அழைக்கப்படும், இந்த திட்டம் அல்பேட்டா மற்றும் பிரிட்டிஸ் கொலம்பியா மாநிலங்களின் என்.டி.பி அரசுகள் ஒன்றுக்கு ஒன்று முரணாக செயல்படுவதனால், ஜஸ்ரினின் லிபரல் அரசால் ஒன்றும் செய்ய முடியாமல் உள்ளது. மறுபுறம் சுற்றுச் சூழலை பாதுகாக்கின்றோம் எனக் கூறும் லிபரல் அரசு, இத் திட்டத்தால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பை கவனத்திற் கொள்ளவில்லை. Kyoto ஒப்பந்தப் பிரகாரம் கனடாவால் செயற்பட முடியாதுள்ளது.

இவற்றுடன் புதிதாக சவூதி அரேபியாவுடனும், லிபரல் அரசுக்குச் சண்டை. இதன் பாதிப்பு அதிகம் இல்லையெனிலும், சண்டையில் கனடாவின் பக்கம் எவரும் இல்லை என்பது கவலைக்குரியது. ஆறுதலுக்கு பிரித்தானியா திரைமறைவில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்றது. சவூதியோ விட்டுக் கொடுப்பதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இல்லை. பாவம் சவூதி மாணவர்கள் எங்கு செல்வது என்று தெரியாமல் திண்டாடுகின்றார்கள்.

நப்ரா, எண்ணெய் குழாய், சவூதி அரேபியா வரிசையில் முன்னிற் பவையில். முதலாவது, தேர்தல் பிரச் சாரத்தில், பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்வு முறையில் மாற்றம் கொண்டு வருவோம் என்றார்கள். அது என்ன வாயிற்று? செனட் சீர்திருத்தம் என்றார்கள் அதுவும் அப்படியே உள்ளது. குறிப்பிட்ட போதை மருந்துகள் விற்பனை கனடாவில் சட்டபூர்வமாக்கப்படும் என லிபரல் அரசு செயற்பட்டுவருகின்றது. அதே சமயம் Opioid போதை மருந்தால் பலர் இறந்து வருகின்றனர்.

இந்தியாவிற்கு ஜஸ்ரின் ரூடோ சென்ற போது இந்தியத் தலைவர்களும், ஊடகங்களும் பாராமுகமாக நடந்து கொண்டார்கள். இந்த இந்திய பயணத்தை ஜஸ்ரின் ரூடோ தவிர்த் திருக்கலாம்.

1973ல் ஒபெக் எண்ணெய் பிரச்சினை உச்சத்திலிருந்தது. அரபு நாடுகளும் இஸ்ரேலும் மோதிக் கொண்டன. Yom Kippur War என அழைக்கப்படும் போர் நடைபெற்றது. அரபு நாடுகளும் இஸ்ரேலும் இதில் மோதிக் கொண்டன. ஜஸ்ரினின் தந்தையார் பியறி எலியட் ரூடோ லிபரல் சிறுபான்மையரசின் பிரதமர். அல்பேட்டாவில் உள்ள அதிகளவு எண்ணெய் படிமங்கள் உள்ளன. இவை அமெரிக்க நிறுவனங்கள் கட்டுப் பாட்டிற்குள் இருந்தன. கனடாவில் எண்ணெய் விலை அதிகரிப்பை தடுக்க என்.டி.பியுடன் இணைந்து பெற்றோ கனடா என்னும் அரச கூட்டுத்தாபனத்தை உருவாக்கினார்.

அவ்வாறான துணிச்சலான ஒரு பொருளாதார முடிவை ஜஸ்ரினால் ஏன் எடுக்க முடியாமல் உள்ளது?

ஜஸ்ரினின் சாதனைகள்ளயும் குறிப்பிட்டேயாகவேண்டும்

- நடுத்தரவர்கத்தினரின் வரி குறைக்கப்பட்டுள்ளது.
- ஐ.எஸ்.ஐ.எஸ்ன் பயங்கரவாத எல்லையிலிருந்து கனடா காப்பாற்றப்பட்டுள்ளது.
- இரண்டு லட்சம் டொலர்களுக்கு அதிகம் சம்பாதிப்போரின் வரி 33 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- அகதிக் கோரிக்கை முன் வைத்தவர்களுக்கான சட்ட சலுகைகளும், சுகாதார சேவையும் வழங்கப் பட்டுள்ளன.
- முதன் மக்கள் மீதான வன்முறைகள் குறிப்பாக பெண்கள் மீதான வன்முறைகளுக்கான விசாரணைகள் துரிதமாக்க பட்டுள்ளன.
- சிறுவர் பராமரிப்புத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது
- ஓய்வுக்கான வயது மீண்டும் 65ஆக குறைக்கப்பட்டுள்ளது
- முதியோருக்கு ஓய்வு ஊதிய பகுப்பு தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது
- ஒற்றைத் தாய்களுக்கான உதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது
- உள்ளக அபிவிருத்தி திட்டங் களுக்கான நிதி அதிகரிக்கப்பட்டுள்ளது
- கனடிய குடிவரவாளர்களின் குடும்பங்கள் கனடா வருவதற்கான சலுகைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது
- முதன் குடிகளின் கல்வி அபிவிருத் திக்கு அதிக பணம் வழங்கப்பட்டுள்ளது
- முதன் குடிகள் மீதான வன் முறைகளுக்கு போப்பாண்டவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கபட்டுள்ளது.

இது ஜஸ்ரின் ரூடோவின் கருத்து. அகதிகளை கனடா தொடர்ந்து வரவேற்கின்றது. அண்மைக் காலங்களில் ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் குடிவர வாளர்களுக்கு எதிரான பிரச்சாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. குடிவரவாளர் களுக்கு எதிரான கட்சிகளுக்கு அதிக வாக்குகள் கிடைக்கின்றன.

கனடா இதற்கு எதிர்மாறான நிலையிலேயே உள்ளது. அண்மையில் ஒன்ராரியோவில் பதவியேற்ற கொன்சவேற்றிவ் கட்சியும் குடி வரவாளர்களுக்கு எதிரான கொள்கையையே கொண்டுள்ளது. ஜஸ்ரின் ரூடோ கனடாவில் திடமான கொள்கையைக் கொண்டுள்ளார். இது மிக முக்கியமானது.

அவர் சந்தித்த பொருளாதார பிரச்சினைகள் குறிப்பாக ரம்பின் மீதான பிரச்சினைகள், உலக பொருளாதார மாற்றங்கள், மற்றும் சீனாவின் எழுச்சி போன்றவற்றின் விளைவுமாகும்.

நப்ராவில் அமெரிக்கா கைச்சாத்திடாவிட்டால் அதன் எதிர் விளைவு அமெரிக்காவிற்கே அதிகம். எனவே காலம் தாழ்த்தியாவது அது நடைபெறும்.

ஜஸ்ரின் ரூடோ தடுமாறுவது போல் தெரிந்தாலும், அவர் புன்னகையின் பின்னால் அவர் உறுதி தெரிகின்றது. அமெரிக்காவில் டொனால்ட் ரம்ப் அல்லது றிப்பப்ளிக்கன் ஆட்சி இருக்கும் வரை ஜஸ்ரின் ரூடோ தொடர்ந்து வென்று கொண்டிருப்பார்.•

**ரதன்**

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

**Head Office:**
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

**Branch Office:**
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவர்த்தக சம்மேளனத்தின் இளம் தொழில்முனைவர்களுக்கான கலந்துரையாடல்




வர்த்தக சம்மேளனத்தின் இளம் தொழில்முனைவர்களுக்கான சந்திப்பு Youth Talk 2018 நிகழ்வு ஒகஸ்ட் 11ம் திகதி நடைபெற்றது, கடந்த 25 வருடத்தில் தலைவர் டிலானி குணராஜா தலைமையில் முதல் முதல் இளம் தொழில்முனைவர்களுடன் இந்நிகழவு நடைபெற்றது குறிப்பிடக்கூடியது.


















# தாயாக மக்களின் வாழ்வாதார நிதிக்காக 40,000 டொலர் பாடகி ஜெசிக்கா நிதிசேர் நிகழ்வு
















இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் வறுமையிலும் துன்பத்திலும் தவித்து நிற்கும் எமது உறவுகளக்கு கைகொடுக்கும் வகையில் கடந்த ஒகஸ்ட் மாதம் 11 ம் திகதி டொரோண்டோவில் ஒரு மாபெரும் இசைநிகழ்ச்சியை நடத்தி, 40 ,000 கனடிய டொலர்களை திரட்டி கண்ணீர் வடிக்கும் உறவுகளை நோக்கி தனது கரங்களை உயர்த்தியுள்ளார்.

தமிழகத்தின் செல்லக் குரல்களுக்களுக்கான தேடல் என்று விஜய் டிவி ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகின்ற "ஏர்டெல் சூப்பர் சிங்கர் 4" நிகழ்ச்சியில் 2015 ம் ஆண்டு இரண்டாவது இடம் பிடித்தவர் கனடாவாழ் ஈழச்சிறுமியான ஜெசிகா. ஆனால் தான் பரிசாக பெற்ற 1 கிலோ தங்கத்தையும் தமிழகம் மற்றும் ஈழத்தில் வாழும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு கொடுத்து உலக மக்களின் நன்மதிப்பை சிறுவயதில் பெற்றவர்

"தோல்வி நிலையென நினைத்து" என்ற தன்னம்பிக்கை கலந்த பாடலையும், ஈழத் தமிழரின் துயரம் தோய்ந்த வலியை வெளிப்படுத்தும் "விடை கொடு எங்கள் நாடே" என்ற உருக்கமான பாடலையும் ஒன்றாக கலந்து ஜெசிக்கா பாடி முடித்தபோது நடுவர்கள், சிறப்பு விருந்தினர்கள், விஜய் டிவியின் தொகுப்பாளர்கள் உட்பட அரங்கத்தில் குவிந்திருந்த அனைவரும் கண்ணீர் மழையில் நனைந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RE/MAX

DOING MORE FROM
FOR SALE
TO SOLD

THINKING OF
SELLING
YOUR HOME ?

NAVIGATE THE REAL ESTATE
MARKET WITH A TRUE EXPERT !



FREE

Comparative Market
Analysis & Home
Evaluation

WWW.REMAXHOMESALE.COM



Realtor Ramanan
416 290 6000
Re/Max Community Realty Inc Brokerage *
(Independently owned and operated)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் மாநகரம்! உங்கள் குரல்!

## உங்கள் தெரிவு சோதி செல்லா

**மீண்டும் மார்க்கம் 7ம் வட்டாரத்தில்**
**கவுன்சிலராக போட்டியிடுகிறேன்**

**ELECT**

# SOTHY SELLA

## FOR WARD 7 COUNCILLOR CITY OF MARKHAM

**Vote from October 12th to October 22nd.**
**ONLINE or INLINE**
**CALL US FOR DETAIL**

- ✓ சொத்துவரி அதிகரிப்பின்மையை நிலைநிறுத்தல்
- ✓ வீதிப்போக்குவரத்து வசதிகளை முன்னேற்றுதல் மார்க்கம் நகரத்தை மேலும் பசுமையாக்குதல்
- ✓ பாதுகாப்பான முறையில் சமூகங்களின் வாழ்வு தொடர்பாக பலமுயற்சிகளை எடுத்தல்

- ✓ Keeping Property Taxes Low
- ✓ Improving Roads to Reduce Gridlock
- ✓ Advocating for Safer Communities.

Over the past 25 years, as a business man and a community volunteer, I have lived among you, worked among you and shared the triumphs and tragedies that all citizens of a community share together. For the past 18 years, I've been proud to contribute to the Markham community in many ways in my life and I look forward to joining all of you in seeing **Markham not just become what we all know it once was, but to work towards seeing Markham become what we all know it can be.**

\- Sothy Sella



647.915.9593
sjsothy@gmail.com
ward7sothy.com

**Your City. Your Voice.**

மார்க்கம் நகரத்தை மக்கள் நகரமாக்க ஒன்றாக இணைவோம்! வாருங்கள்! ஆதரவு தாருங்கள்!!!

Authorized by the CFO for the Sothy Sella Campaign

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கைத் தமிழர்களும்

கனடாவில் வாழும் தமிழர்கள் பெருமை கொள்ளும் வகையில் கனடாவின் மூன்று தளங்களிலும் மூன்று தமிழர்கள் கணிசமான கவனிப்பை இந்த ஆ
நாடாளுமன்ற செயலாளர் என்ற பதவி நிலையினை பெற்றுள்ளார். மாகாண அரசில் கொன்சவெற்றிவ் கட்சியின் சார்பில் தெரிவான இளம் மாகாண சபை உறுப்
நியமிக்கப்பட்டுள்ளார். ரொரன்ரோ நகர சபையில் நீதன் ஷான் பல்வேறு உப குழுக்களின் தலைவராகவும் வட மாகாணத்துடனான உறவுப் பாலம் அமைக்கும் செய
இந்த கட்டுரையாளருக்கு இவர்கள் மீதான மாறுபட்ட விமர்சனங்களும் அபிப்பிராயங்களும் உண்டு இருந்தாலும் அதனையும் தாண்டி ஒரு சமூகமாக இவர்கள்

## ஹரி ஆனந்தசங்கரி



பாரம்பரியம் மற்றும் பல்கலாசார அமைச்சின் நாடாளுமன்ற செயலாளர் ஹரி ஆனந்தசங்கரி

கடந்த தேர்தல் மூலம் ஆளும் கட்சியில் பாராளமன்றத்துக்கு தெரிவான முதலாவது தமிழர் . தனது சிறுவயதிலிருந்து அரசியல் சமூக நீரோட்டத்தில் இயல்பாக இணைத்துக் கொண்ட ஹரி, தாயக மக்களின் புனர்நிர்மான செயற்பட்டுகளிலும் அதீத செயற்பாட்டு திறன் கொணடவர். கடந்த இரண்டு வருடங்களில் தாயகத்துக்கு இரண்டு தடவை சென்று, மீள் கட்டுமான புனர்நிர்மான செயற்பாடுகளில் பங்குகொண்டுள்ளார். பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவோடு நெருக்கமான உறவை பேணுபவர்.

கனடாவின் தேசிய அரசாங்கத்தின் முக்கிய பதவி ஒன்றை தமிழ் பாராளுமன்ற உறுப்பினரான ஹரி ஆனந்தசங்கரி பெற்றுக் கொண்டுள்ளார்

பாரம்பரியம் மற்றும் பல்கலாசார அமைச்சின் நாடாளுமன்ற செயலாளர் என்ற பதவி நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

கனேடிய அரசாங்கத்தின் அதி உயர் பதவி நிலையினை பெற்றுக் கொண்ட தமிழர் என்ற பெருமையினை ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் பெற்றுள்ளார்.

கனடாவில் வாழும் பல்லின சமூகங்களினதும் பூர்வீக குடி மக்களினதும் மொழி, கலாசாரம் பாரம்பரியம் ஆகியவற்றை பேணிப் பாதுகாத்தல் மற்றும் இங்குள்ள நூதன சாலைகளின் அபிவிருத்தி ஆகிய வற்றையும் கனேடிய ஊடகங்களின் பக்சார்பற்ற செயல்பாடுகளை உறுதிப் படுத்தல் போன்ற செயல்பாடுகளையும் பாரம்பரியம் மற்றும் பல்கலாசார அமைச்சு முன்னெடுத்து வருகின்றது.

இந்த அமைச்சின் நாடாளுமன்ற செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு பல்லின கலாசாரங்களை கனேடிய மண்ணில் பேணுவது தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் இனவெறி செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் கனேடிய பழங்குடி மக்களின் மொழிகளை அழிவில் இருந்து பாதுகாத்தல் ஆகிய பொறுப்புகள் தனக்கு வழங்கப்பட்டுள்ளதாக பாராளு மன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி இருருவியுடன் இடம்பெற்ற உரையாடலின் போது கூறினார்.

கனடாவின் பூர்வீக மக்கள் 90 விதமான மொழிகளை பேசி வருவதாகவும் இன்னும் இரண்டு தலைமுறைகளுடன் அந்த மொழிகள் அழிவடையும் ஆபத்தை எதிர் கொண்டுள்ளதாகவும் அவற்றை அழிவில் இருந்த பாதுகாப்பது முக்கிய மானது என்றும் ஹரி ஆனந்தசங்கரி குறிப்பிடுகின்றார்.

இதேவேளை கனடாவில் வாழும் பல்கலாசர மக்களின் பாரம்பரியங்களை பேணிப் பாதுகாக்கும் செலய்பாடுகளை முன்னெடுப்பதற்காக 24 மில்லியன் டொலர்கள் நிதி உதவியினை கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த நிதி உதவி கனடாவில் வாழும் தமிழ் சமூகம் உட்பட பல்வேறு சமூகங்களுக்கும் பயனளிக்கும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமது பாரம்பரியங்களை இந்த நாட்டில் பேணிப் பாதுகாப்பதற்கான செயல் திட்டங்களுடன் தமது அமைச்சினூடாக இந்த விசேட நிதி உதவித் திட்டத்தினை பல்லின சமூகங்களும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை தகுதியும் திறமையும் வாய்ந்த தமிழ் இளைஞர் யுவதிகள் பலர் கனேடிய அரசாங்கத்தின் முக்கிய பதவிகளை வகித்து வருவதாகவும் அவர்கள் எதிர்காலத்தில் கனடாவின் முக்கியமான தலைவர்களாக வளர்ச்சியடைவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது சமூகத்தில் உள்ள தலைமைத்துவ பண்புகளும் செயல் பாட்டு திறனும் உள்ள இளைஞர்களுக்கு உரிய வழிகாட்டல்களை வழங்கி அவர்கள் தமது தகுதிகளையும் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற பதவி நிலைகளை பெறுவதற்கு தான் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்க தயாராக இருப்பதாகவும் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கூறினார்.

தமிழ் சமூகமான நாம் இந்த மண்ணல் வளர்ச்சி அடைவதற்கு எமது அடுத்த தலைமுறை இளைஞர்ககளும் யுவதிகளும் சிறந்த ஆளுமைகளாக வளர்ச்சி பெற வேண்டும். இதனை நோக்கியதாகவே தமிழ் அரசியல் பிரதிநிதிகளின் செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

தமது குடும்ப உறவுகளுக்கு முன்னுரிமை அளிப்பதும் அவர்களுக்கு வாய்ப்புகளை வாரி வழங்குவததையும் தவிர்த்து பொருத்தமான இளைய சமூகத்திற்கு வழிகாட்டியாக இருந்து அவர்களை வளர்த்து விடுவதற்கு எமது அரசியல் பிரதிநிதிகள் முன்வரவேண்டும்.

ஏனைய தமிழ் அரசியல் தலைவர்கள் இந்த விடயத்தில் ஹரி ஆனந்தசங்கரியினை முன்மாதிரியாக கொள்ள வேண்டும் என்பதே எமது சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

"இதேவேளை கனடாவில் வாழும் பல்கலாசர மக்களின் பாரம்பரியங்களை பேணிப் பாதுகாக்கும் செலய்பாடுகளை முன்னெடுப்பதற்காக 24 மில்லியன் டொலர்கள் நிதி உதவியினை கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த நிதி உதவி கனடாவில் வாழும் தமிழ் சமூகம் உட்பட பல்வேறு சமூகங்களுக்கும் பயனளிக்கும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமது பாரம்பரியங்களை இந்த நாட்டில் பேணிப் பாதுகாப்பதற்கான செயல் திட்டங்களுடன் தமது அமைச்சினூடாக இந்த விசேட நிதி உதவித் திட்டத்தினை பல்லின சமூகங்களும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்."

## விஜய் தணிகாசலம்

ஒன்ராறியோ மாகாண சபை நடவடிக்கைகள் மற்றும் உறுப்பினர்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் நிலையியற் குழுவின் துணைத் தலைவராக விஜய் தணிகாசலம்

விஜய் தணிகாசலம் கனடாவின் அரசியல் வரலாற்றில் இளம் வயதில் சாதனை படைத்த தமிழன் என்ற பெருமை விஜய் தணிகாசலத்திற்கு பொருந்தும்.

கனடாவில் மிக முக்கியமான ஒன்ராறியோ மாகாண சபையின் உறுப்பினராக தெரிவான தமிழ் இளைஞர்.

மாணவ பருவத்தில் இருந்தே தனது தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தி அதன் மூலம் பல இளைஞர் யுவதிகளின் ஆதரவுத் தளத்தை ஏற்படுத்தியவர்.

தமிழ் சமூகத்தின் எதிர்கால அரசியல் நம்பிக்கைகளில் ஒருவராக கருதப்படும் விஜய் தணிகாசலத்திற்கு தேர்தலுக்கு முன்னைய நாட்களில் அவர் எதிர் கொண்ட கடுமையான சவால்களையும் தாண்டி அவர் பெற்றுக் கொண்ட வெற்றி அவர் மீதான நம்பிக்கையினையும் எதிர் பார்ப்பினையும் அதிகரித்திருந்தது.

சிறுபான்மை சமூகங்கள் மீது அதிகம் கரிசனை கொள்ளாத பழமைவாதிகளின் சித்தாந்தங்களை தாங்கி நிற்கும் கட்சியாக கருதப்படும் கொன்சவேற்றிவ் கட்சியின் ஆட்சியில் இந்த இளைய மாகாண சபை உறுப்பினருக்கு முக்கியமான பதவி ஒன்றை மாகாண அரசாங்கம் வழங்கியதன் மூலம் இவரின் ஆளுமை வெளிப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாண சபை நடவடிக்கைகள் மற்றும் உறுப்பினர்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் நிலையியற் குழுவின் துணைத் தலைவராக விஜய் தணிகாசலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் நடவடிக்கை கள் தொடர்பில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் குழுவாக கருதப்படும் இந்தக் குழுவின் துணைத் தலைவர் பதவி என்பது மிகவும் முக்கியத்துவமானது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த பதவியில் இந்த பதவியினை வகித்த லிசா மக்லியோட் ( Lisa MacLeod ) இம்முறை கொன்சவேற்றிவ் அரசாங்கத்தின் மிக முக்கியமான அமைச்சு பதவிகளை தக்க வைத்துள்ளமை சுட்டிக்காட்டத் தக்கது.

சிறுவர் விவகாரம், இளைஞர் விவகாரம், மகளீர் விவகாரம், சமூக சேவைகள் மற்றும் குடிவரவுத் துறை ஆகிய அமைச்சுகளை கையாளும் லிசா மக்லியோட் அவர்கள் மகாணசபை உறுப்பினர்களுக்கான செயல்பாட்டுக் குழுவின் துணைத் தலைவராக இருந்துள்ளமை இந்த பதவியின் முக்கியத்துவம் குறித்து நாம் அறிந்து கொள்வதற்கு உதவியாக அமையும்.

தற்போதைய மாகாண அரசில் அங்கம் வகிக்கும் அனுபவம் வாய்ந்த பல மூத்த அரசியல்வாதிகளின் மத்தியில் விஜய் தணிகாசலம் என்ற இளைஞர் இந்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டமை தமிழர்களுக்கு நம்பிக்கையளிக்கும் செயல்பாடாக கருதப்படுகின்றது.

மாகாண அரச மட்டத்தில் தமிழர் ஒருவருக்கு கிடைத்துள்ளதும் மிக இளம் வயதுடைய ஒருவர் முதல் தடவையாக இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதும் முக்கியத்துவம் மிக்கது.

இவரைப் போன்ற ஆற்றல் மிக்க தமிழ் இளையவர்கள் கனேடிய அரசாங்கத்தின் பல்வேறு தளங்களிலும் ஈடுபடுவதும் முக்கியமான பதவி நிலைகளை பெற்றுக் கொள்வதும் எதிர்காலத்தில் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கனேடிய அரசியலில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் என்றே பலரும் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் நம்பிக்கையும்

ஆண்டு பெற்றுள்ளார்கள். கனடாவின் தேசிய லிபரல் அரசாங்கத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி பாரம்பரியம் மற்றும் பல்கலாசார அமைச்சின் ...ப்பினர் விஜய் தணிகாசலத்திற்கு ஒன்ராறியோ மாகாண உறுப்பினர்களின் நலன்களை பேணும் நிலையியற் குழுவின் துணைத் தலைவராக விஜய் தணிகாசலம் ...சயல் திட்டத்தின் பிரதான அங்கமாகவும் விளங்குகின்றார். இந்த மூவரும் மூன்று அரசியல் தளங்களிலும் தமிழர்களுக்கான பெருமையினை ஏற்படுத்தி நிற்கின்றார்கள். ...ா அடைந்துள்ள இந்த உயர் நிலைகள் குறித்து எமது சமூகம் பெருமை கொள்ள வேண்டும்.

- ரமணன் சந்திரசேகரமூர்த்தி



தேர்தலுக்கு முன்னைய நாட்களில் அவர் எதிர் கொண்ட கடுமையான சவால்களையும் தாண்டி அவர் பெற்றுக் கொண்ட வெற்றி அவர் மீதான நம்பிக்கையினையும் எதிர் பார்ப்பினையும் அதிகரித்திருந்தது.

சிறுபான்மை சமூகங்கள் மீது அதிகம் கரிசனை கொள்ளாத பழமைவாதிகளின் சித்தாந்தங்களை தாங்கி நிற்கும் கட்சியாக கருதப்படும் கொன்சவேற்றிவ் கட்சியின் ஆட்சியில் இந்த இளைய மாகாண சபை உறுப்பினருக்கு முக்கியமான பதவி ஒன்றை மாகாண அரசாங்கம் வழங்கியதன் மூலம் இவரின் ஆளுமை வெளிப்பட்டுள்ளது.

## நீதன் ஷான்



நீதன் ஷான் கனடாவில் இருந்து தாயகம் நோக்கி நீளும் நேசக் கரம். தமிழர்கள் செறிந்து வாழும் ரொரன்ரோ நகரத்தில் நகர சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழர்.

கனடாவின் பிரதான அரசியல் கட்சிகளில் ஒன்றான புதிய ஜனநாயக் கட்சியின் ஒன்ராறியோ மகாணத்தின் தவிசாளர் என்ற உயர் பதவியை வகித்த தமிழர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

2003ம் ஆண்டு முதல் அரசியலில் ஈடுபட்டு வரும் நீதன் ஷான் இளம் வயதுடைய தமிழர்கள் கனேடிய அரசியில் ஈடுபடுவதற்கு முன்னுதாரணமாக திகழ்கின்றார்.

மார்க்கம் கல்விச் சபையிலும் ரொரன்ரோ கல்விச் சபையிலும் கல்விச் சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டர். மாணவர்கள் பெற்றோர் மற்றும் இளவயதினர் தொடர்பில் தீவிரமாக செயல்பட்டு வருபவர். அதன் காரணமாக ஏராளமான தன்னார்வத் தொண்டர்களையும் ஆதரவாளர்களையும் கொண்டுள்ளார்.

அரசியலில் ஈடுபடுவதற்கு முன்னர் சமூக அக்கறையும் அதனை நோக்கிய செயல்பாடுகளும் ஏன் அவசியம் என்பதற்கு நீதன் ஷான் சிறந்த உதாரணம்.

தற்போது ரொரன்ரோ நகர சபை உறுப்பினராக செயல்பட்டு வரும் நீதன் இந்த நகர சபையின் முக்கியமான செயல்பாட்டுக் குழுக்களில் பிரதான பங்களிப்பாளராக விளங்குகின்றார்.

குறிப்பாக ரொரன்ரோ நகர சபையும் இலங்கையின் வட மாகாண சபையும் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டதற்கும் அதற்கு செயல் வடிவம் கொடுத்தமையின் பின்னால் நீதன் ஷானின் கடுமையான உழைப்பு இருந்துள்ளது.

இந்த ஒப்பந்தந்தின் ஒரு பகுதியாக கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் ஊடாக வட பகுதியின் தொழில் முனைவோரின் உற்பத்திகளுக்கு கனேடிய சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கையும் அமைந்துள்ளது.

வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் உற்பத்திகளில் கனேடிய சந்தைக்குப் பொருத்தமான உற்பத்திகள் மற்றும் அதனை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்கள் தொடர்பான விபரக் கோவை ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக வட பகுதியில் உள்ள உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் தொடர்பான விபரங்களை கனடாவில் உள்ள நுகர்வோரும் வரத்தக சமூகத்தினரும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

இந்த நடவடிக்கையானது வட பகுதி வர்த்தக உற்பத்தியாளர்களுக்கு நன்மைகளை ஏற்படுத்தும் என்று வடமாகாண வர்த்தக சமூகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதேவேளை ரொரன்ரோவில் உள்ள வர்த்தக உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு ரொரன்ரோ நகர சபை மூலமாக கிடைக்கக் கூடிய வரப்பிரசாதங்களை தெரியப்படுத்தும் விதமான கருத்தரங்குகள் சிலவற்றையும் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து முன்னெடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

கனடாவில் வாழும் எமது சமூகத்திற்கு மட்டுமன்றி தாய மக்களுக்குமான உதவிகளை வழங்குதற்கான திட்டங்களை தனக்குள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை கொண்டு குறுகிய காலத்தில் மேற்கொண்டு வரும் நீதன் ஷானின் நடவடிக்கைகள் வரவேற்பிற்குரியவை.

பல பருவங்களாக ஒரே பதவியில் ஒட்டிக் கொண்டிருந்து விட்டு தனது சமூகத்திற்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய பங்களிப்புகள் எதனையும் செய்யாமல் தனக்கு பின்னரும் அந்த பதவியினை வேறு எவரும் பெற்றுவிடக் கூடாது என கங்கணம் கட்டி நிற்கும் ஒரு சிலர் மத்தியில் நீதன் வித்தியாசம் காட்டி நிற்கின்றார்.

எமத சமூகத்தில் இருந்து ஆளுமை மிக்க தலைவர்கள் உருவாக வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டி வரும் நீதன் போன்றவர்களுக்கு உரிய சந்தர்ப்பங்களை எமது சமூகம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஏனைய சமூகங்களுக்கு கிடைத்து வரும் நகர சபையின் வரப்பிரசாதங்கள், ஆலோசனைகள் மற்றும் உதவிகளை தெற்காசிய சமூகங்களும் பெறுவதை உறுதிப்படுத்துவதில் நீதன் ஷான் தீவிரம் காட்டி வருகின்றார்.

இந்த பதவிக்காலத்தில் அவர் முன்னெடுத்து வரும் சிறப்பான திட்டங்கள் தொடர்வதற்கும் இன்னும் பல புதிய திட்டங்களை ரொரன்ரோவில் வாழும் பல்லின சமூகங்கள் பெறுவதற்கும் ஆழுமையும் அர்ப்பணிப்பும் மிக்க நீதன் ஷான் மீண்டும் நகர சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டும் என்று தமிழ் சமூகம் எதிர்பார்ப்பினை வெளிப்படுத்தியுள்ளது.

இதேவேளை தற்போதுள்ள அரசியல் மாற்றங்கள் மற்றும் நகர சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைப்பு போன்ற காரணிகள் நீதன் ஷானின் வெற்றியில் கணிசமான தாக்கத்தை செலுத்தும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எனவே நீதன் ஷானின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு அவருடைய வட்டாரத்தில் உள்ள வாக்களிக்கும் தகுதி வாய்ந்த தமிழர்கள் அனைவரும் வாக்களிப்பில் கலந்து கொண்ட வாக்களிப்பது முக்கியமானது என்று சமூக ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சமூகத்துடன் எந்த விதமான தொடர்புகளும் இல்லாமல் தேர்தல் காலங்களில் திடீரென முளைக்கும் அரசியல் தலைகளும் வால்களும் போல் அல்லாமல் முழு நேரமாக அரசியலிலும் சமூகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி வரும் நீதன் ஷான் அவர்களை அடுத்த மாதம் நடைபெறவுள்ள நகர சபைத் தேர்தலில் வெற்றி பெற செய்ய வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும்.

இதேவேளை தற்போதுள்ள அரசியல் மாற்றங்கள் மற்றும் நகர சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைப்பு போன்ற காரணிகள் நீதன் ஷானின் வெற்றியில் கணிசமான தாக்கத்தை செலுத்தும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எனவே நீதன் ஷானின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு அவருடைய வட்டாரத்தில் உள்ள வாக்களிக்கும் தகுதி வாய்ந்த தமிழர்கள் அனைவரும் வாக்களிப்பில் கலந்து கொண்ட வாக்களிப்பது முக்கியமானது என்று சமூக ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வரதராஜா

## மார்க்கம் நகரசபை வேட்பாளர் வட்டாரம் 7

## வாக்குகள் மட்டுமல்ல... உங்கள் எண்ணங்களும் தேவை!

## இணைந்து பயணிப்போம்

தமிழ்ச் சமூகத்தின் மேல் மாறாத பற்றுறுதி கொண்டவர். தனது மக்களின் நலன்களுக்காக சிறுவயது முதல் செயற்பட்டு வருபவர். தனது சமூக சேவையாலும், தொண்டர் பணியாலும், அரசியல் ஈடுபாட்டாலும் தமிழ் மக்களாலும், ஏனைய சமூகத்தவராலும் நன்கு அறியப்பட்டவர்.

மார்க்கம் 7ஆம் வட்டாரத்தில் கடந்த 12 வருடங்களாகவும், மார்க்கம் நகரில் 15 வருடங்களாகவும் வசித்து வருபவர்.

ரொரன்ரோ மற்றும் ஒன்ராரியோ Art Council நிதி மானிய கொடுப்பனவு வழங்கும் பிரிவில் Juror ஆகக் கடமையாற்றியவர். இதன்போது, அதுவரை காலமும் ஏனைய சமூகங்கள் மாத்திரம் பெற்று வந்த மானியக் கொடுப்பனவை தமிழ் கலைப்பள்ளிகளுக்கு பெற்றுக் கொடுத்ததன் மூலம் தமிழ்ச் சமூகத்தின் மீதான தனது பற்றுதலை உறுதிப்படுத்தியவர்.

தனது 18 ஆவது வயதில் தாயக மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை, ஏனைய சில மாணவர்களோடு இணைந்து ஒழுங்கு செய்து ஒட்டாவாவில் நடத்தியவர். தாயகத்தில் விதவைப் பெண்கள் மற்றும் அனாதைச் சிறுவர்களின் நல்வாழ்வுக்கான செயற்திட்டங்களில் இணைந்து பணியாற்றியவர்.

எம் மண்ணில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின் பின்னான நிவாரணப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

இளைஞர் விழிப்புணர்வு தொடர்பான தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றைத் தயாரித்து, தானே வழங்கியவர். மார்க்கம் முதியோருக்கான "குளிர்கால ஆரோக்கிய வாழ்வு" என்ற செயற்திட்டத்தை வழங்கியவர்.

Cedarwood Public School பெற்றோர் சங்கத்தின் தலைவராக கடமையாற்றியவர். Business Plan Development and Business Plan Implementation நெறியில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்.

மார்க்கம் நகரப் போக்குவரத்து, நெரிசல் மற்றும் பொழுதுபோக்கு மையங்களின் பாதுகாப்பு குறித்த கரிசனையையும் தீர்வுகளுக்கான எண்ணங்களையும் கொண்டவர்.

மார்க்கம் நகரசபை செயற்பாடுகள், அதன் வட்டார வரையறை மற்றும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான பரிச்சயம் உள்ளவர்.



**சிந்தாத சிதறாத வாக்குகளே எம் வெற்றியைத் தீர்மானிக்கும்**

*ஒரு தெரிவு ஒரே தெரிவு*

**வாய்ப்புள்ளவருக்கு வாக்களிப்போம் எம்மிடத்தைத் தக்க வைப்போம்.**

www.MalarVaratharaja.com | 416-841-3435 | malarvaratharaja@gmail.com

Campaign office: 20 New Delhi Dr, Unit 96 (Markham & New Delhi Dr)

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்காபுறோ முது தமிழர் சங்கம் ஆண்டுவிழாவும் கலைநிகழ்வும்










ஸ்காபுறோ முது தமிழர் சங்கம் ஆண்டுவிழாவும் கலைநிகழ்வும்வெகு சிறப்பாக ஒகஸ்ட் 18 ம் திகதி தமிழ் இசை கலாமன்றத்தில் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி, மாகாணசபை உறுப்பினர் விஜய் தணிகாசலம் உற்பட பலரும் கலந்து சிறப்பித்தார்கள்


# மார்க்கம் ஏழாம் வட்டாரத்தில் போட்டியிடும் மலர் வரதராஜா அவர்களது தேர்தல் பரப்புரை நிகழ்வு











மார்க்கம் ஏழாம் வட்டாரத்தில் போட்டியிடும் மலர் வரதராஜா அவர்களது தேர்தல் ஆதரவாளர்கள் நிகழ்வு கடந்தமாதம் ஓகஸ்ட் மாதம் அவரது தேர்தல் மணிமனை திறப்பு நிகழ்வுடன் நடைபெற்றது . இதில் பெருமளவிலான ஆதரவாளர்கள் , ஊடக நண்பர்கள் பலரும் இந்நிகழவில் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக அபிவிருத்தி நோக்கி நீளும் கரங்கள் வன்னிச் சங்கம்

கனடாவில் இயங்கி வரும் சமூக அமைப்புகளில் வன்னிச் சங்கம் என அறியப்படும் வன்னித் தமிழர் கலாசார சமூக அமையம் மிகவும் முக்கியமானது.

சமூக மாற்றங்களின் மூலமாகவே உண்மையான மறுமலர்ச்சியினையும் அபிவிருத்தினையும் ஏற்படுத்த முடியும் என்று உறதியாக நம்பும் சில அமைப்புகளில் வன்னிச் சங்கம் முக்கியமானது.




கனடாவில் வாழும் வன்னி மக்களின் பங்களிப்போடு கடந்த பல வருடங்களாக இந்த அமைப்பு பல்வேறு வெற்றிகரமான திட்டங்களை இந்த அமைப்பு முன்னெடுத்து வருகின்றது. வந்தோரை வாழவைக்கும் வன்னி மண்ணின் விருந்தோம்பல் பண்பும் சமூக நலன் குறித்த அக்றையும் கொண்ட பலரின் கடின உழைப்பினால் இந்த அமைப்பு கனடாவில் அசைக்க முடியாத பெரு விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது.

**கொம்பறை என்ற நூலை தமது வருடாந்த நிகழ்வுகளில் வெளியிட்டு வரும் வன்னிச் சங்கம் அதில் தமது வருமானங்களையும் செலவீனங்களையும் பிரகரிக்கின்றது.**

இதன் மூலமாக அது வெளிப்படைத் தன்மையினையும் மக்கள் மத்தியிலான நம்பிக்கையினையும் தொடர்ந்தும் பேணி வருகின்றது.

வன்னிப் பெரு நிலப்பரப்பினை தாண்டி கிழக்கு மாகாணத்திலும் வாழ்வாதார உதவிகள் மாணவர்களின் கல்வி செயல்பாடுகளுக்கான உதவிகளுக்கு இந்த அமைப்பினால் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கோரமான யுத்தம் பேரழிவுகளை ஏற்படுத்திய வன்னிப்பெருநிலப்பரப்பை விடவும் மோசமான அவலங்களை சுமந்து நிற்கும் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை வரை வன்னிச் சங்கத்தின் உதவிகள் நீள்வதை அவதானிக்க முடிகின்றது.

இந்த உதவிகளை நேரடியாக அந்த மக்களுக்கு வழங்குவதும் உதவி வழங்குனர்கள் மற்றும் உதவி பெறுபவர்களுக்கு இடையிலான இணைப்பு பாலமாக செயல்படுவதிலும் வன்னிச் சங்கம் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கி வருகின்றது.

உதவி தேவைப்படுகின்ற குடும்பங்களையும் மாணவர்களையும் சரியான முறையில் இனம் காண்பதில் தொடங்கி அவர்களுக்கான உதவிகள் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்வது வரையில் திட்டமிடல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன.

அண்மையில் அம்பாறையிலும் வன்னியில் மல்லாவிப் பகுதியிலும் வன்னிச் சங்கத்தின் மூலமாக உதவி பெறும் பலரை சந்திக்க முடிந்தது.

அந்த குடும்பங்களின் வாழ்வில் புலம்பெயர் நாடுகளில் இருந்து வழங்கப்படும் சிறிய உதவிகள் ஏற்படுத்தி நிற்கும் பெரிய மாற்றங்களை நேரடியா உணர முடிந்தது.

அங்கு வன்னிச் சங்கத்தின் சார்பில் மேற்கொள்ப்பட்டு வரும் பல திட்டங்களையும் அவதானிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

வாழ்வாதார உதவிகளின் அடிப்படையில் பசுமாடுகள் மற்றும் கோழிகள் வழங்கி வைக்கப்படுகின்றன.

அவற்றை எழுந்தமானமாக வழங்காமல் அதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு அந்த குடும்பங்களை அதற்காக தயார் படுத்தி அவற்றை பராமரிப்பதற்கான பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கி அதன் பின்னரே பசுமாடுகளும் கோழிகளும் அந்த குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்த செயன் முறையின் மூலமாக உதவி தேவைப்படும் குடும்பங்களை சரியாக அடையாளம் காண முடிவதோடு இந்த உதவிகள் அவர்களுக்கு உரிய பலனை அளிப்பை உறுதிப்படுத்த முடிவதாக அங்குள்ள தன்னார்வத் தொண்டர்கள் குறிப்பிட்டனர்.

பெற்றொரை இழந்த இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்கான சிறப்பு உணவுகளை வழங்குதல், பெண் தலைமைத்தவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள், தங்குமிட வசதிகளை ஏற்படுத்தல் மருத்துவ உதவிகள் என கல்வி முன்னேற்றம் என பல தளங்களில் அது நிலையான பங்களிப்பை தாயக மக்களுக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**கல்விச் செயல்பாடுகளை முன்னெடுப்பதில் பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொள்ளும் மாணவர்களுக்கு மாதாந்தம் கல்வி செயற்பாடுகளுக்கான நிதி உதவி வழங்கும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது.**

அந்த திட்டத்தின் மூலம் உதவி பெறும் மாணவர்களின் கல்வி முன்னேற்றம் குறித்த அறிக்கைகள் அவர்களின் கற்றல் செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த அறிக்கைகள் பாடசாலை சமூகத்திடம் இருந்து பெறப்பட்டு நன்கொடையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பபடுகின்றன.

**மாதா மாதம் நன்கொடை யாளர்களின் பெயரில் உதவி பெறும் மாணவர்களின் வங்கி கணக்கில் வைப்பிலடப்படும் தொகைக்கான ஆதாரமும் அனுப்பி வைக்கப்படுகின்றது.**

அதேவேளை உதவி பெறும் மாணவர்களுக்கு குறித்த நிதி உதவிகள் உரிய காலத்தில் சென்று சேர்கின்றனவா என்பதை நன்கொடையாளர்கள் நேரடியாக அந்த மாணவர்களின் குடும்பத்தை தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நன்கொடையாளர்கள் வழங்கும் உதவிகள் குறித்த உதவி பெறுனரை சென்றடைவதை உறுதிப்படுத்துவதும் உண்மையில் தேவை உடையவர்கள் அந்த உதவியினை பெறுவதம் அதன் மூலம் கல்வி முன்னேற்றம் காண்பதும் இன்றியமையாதவை.

இதனை சரியான முறையில் மேற்கொண்டு வருவதையும் இதன் காரணமாக ஐநூறுக்கும் அதிகமான மாணவர்கள் தமது கல்விச் செயல்பாடுகளை இடையூறின்றி தொடர்வதையும் அவதானிக்க முடிகின்றது.

**அதேவேளை இந்த உதவித் திட்டத்தின் மூலமாக மாணவனாக இருந்து நன்மையினை பெற்றுக் கொண்ட ஒருவர் இன்று யாழ் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக மாறியிருக்கின்றார். இது இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதன் வெற்றியினையும் இது எடுத்துக் கூறி நிற்கின்றது.**

வன்னிச் சங்கம் மல்லாவிப் பகுதியில் சமூக நிலையம் ஒன்றை உருவாக்கி வருகின்றது. இதற்கான உதவிகளை பல்வேறு நாடுகளிலும் இருந்து மக்கள் வழங்கி வருகின்றனர். எனினும் இந்த திட்டத்தை பூர்த்தி செய்வதற்கும் அதனை இயங்கு நிலையில் பேணுவதற்கும் மேலம் பல இலட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாக வன்னிச் சங்கம் குறிப்பிடுகின்றது. இதுவரை நன்கொடையாளர்களின் உதவிகளின் ஊடாக இந்த நிலையத்திற்கான கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மருத்தவர்களின் சங்கத்தின் ஒத்துழைப்புடனும் சமூக நலன் விரும்பிகளின் பங்களிப்புடனும் இந்த திட்டம் தொடர்ச்சியான முன்னேற்றப்பாதையில் பயணிக்கின்றது.

இந்த பயணத்தின் வேகத்தை அதிகரிப்பதற்கும் இதனைசெயல்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கும் இன்னமு; ஈரம்காயத இதயங்களின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த சமூக நிலையத்தின் மூலமாக மாணவர்களுக்கான இலவச வகுப்புகளையும் கணனி பயிற்சி மற்றும் கணனிக் கூடம் என்பவற்றையும் ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதே சமயம் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் உற்பத்தி கூடங்கள் சிலவற்றையும் இந்த சமூக நிலையத்தில் உருவாக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

**இந்த சமூக நிலையத்தின் ஊடாக கணனிப் பயிற்சிகளை பெற்றுக் கொண்டவர்களுக்கு வெளிநாடுகளில் உள்ள சில தொழில் முனைவோர் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு உறுதியளித்துள்ளனர்.**

இதன் மூலம் இந்த சமூக நிலையத்தில் உள்ள கணனிக் கூடத்தை தொழில் கூடமாகவும் பயன்படுத்த முடியும். இத பதிய தொழில் வாய்புகளை அங்குள்ள இளைஞர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்.

அதே வேளை வேறு சமூக அமைப்புகள் தமது பயிற்சி



வகுப்புகளையும் பட்டறைகளையும் இந்த சமூக நிலையத்தில் நடத்த முடியும்.

இதன் ஒரு பகுதியில் சிறிய அளவிலான உற்பத்திகளை மேற்கொள்ளும் வகையிலான உற்பத்தி கூடங்களை ஏற்படுத்தவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இந்த சமூக நிலையம் மல்லாவிப் பகுதியில் வாழும் வறிய மாணவர்களின் கல்வி எதிர் காலத்திற்கு முக்கியமான பங்களிப்பினை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது உருவாக்கப்படுவதோடு மட்டுமன்றி தன்னிச்சையாக தொடர்ந்து இயங்குவதற்குரிய பொருளாதாரக் கட்டமைப்பையும் உருவாக்க வேண்டும் அப்போது தான் இதன் மூலமான நன்மைகளை அங்கு வாழும் மக்கள் தொடர்ந்தும் பெற முடியும் என வன்னிச் சங்கத்தினர் குறிப்பிடுகின்றனர்.

**இந்த சமூக நிலையம் மற்றும் அது கொண்டுள்ள செயல்பாட்டு வடிவம் வெற்றி பெற வேண்டும் அதன் மூலமாகவே இது போன்ற கட்டமைப்புகளை ஏனைய பகுதிகளில் உருவாக்குவதற்கு அந்த பகுதி மக்கள் முன்வருவார்கள்.**

மல்லாவியல் வன்னிச் சங்கம் உருவாக்கி வரும் சமூக நிலையத்தின் வெற்றியின் ஊடாக ஒரு சமூக மாற்றத்திற்கான அடித்தளம் ஏற்படத்தப்படும் என்றும் நம்பிக்கை வெளியிடப்படுகின்றது.

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீரிழிவு என்பது ஒரு நோயன்று

இந்த பகுதி முழுவதும் நீரிழிவைப் பற்றி விரிவாகக் காண்போம் வாருங்கள்.

நீரிழிவு என்பது ஒரு நோயன்று அது நம் உடலில் உள்ள கணையம் என்ற உறுப்பில் இருந்து சுரக்கப்படும் இன்சுலின் எனும் ஹார்மோனின் குறைபாடு அல்லது சரியாக அது தனது பணியை செய்யாமல் இருப்பதால் வருவதாகும். இன்சுலின் ஹார்மோன் சுத்தமாக சுரக்காமல் போவதை டைப் ஒன்று டயாபடிஸ் என்றும் இன்சுலின் சுரந்தாலும் சரியாக வேலை செய்யாமல் இருப்பதை டைப் டூ டயாபடிஸ் என்றும் அழைக்கிறோம்.

டைப் ஒன்று டயாபடிஸ்க்கு கட்டாயம் வெளியில் இருந்து நாம் இன்சுலினை கொடுக்க வேண்டும். டைப் டூ டயாபடிஸ் குறைபாடு உள்ளவருக்கு இன்சுலினை சரியாக வேலை செய்ய வைக்கும் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. இன்றைய சூழலில் இந்தியாவில் மட்டும் சுமார் 8 கோடி நீரிழிவு நோயாளிகள் வாழ்ந்து வருகின்றனர். இந்த எண்ணிக்கை 2030 இல் இரட்டிப்பாகும் என்கின்றன ஆய்வுகள். நீரிழிவு எனும் இந்த குறைபாட்டை அறிவது எப்படி?

நீங்கள் முப்பது வயதுக்கு மேல் உள்ளவராய் இருந்தால் வருடம் ஒரு முறையேனும் உங்கள் Hba1c அளவுகளை பரிசோதனை செய்து கொள்வது நல்லது. அது என்ன Hba1c ? நம் ரத்தத்தில் கடந்த மூன்று மாதங்களாக எந்த அளவு சர்க்கரை இருந்தது என்பதை சொல்லும் ஒரு பரிசோதனை. இந்த பரிசோதனை தான் நீரிழிவு நோயை கண்டறிய தற்போதைய முக்கியம் வாய்ந்த பரிசோதனையாக முன்னிறுத்தப்படுகிறது. இத்துடன் காலை வெறும் வயிற்றிலும் உணவு சாப்பிட்ட பின் இரண்டு மணிநேரம் சென்ற பின் பரிசோதனையும் செய்தால் நம் நீரிழிவு நோயின் நிலவரம் தெரிந்து விடும். Hba1c எப்போதும் 5.5 என்ற அளவுக்கு உள் இருக்க வேண்டும் . 5.5 முதல் 6 இருப்பதை Impaired glucose tolerance என்று கூறுவோம். அதாவது இன்சுலின் சரியாக வேலை செய்ய மறுக்கும் ஆரம்ப நிலை என்று பொருள். 6 க்கு மேல் 7 க்குள் இருந்தால் ஆரம்ப நிலை நீரிழிவு . 7 முதல் 8 .. அடங்காத நீரிழிவு 8 க்கு மேல் என்றால் அது ஆபத்தான நீரிழிவு.

ஏன் ரத்த சர்க்கரையை நாம் சரியாகபேண வேண்டும்? நம் உடலில் உள்ள அனைத்து செல்களுக்கும் நான் மாவுச்சத்தை முக்கிய உணவாக உண்ணும் போது க்ளூகோஸ் எனும் மூலப்பொருள் தான் எரிபொருளாக கொடுக்கப்படும். அளவுக்கு மிஞ் சினால் அமிர்தமும் நஞ்சு தானே. அதைப்போல தேவைக்கு மேல் ரத்தத்தில் க்ளூகோஸ் இருந்தால் தேவைக்கு மேல் செல்களுக்கும் க்ளூகோஸ் புகட்டப்படும். இது செல்கள் அனைத்தையும் பிரச்சனைக் குள்ளாக்குகிறது. முக்கியமாக நமது உறுப்புகளான சிறுநீரகம், நரம்பு மண்டலம், இதயம், கண்கள், ரத்த நாளங்கள் என்று அனைத்தையும் செயல் இழக்கச்செய்யும் அளவு இந்த நீரிழிவின் தன்மை இருக்கிறது.

ரத்த சர்க்கரை மிகவும் அதிகமானால் அதை வடிகட்டி வெளியேற்றும் நமது சிறுநீரகம் நாளடைவில் பழுதடைகிறது. இதை டயாபடிக் நெஃப்ரோபதி என்கிறோம். இந்த சிறுநீரக நோய் தான் பல நீரிழிவு நோயாளிகளை பிரச்சனைக்குள்ளாக்கி டயாலிசிஸ் பின்பு மரணம் வரை கொண்டு செல்கிறது. நமது கை கால்களின் நரம்பு மண்டலத்தை பாதித்து அதன் ரத்த ஓட்டத்தை குறைத்து ஒரு வித மதமதப்பு தன்மை பிறகு உணர்ச்சி இன்மையை கொண்டு வருகிறது. இதை டயாபடிக் நியூரோபதி என்கிறோம். ஒரு காலத்தில் காலில் செருப்பு கூட நிற்காமல் கழன்று கழன்று நலுவும் அளவு நோய் முத்திப்போகும். கால்களில் ஏற்படும் புண்கள் அந்த நோயாளிக்கு தெரியாது. வலியும் இராது. அந்த புண் நன்றாக கிருமி வைத்து முற்றிப்பெரிதாகி கால்களை அகற்றும் நிலை வரை கொண்டு வந்து விடும். கண்களின் விழித்திரை எனும் ரெட்டினாவை பாதிப்புக்குள்ளாக்கி நிரந்தர குருடராய் அலைய விடும் அளவு நீரிழிவு கொடிய நோயாகும்.

இதைடயாபடிக்ஆப்தால்மோபதி என்போம்.

கூறிய இந்த நோய்கள் அனைத்தும் ஓரிரு வருடங்களில் தோன்றுவது இல்லை. சிறிது சிறிதாக அந்த உறுப்புகளை அழித்து முழுமையாக உறுப்பை சீரழிக்க முப்பது வருடங்கள் வரை கூட நீரிழிவு எடுத்துக்கொள்ளும்.

இப்போது ஒருவருக்கு முப்பது வயதில் நீரிழிவு வருகிறது என்று வைத்துக்கொள்வோம். அவர் தனது ஐம்பது வயது வரை கூட வெளியில் எந்த பிரச்சனையும் இன்றியே இருப்பார் ஆனால் தனது ஐம்பது வயதுக்கு மேல் உள்ள காலத்தை மண்ணில் நரகம் போல் கழிக்க நேரிடும்.

காரணம் நீரிழிவினால் செயல் இழந்த உறுப்புகளை மீண்டும் சரி செய்ய இயலாது. நீரிழிவினால் ஒருவருக்கு கிட்னி முழுவதுமாக பழுதடைந்து விட்டால் அந்த கிட்னிகளை சீர்செய்ய இயலாது , வேறு ஒருவரிடம் வாங்கிய கிட்னிகள் தான் பயன்படும். வாழ்க்கையில் நம் பகலவன் கூட நமக்கு சில நேரங்களில் பரிவும் இரக்கமும் காட்டுவான். ஆனால் இந்த நீரிழிவு நோய் இரக்கம் காட்டுவதே இல்லை. இப்படிப்பட்ட இந்த நீரிழிவை பற்றிய விழிப்புணர்வு நம் மக்களிடம் எவ்வளவு அதிகமாக இருக்க வேண்டும் ? ஆனால் ஆரம்ப நிலை அறிவு கூட இல்லை என்பதே உண்மை.

நீரிழிவு என்பது மாவுச்சத்து எனும் கார்போஹைட்ரேட்ஸை செரிமானம் செய்வதில் உடலில் ஏற்படும் கோளாறு என்பதை மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். பின்பு எந்தெந்த உணவுகளில் எல்லாம் மாவுச்சத்து நிறைந்துள்ளது ? எதை உண்ணலாம்.? எதை தவிர்க்கலாம்? கொழுப்பு மீது ஏற்படுத்தப்பட்டதவறான களங்கம்? இவையனைத்தையும் பற்றி மக்களுக்கு உணர்த்த வேண்டும். மாவுச்சத்து என்பது நாம் உண்ணும் அனைத்து உணவுகளிலும் நீக்கமற நிறைந்து இருக்கிறது. ஒரு நீரிழிவு நோயாளி தான் தினமும் உண்ணும் உணவில் 20 கிராம் முதல் 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம் வரை மாவுச்சத்து உண்டால் போதுமானது. ஆனால் நாம் நமது அன்றாட உணவு முறையில் 300 முதல் 400 கிராம் மாவுச்சத்து சாப்பிடுகிறோம். தேவைக்கு மேல் இருமடங்கு சாப்பிட்டால் கூட பரவாயில்லை. தேவைக்கு மேல் பத்து மடங்கு சாப்பிடுவதால் தான் நீரிழிவு இத்தனை வேகமாக சமூகத்தில் பரவி வருகிறது.இந்த நீரிழிவு நோய்க்கு பேலியோ வழி விடை காண்போம் வாருங்கள்.



நீரிழிவு நோயாளிகள் தவிர்க்க வேண்டிய உணவுகள் பின்வருமாறு.— அரிசி , கோதுமை , சிறுதானியங்கள் போன்ற மாவுச்சத்து நிரம்பிய தானியங்களை தவிர்க்க வேண்டும் . பழங்களில் இருப்பது கெட்ட சர்க்கரையான ஃப்ரக்டோஸ் ஆகும் . இது நம் கல்லீரலை பழுது செய்யும் தன்மை கொண்டாதாக இருப்பதால் இனிப்பு நிறைந்த பழங்களை கட்டாயம் தவிர்த்தாக வேண்டும். மண்ணிற்கு கீழ் விளையும் காய்கறிகள் மற்றும் கிழங்கு வகைகைளை நீரிழிவு நோயாளிகள் தவிர்க்க வேண்டும்.

எண்ணெயில் பொறித்த உணவுகள், பண்டங்கள், குளிர்பானங்கள், சாக்லேட், கேக்குகள் போன்றவற்றை விட்டு வெகுதூரம் சென்றுவிட வேண்டும். அது சரி நாம் இதுவரை தினமும் சாப்பிட்டு வந்த உணவுகளை வேண்டாமென்று கூறிவிட்டோம். பிறகு நீரிழிவு நோயாளிகள் எதைத்தான் உண்பது?

மாவுச்சத்து சிறிதும் இல்லாத முட்டைகள் , மாமிசம் போன்றவற்றை உண்ணலாம். மாவுச்சத்து குறைவான பச்சை காய்கறிகள் , பால் மற்றும் பால் பொருட்களான வெண்ணெய், நெய் , பனீர் போன்றவற்றை உண்ணலாம். இதுவரை தீண்டத்தகாதவை என்று ஒதுக்கி வைத்த உணவுகளில் தான் நீரிழிவிற்கான தீர்வு இருக்கிறது.

பேலியோ உணவு முறையை கடைபிடிக்கும் நீரிழிவு நோயாளிகள் தினமும் காலை உணவாக 4 முட்டைகளை உண்ணலாம். முட்டைகளில் துளி மாவுச்சத்து இல்லை. சைவ உணவு உண்பவர்கள் பாலில் வெண்ணெய் கலந்து பருகலாம் அல்லது பாதாம் பருப்பு உண்ணலாம்.

மதியம் 250 கிராம் அளவு நார்ச்சத்துள்ள காய்கறிகளை உண்ணலாம். இரவு ழீ 200 முதல் 300 கிராம் மாமிசம் உண்ணலாம். மாமிசத்தில் மாவுச்சத்து இல்லை. புரதம் மற்றும் நல்ல கொழுப்பு உள்ளது. சைவ உணவு உண்பவர்கள் 200 கிராம் அளவு பனீர் சாப்பிடலாம். உணவுக்கு இடையில் உண்ணப்படும் ஸ்நேக்ஸாக கொய்யாகாய், வெள்ளரிக்காய், நெல்லிக்காய் , தேங்காய் போன்றவற்றை உண்ணலாம். உப்பு கலந்த லெமன் ஜூஸ் பருகலாம்.

இப்படி பேலியோ உணவு முறையில் நீரிழிவு நோயாளி உண்ணும் பொழுது தனது ரத்த சர்க்கரை அளவுகள் நன்றாக குறைவதை காணலாம். இது பலரும் உணர்ந்து பார்த்த உண்மை. குறை மாவு நிறை கொழுப்பு உணவு முறையால் நீரிழிவு எனும் குறைபாட்டை முழுவதுமாக களைய முடியும். பேலியோ உணவு முறைக்கு வந்த பலர் நீரிழிவு மாத்திரைகளை முழுவதுமாக நிறுத்தி உள்ளனர். பலருக்கு குறைந்த அளவிலான மாத்திரைகளிலேயே நல்ல கண்ட்ரோல் கிடைக்கிறது. உங்கள் உறவினர்கள், நண்பர்கள் யாரேனும் கட்டுக்கடங்காத நீரிழிவினால் பாதிப்புக்குள்ளாகியிருந்தால் அவர்களுக்கு நீங்கள் தாராளமாக பேலியோவை பரிந்துரை செய்யலாம்.

பேலியோவை தொடர விரும்பும் ஒரு நீரிழிவு நோயாளி என்ன செய்ய வேண்டும் என்பதை அடுத்த பகுதியில் விரிவாக காண்போம்.


விசேட சலுகை விலையில்



SAVE UP TO $1350

SMART HOME MONITORING

UNLIMITED
**INTERNET**
TV - HOME PHONE



தமிழில் உரையாட அழையுங்கள்
சுந்தர் சின்னத்தம்பி
Rogers Local Area Advisor
**416.908.6845**
puvanendran.sinnatha@rci.rogers.com


ROGERS™




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்றைய இன்றைய திருமண வாழ்க்கையும்



நாம் நாடுவிட்டு இன்னொரு நாட்டுக்கு இடம்பெயர்ந்து வாழ்வாதாரம் தேடும் முயற்சியில், நமது கலாச்சார குடும்ப வாழ்வின் முக்கியத்துவத்தை கைவிட்டு விட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது. நம் முன்னோர்கள் நமக்கு பல கட்டுக் கோப்புகளைச் சொல்லி வளர்த்தார்கள். அதன்படி, நம்மில் பலர் இடம்பெயர்ந்தும் அதை பின்பற்றி வருகிறோம். ஆனால், அடுத்த தலைமுறைக்கு அதை எடுத்துச் செல்ல அல்லது அதைஎடுத்துரைக்கமுடியாமல் மேலைநாட்டு கலாச்சாரத்திற்கும், நம் கலாச்சாரத்திற்கும் இடையில் சிக்குண்டு தவிக்கின்றோம். குறிப்பாக இன்றைய இளைய தலைமுறைகள் குடும்ப வாழ்க்கையில் சந்தோசமாக இருக்க முடியாமல், சகிப்புத் தன்மை இல்லாமல் குடும்ப வாழ்க்கை பிரித்துக் கொண்டு தனித்து வாழவோ அல்லது வேறு மணம் செய்யவோ தயராக உள்ளனர். நாம் எதிர்நோக்கும் இன்னும் ஒரு பிரச்சனை Inter Cultrual Marriage அதாவது வேற்று இன திருமணம் செய்துக் கொள்ளல். இந்த திருமணங்களில் பலர் சந்தோசமாக கூட இருக்கலாம். ஆனால், அடுத்த சந்ததிகள் தமது அடையாத்தை தொலைத்து வாழ வேண்டி நேரிடும்.

நமது சமுதாயத்தில் தற்போது என்றுமே சந்தித்திராத விவகாரத்தை நாம் பார்க்க கூடியதாக உள்ளது. விவகாரத்து மேலை நாட்டு கலாச்சாரத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு விடயமாகவே இன்றைய இளைஞர்கள் மத்தியில் காணப்படுகிறது. இந்த குடும்ப வாழ்க்கையை எவ்வாறு சிறப்பாக வாழ்வது என்பதை பற்றிய ஒருசில ஆலோசனைகளை இங்கு பகிர்ந்துக் கொள்ளலாம் என எண்ணி இதை உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

திருமணம் செய்வதற்கு முன் நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ளுதல் முக்கியம். ஒருவரை திருமணம் செய்யும் முன்னர் நாம் ஒருவருக்கொருவர் ஒரு உறுதிமொழியை வழங்க வேண்டும். அதாவது ஆண், பெண்ணுக்கு கொடுக்க வேண்டியது ஒரு பாதுகாப்பு உறுதிமொழி மற்றும் பெண், ஆணுக்கு கொடுக்க வேண்டியது அன்பும், ஆதரவும். இந்த உறுதிமொழியை திருமண நாள் அன்று புரோகிதருக்கு அல்லது பாதிரியாருக்கு முன்பு ஒப்புதலுக்காக கூறாமல் உளமார்ந்து கூறி அதன்படி வாழ வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பு பாசம் வைத்து அதை வழங்க வேண்டும். வெறுமனே சமுதாய நிர்ப்பந்தத்திற்காகவும், பெற்றோரின் நிர்ப்பந்தத்திற்காகவும் வாழ நினைத்து அந்த உறுதிமொழியை வழங்குவதால் எதற்கும் ஆகாது. ஒருவரை ஒருவர் காதலித்தால் மட்டுமே அது சாத்தியமாகும். ஒரு கணவனோ, மனைவியோ எந்த சந்தர்ப்பத்திலும் ஒருவரை ஒருவர் கைவிட்டு போக மாட்டேன் என ஒரு மன உறுதி கொண்டிருக்க வேண்டும். நம்மில் பலர் ஒரு சின்ன பிரச்சனை அல்லது புரிந்துணர்வு இன்மை வரும் போது இவர் அல்லது இவள் எனக்கு ஏற்றவர் அல்ல என்ற முடிவுக்கு சுலபமாகவே வந்து பிரிந்து விட எண்ணுகிறோம். இன்றைய தலைமுறை திருமணம் செய்து கொள்வதற்கு முன்பே இது சரிவராமல் போனால் இருக்கவே இருக்கு விவகாரத்து என்ற மன எண்ணத்தோடேயே திருமணத்திற்கு தயாராகிறார்கள். இந்த மன எண்ணத்தோடு திருமணம் செய்பவர்கள் மிக சுலபமாக அதிலிருந்து வெளியேறவே எத்தனிப்பார்கள். இது அவர்கள் பிரச்சனைகளை எதிர்நோக்கும் திட நெஞ்சம் இல்லாமல் செய்து விடுகிறது. இந்த நினைப்பில் (Divorce Back up Plan) திருமணம் செய்யும் எந்த திருமணமும் கைகூடி வராது. ஆகையால் அந்த எண்ணத்துடன் திருமணம் செய்ய முன் வராதீர்கள். முடிந்தவரை திருமணத்தை ஒட்டி வைக்க முயற்சிகள் எடுத்தவண்ணம் இருங்கள். இருவரும் ஒரு பிரச்சனைக்கு பின்பு இருந்து சிந்தியுங்கள். ஏன் இந்த பிரச்சனை வந்தது என்று. பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் உட்கார்ந்துப் பேசுங்கள். இப்படி பிரச்சனையை எப்படி வராமல் பார்த்துக் கொள்வது என ஆலோசியுங்கள். நம் முன்னோர்கள் "I Love You" என்ற வார்த்தையை கூற மாட்டார்கள். ஆனால், அதை செயலில் காண்பிப்பார்கள். ஆனால், இன்றைய தலைமுறை அந்த வார்த்தையை சொல்லி அன்பை வெளிப்படுத்தவே விரும்புகிறார்கள். அதனால் அந்த வார்த்தையை அடிக்கடி ஒருவரை நோக்கி ஒருவர் சொல்லி பரிமாறிக் கொள்ளுங்கள். உங்கள் உறவு இன்னும் பலம் பெறும்.

திருமணம் என்பது ஒரு கூட்டு முயற்சி. இது ஒரு விமானத்தை ஒரு இடத்தில் இருந்து கொண்டு இன்னொரு இடத்திற்கு செலுத்தி செல்வது போலாகும். விமான ஓட்டுநரும், துணை விமான ஓட்டுநரும் சேர்ந்து விமானத்தை ஓட்டும் போது பல பிரச்சனைகள் வரும். அதை இருவருமாக சேர்ந்து சமாளித்து செல்லும் போது சரியான இடத்தை சென்றடைவார்கள். அவர்கள் அதை ஒற்றுமையாக, ஒரு கூட்டு முயற்சியாக செய்யாவிட்டால் பாதிக்கப்படப்போவது அவர்கள் மட்டுமல்ல; பயணிகளும் தான். குடும்ப வாழ்க்கையிலும் அப்படித்தான். கணவன், மனைவி கூட்டாக

### ஒருவருக்கொருவர் மதிப்புக் கொடுத்து வாழ பழக வேண்டும்

நம் முன்னோர்கள் வாழும் போது மனைவி கணவனுக்கு மதிப்புக் கொடுத்து பல சமயங்களில் ஒரு அடிமைப் போல கூட சில குடும்பங்களில் வாழ்ந்திருக்கிறார்கள். அதை சரியான மதிப்பு என நான் கருதவில்லை. மதிப்பு என்பது மனதளவில் பரஸ்பரம் இருவருக்கும், ஒரு புரிந்துணர்வுடன் இருக்க வேண்டும். வார்த்தைகள் பரிமாற்றம் செய்யும் போது, எந்த சந்தர்ப்பத்திலும் கெட்ட வார்த்தைகளை பாவித்தோ அல்லது அவர்களுடைய சக குடும்பத்தினரை திட்டியோ, அவமானப்படுத்தும் வகையில் பேசக்கூடாது. உங்கள் மனைவியோ அல்லது கணவனோ வார்த்தைகளை அல்லது அபிப்பிராயங்களை மதித்து அதற்கு செவிமடுத்து பழகுங்கள். ஒருவரையொருவர் ஏளனமாகவோ அல்லது அவமானப்படுத்தும் விதமாகவோ பேசுவது உங்கள் பிரச்சனையை அதிகரித்து பிரிவினையை தூண்ட ஆரம்பமாக அமையும். ஆகையால், அதை தவிர்த்து ஒருவருக்கு ஒருவர் மதிப்புக் கொடுக்க பழகவும். அந்தக் காலத்து தம்பதிகள் பலர் இந்து மதிப்பின்மை குறைவால் பலர் கூடி வாழ்ந்தாலும், அவர்களால் சந்தோசமாக வாழ்க்கையை கொண்டு செல்ல முடிவதில்லை. சிலர் இதனால் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர். அப்படியான வாழ்க்கை ஒரு சந்தோசமான குடும்ப வாழ்க்கையல்ல. ஆகையால், எந்த சந்தர்ப்பத்திலும் வார்த்தைகளை பொறுமையாக, நிதானமாகப் பேச பழகவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து பிரச்சனைகளை சமாளிக்கா விட்டால் பாதிக்கப்படப்போவது நீங்கள் மட்டுமல்ல; உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையும் தான். ஒரு வியாபாரம் வெற்றியாக வர வேண்டும் என்றால், பங்குதாரர்கள் ஒற்றுமையாக உழைக்க வேண்டும். இல்லையேல் அந்த வியாபாரம் சரியாக போகாமல் மூடுவிழா வைக்க நேரிடும். அதுபோல் தான் திருமணமும். நாம் சேர்ந்து உழைக்காமலோ அல்லது பிரச்சனைகளை தீர்க்க முடியாமல் அதை வளர்த்தோமானால் அந்த முயற்சியோ, பிரச்சனையோ ஒருபோதும் தீரப் போவதில்லை. ஒரு விளையாட்டுப் போட்டியில், உதாரணமாக நிணீவமீதீணீறீறீ ஐ எடுத்துக் கொள்வோம். ஒருவருக்கு ஒருவர் Team ஆக விளையாடினால் தான் ஒரு நிணீவமீஇல் இருந்து இன்னொரு நிணீவமீ இற்கு மற்றவரை நகர்த்த முடியும். அப்போது தான் நீங்கள் ஓட்டத்தை பெற்று அந்தப் போட்டியில் பெற்றி பெறுவீர்கள். திருமணம் என்பது தனியாக உங்கள் திறமையைக் காட்டும் விளையாட்டல்ல.

## ஒழுக்கம்

ஒழுக்கமாக நாம் வாழ்ந்தால் தான் நமது பிள்ளைகளும் ஒழுக்கத்தை கற்றுக் கொள்வார்கள். கணவனோ, மனைவியோ ஒழுக்கத்தை கடைப்பிடிக்காவிடில் குடும்பத்தில் பல பிரச்சனைகளை கொண்டுவரும். இது உங்கள் குழந்தைகளின் வாழ்க்கையையும் பாழாக்கும். நமக்கு நாமே ஒரு கோடு போட்டு ஒழுக்கத்தை கடைப்பிடித்தால் தான் நம்மால் எமது குழந்தைகளிற்கு ஒழுக்கத்தை கற்றுக் கொடுக்க முடியும். பிள்ளைகளை வளர்க்கும் போது அவர்களிற்கு இருவருமாக சேர்ந்து ஒரு வரைமுறைகளை போட்டு வளர்க்க வேண்டும். இல்லையேல் பிள்ளைகளால் பிற்காலத்தில் குடும்பத்தில் பிரச்சனை வந்து குடும்பங்கள் பிரிய நேரிடும். அத்துடன் ஒருவரையொருவர் குறை கூறிக் கொண்டே வாழ நேரிடும். ஒருவர் பிள்ளையை ஒழுக்கப்படுத்தி வளர்க்க முற்படும்போது மற்றவரும் சேர்ந்து அதே முறையை பின்பற்றி அந்த ஒழுக்க நெறியை குழந்தையை பின்பற்ற பழக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவர் குழந்தையின் முன் முரண்பாடான கருத்து கொள்ளக் கூடாது. குழந்தைகளை ஒழுங்குப்படுத்துதல் என்பது குழந்தைக்கு குழந்தை வேறுபடும். இது ஒரு கஷ்டமான விடயம். இதை ஒவ்வொரு பெற்றோரும் அந்த குழந்தையுடன் நேரம் செலவு செய்து அதை அறிந்துக கொண்டு அதன் வழியில் அதை வழி நடத்த வேண்டும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் நாம் இந்த சமுதாயத்தில் நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் அடுத்தவர்களுக்கு மதிப்புக் கொடுத்து வாழவும் கற்று தர வேண்டும். நாம் அந்த பழக்கத்தை கடைப்பிடித்து எமது பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்கும்பட்சத்தில் நமது பிள்ளைகளும் வளரும். நீங்கள் நேர்மையானவராக இருந்தால் தான் அதை உங்கள் குழந்தைக்கும் சொல்லி தரமுடியும். தொழில்நுட்பம் வளர்ந்த இந்த காலத்தில் உங்கள் குழந்தை கண்டதையும், குழந்தை பருவத்தில் தொலைபேசியிலோ, கணினியிலோ பார்த்து கெட்டுப்போக வாய்ப்பு உள்ளது. அதனால் நீங்கள் அதை சரியாக உற்று கவனித்து சரி பிழைகளை சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். குழந்தைகளுக்கு சின்ன வயதிலேயே திருமணத்திற்கு முன்பு உடலுறவு வைத்துக் கொள்ளுதல் தவறு என்பதை சொல்லிக் கொடுத்தால் அதை கேட்டு நடப்பார்கள் என ஆராய்ச்சிகள் சொல்கிறது. இதை தான் நம் முன்னோர்கள் எமக்கு சொல்லி தந்த (கலாச்சாரத்தினூடாக) வளர்த்தார்கள். பிள்ளைகளிற்கு குழந்தை பருவத்திலேயே "நன்றி", "தயவு செய்து" என்ற இந்த வார்த்தைகளின் மதிப்பை சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். அத்துடன் நாம் பேசும் வார்த்தைகளில் சிக்கம் ,ருக்க வேண்டும். இவைகளை செய்தால் தான் நம் சமுதாயம் ஒரு நல்ல சமுதாயமாக இருக்கும். இல்லையேல் ஒருவரையொருவர் வெறுக்க ஆரம்பித்து, குற்றங்களும் தண்டனைகளும் தான் அதிகரிக்கும்.

### ஒருவரை ஒருவர் மன்னித்து வாழ பழக வேண்டும்

நாம் எல்லோரும் மனிதர்கள். மனிதர்கள் பிழை விடுவது இயற்கை. நாம் யாருமே ஒரு முழுமையான மனிதர்கள் அல்ல. நாம் யாருமே ஞானிகள் இல்லை. மன்னிப்பு என்பது முழு மனதுடன் ஒருவர் தான் செய்த பிழையை உணர்ந்து மன்னிப்பு கேட்கும்பட்சத்தில் அதை மன்னிக்கும் பக்குவம் நமக்கு இருக்க வேண்டும். இந்த பக்குவம் இலகுவில் எல்லோருக்கும் வந்து விடாது. அப்படி மன்னிக்காவிடில் அதுவே உங்களுக்கு வேதனையை சுமந்துக் கொண்டு வாழ்பவர்களாக மாற்றி விடும். ஆகையால், உடனே மன்னித்து விடுங்கள். மன்னிப்பு கேட்பவரை விட, மன்னிக்க முடியதவர்கள் தான் அதிக வேதனையை சுமப்பார்கள். ஒருவர் ஒரே பிழையை திரும்ப திரும்ப செய்வாரானால் அதை மன்னிக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் செய்யும் தவறு சிறிதா, பெரிதா என்று அளவிடுங்கள். பெரிய பிழை என்றால் அது மீண்டும், மீண்டும் நடந்தால் மன்னிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், சிறிய பிழையாக இருந்தால் அது மீண்டும், மீண்டும் நடந்தால் மன்னித்து கடந்து சென்று விடுங்கள். இல்லையேல் உங்களுக்கு தான் வேதனை.

நாம் வாழும் முறையை பின்பற்றி தான் நமது பிள்ளைகளும் வாழ்வார்கள். நாம் ஒருவருடன் பேச விருப்பமில்லை என்றால், மனைவியிடம் ஒரு தொலைபேசி வரும்போது நான் இல்லை என்று கூறு என்று சொல்லும் போது அதை எனது குழந்தை கேட்டுக் கொண்டு நின்றால் அது ஒரு பிழையான முன் உதாரணமாக என்னை, நான் முன் நிறுத்துகிறேன். ஆகையால், குழந்தைகளுககு முன்னால் நாம் என்ன செய்கிறோம் என்பதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு முன்னால் கணவன், மனைவி வாக்குவாதப்படுதல் குழந்தைகளின் மனதை பெருமளவில் பாதிக்கும். நம்முடைய (Parent) செயல்கள் அத்தனையும் நமது பிள்ளைகள் பார்த்து அதை கிரகித்துக் கொளவார்கள். ஆகையால் நாம் அவர்களுக்கு முன்னால் என்ன செய்கிறோம் என்பதில் அவதானமாக இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு நாம் ஒரு விடயத்தை செய்ய உறுதிமொழி வழங்கினால் அதை செய்து பழக வேண்டும். முடியாமல் போகும்பட்சத்தில் குழந்தைகளிடமும் மன்னிப்பு கேட்டுப் பழகுங்கள். உங்கள் துணைவியாரிடம் மன்னிப்பு கேட்டுப் பழகுங்கள். இவை நீங்கள் நேர்மையானவர் என்பதை குழந்தைகளுக்கு புரிய வைக்கும்.

நீங்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் உண்மையாக இருங்கள். அது உங்கள் மேல் உங்கள் குடும்பத்திற்கு மிகவும் மதிப்பையும், மரியாதையையும் உருவாக்கும். பொய் பேசுபவர்கள் எப்பவுமே தமது மதிப்பையும், மரியாதையையும் இழந்து விடுவார்கள். இதன் மூலம் அவர்கள் தன்னம்பிக்கையையும் இழந்து விடுவார்கள்.



நீங்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் நடக்கும்பட்சத்தில் உங்கள் பெற்றோர் மட்டுமல்ல, உங்கள் மனைவி அல்லது கணவன் உங்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உங்கள் தன்னம்பிக்கை அதன்மூலம் உயர்வடையும். இந்த தன்னம்பிக்கை நீங்கள் வேலை செய்யும் இடத்திலோ அல்லது வியாபாரத்திலோ உங்களை மேலும், மேலும் உயர்த்தும். கடின உழைப்பின் மதிப்பை உங்கள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுங்கள். ஒரு வேலையை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்ய பழக்குங்கள். அந்த வேலைக்கு, சாதனைக்கு தட்டிக் கொடுத்து பழக்குங்கள். இவை யாவும் எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகள் சிறந்து விளங்க உதவும். ஒரு குறிக்கோளுடன் வாழ பழகுங்கள். Goal Setting செய்வதற்கு பழக்குங்கள். எதை அடைய எண்ணுகிறார்கள் என்பதை எழுதி வைத்து அதை அடையத் தொடர்ந்து ஊக்கப்படுத்துங்கள். குறுகிய கால குறிக்கோள், நீண்ட கால குறிக்கோள் என எழுதி அதை எப்படி அடைவது என்பதை திட்டமிட பழக்குங்கள். இப்படி வளர்த்தால், குழந்தைகள் பல சிகரத்தை தொடுவார்கள்.•

**செல்வா செல்வத்துரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிள்ளி செல்லையாவின் மார்க்கம் நகரசபை 7ம் வட்டாரத்திற்கான பிரச்சார ஆரம்பம் நிகழ்வு























மார்க்கம் நகரசபை 7ம் வட்டாரத்திற்கான தேர்தலில் வேட்பாளராக விளங்கும் கிள்ளி செல்லையாவின் உத்தியோக பூர்வமான தேர்தல் பிரச்சார ஆரம்ப நிகழ்வு 27.08.2018 இரா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பெருமளவிலான வாக்காளர்கள், ஆதரவாளர்கள், நண்டர்கள், ரொறொன்றோ, மாக்கம் தமிழர் சமூகப் பிரமுகர்கள் பங்கு பற்றிய இந்நிகழ்வில் யோர்க் பிராந்திய சபை உறுப்பினர் நிர்மலா ஆம்ஸ்றோங், யோர்க் கல்விச் சபை உறுப்பினர் ஜொனிற்றா நாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

திரு. கிள்ளி செல்லையா 2009 ஆண்டு யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப் பட்ட நமது சகோதரர்களிற்கு அவசர உதவிகளை அளிக்கும் பொருட்டு அன்புநெறி என்ற அமைப்பை உருவாக்கிய மூவரில் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அன்புநெறி தொடங்கிய காலம் முதல் இன்றுவரை அதனூடாக நம் மக்களுக்கான பல வேலைப்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில் முன்னின்று உழைத்தவர், உழைப்பவர். கிள்ளி தனது நேரத்தையும், பொருளையும், உழைப்பையும் தொடர்ந்தும் இப்படியான பணிகளுக்கு வழங்கி வருவது வருவது நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

# Scarborough North Ward 21 கல்வி சபைக்கு போட்டியிடும் யாழினி

Scarborough North Ward 21 கல்வி சபைக்கு போட்டியிடும் யாழினி ராஜகுலசிங்கம் அவர்களின் தேர்தல் பணிமனை திறப்பு விழா இந்தமாதம் 8ம் திகதி நடைபெற்றது. யாழினி ராஜகுலசிங்கம் அவர்களுது தேர்தல் முன்னெடுப்புகளை ஊக்கப்படுத்துமுகமாக சமூக ஆர்வலர்கள் , தலைவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE

## Serving the Tamil Community

OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*



Vilosanan Sivatharman
416-993-0826

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:
- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception* • *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

**1911 Woodbine Ave, Markham ON, L3R 5G1**
**www.chapelridgefh.com**
**info@chapelridgefh.com**



HELPING HANDS SENIOR CARE VILLA KARUNA

TET HD

VILLA KARUNA HOME FOR SENIORS & TET HD

jointly present

*Santhiyaragam* 2018

## GOLDEN SUPER SINGER GRAND FINALE

Season 2

## SEPTEMBER 30TH, 2018

VENUE:
THAMIL ISAI KALAAMANRAM
3-1120 TAPSCOTT RD
SCARBOROUGH, ON
M1X 1E8

Live Music By:

TICKET: $25
DOORS OPEN AT 4:00 PM

For tickets and more information: 416-200-6971

Title Sponsor: Value Plus PHARMACY For all your medical drug needs

MAYA'S BOUTIQUE

Powered By: kyk SHUTTERS

WIRE MAGIC





# 1HR RMT MASSAGE

# $65

1 HOUR


## DIRECT BILLING
## DON'T PAY A CENT

## 416-757-2220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் சிங்கர் ஸ்டார் நைட்










பல வெற்றிகரமான மாபெரும் இசை நிகழ்வுகளை நடத்தி வரும் ஆர்யா கனடா வின் மற்றுமொரு நிகழ்வாக மக்கள் இசை கலைஞர்களின் Super Singer Star Night

இந்த மாதம் செப்டம்பர் 02-03ம் திகதிகளில் மாக்கம் நகரில் Southern Aroma Plazaவில் நடைபெற்றது. மக்கள் இசை கலைஞர்களான செந்தில் ராஜலஸ்மி உற்பட பலர் பங்கு பற்றியிருந்தார்கள், இந்நிகழ்வுகளை அனுசரணையை வீடு விற்பனை முகவர் Kayan Kanesalingam அவர்கள் வழங்கியிருந்தார்.

# மார்க்கம் முழு தொகுதிக்குமான ( REGIONAL COUNCILLOR ) ஒரே ஒரு தமிழ் வேட்பாளராக நிரான் ஜெயநேசன்









மார்க்கம் முழு தொகுதிக்குமான ( Regional Councillor ) ஒரே ஒரு தமிழ் வேட்பாளராக நிரான் ஜெயநேசன் அவர்களது தேர்தல் பணிமனை திறப்புவிழாவும் தேர்தல் முன்னெடுப்பு நிகழ்வும் செப்டம்பர் மாதம் 5 ம் திகதி மார்க்கம் நகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் மாகாணசபை உறுப்பினர் லோகன் கணபதி உற்பட பல்லின் மக்களின் ஆதரவாளர்களும் கலந்து தமது ஆதரவை தெரிவித்திருந்தார்கள் . இவர் ஒண்டாரியோ காவல்துறை உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் .

கடந்த ஆண்டு டொரோண்டோ நகரில் வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து ஒரு சேர்ட், கழுத்துப் பட்டி (டை) மற்றும் உள்ளாடை ஆகியவற்றை திருடிய குற்றத்திற்காக வர்த்தக நிலைய பாதுகாப்பு அதிகாரிகளினால் தன்னிடம் ஒப்படைக்கபபட்ட இளம் வயது நபர் ஒருவருக்கு நேர்முகப்பரீட்சை ஒன்றுக்கு செல்லும் வகையில் தேவையான ஆடைகளை தனது செலவில் வாங்கிக்கொடுத்த தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரியான நிரான் ஜெயநேசன் அவர்களுக்கு ரொரென்ரோ பெரும்பாக பொலிஸ் தலைமை அலுவலகத்தில் கௌரவம் அளிக்கப்பட்டது. டொரோண்டோ பத்திரிகைகளில் இச்செய்தி முக்கியத்துவம் பெற்றிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வாங்க விற்க வாங்க




RE/MAX COMMUNITY
Realty Inc , Brokerage

**Esan** Kulasegaram
Sales Representative

**416.833.9999**

off: 416.287.2222 | fax: 416.282.4488
203 - 1265 Morningside Ave Toronto, ON
Brokerage Independently Owned And Operated

# 20 Year Pay Insurance

## இருபது வருடக் கட்டுப்பணம்!
## வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!

**இருபது வருடங்களுக்கு மட்டும் மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள். அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.**

இருபது வருடங்களின் பின், விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

| Age | 20 | | 25 | | 30 | | 35 | | 40 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 72 | 60 | 82 | 68 | 92 | 84 | 112 | 98 | 131 | 116 |
| 200K | 126 | 108 | 147 | 126 | 172 | 158 | 211 | 185 | 248 | 223 |
| 300K | 188 | 162 | 220 | 188 | 258 | 236 | 317 | 278 | 372 | 334 |



RBC Insurance | Manulife | Industrial Alliance | La Capitale Financial Group | Assumption Life | BMO Insurance | Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

**Cell:416.728.5772 Office:416.519.3896**

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
• Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REFINANCE TO LOWER RATES
## SAVE UP TO 75%

**Your Mortgage Expert**

**Sathy** Bagee
VP Business Development
Mortgage Agent
Fisco Licence # M 16002389
416 821 4512



**Good Credit ?**
No Income verification - Low Interest Rate.

**Bad Credit ?**
No Income verification - No Credit Check

MORTGAGE ALLIANCE
Fichi
Licence # : 12939

sathy.b@fichifinancial.ca
www.fichifinancial.ca

***condition may apply under the guideline of the lenders.



- Inclusive working and academic environment for our children
- Creating an atmosphere where diversity is valued
- Strong advocate for mental health
- Providing opportunities for parent involvement
- Bringing awareness towards bullying and creating more anti-bullying programs
- Creating a positive and safe environment in and around the school

***For Our Children's Tomorrow***
***Vote For Me October 22nd***

www.AkilaRudrasingam.com | 647-764-8144 | rudra.akila1@gmail.com



# AKILA
## RUDRASINGAM
### TDSB TRUSTEE
*NEW VISION, NEW DIRECTION FOR OUR CHILDREN*
**Ward 22 Scarborough - Rouge Park**

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Mike is looking forward to your support to serve as your**

# Councillor - Ward -7

**Elaguppillai (Mike) Srinathan B.Sc**

**Vote for the future**



MARKHAM






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்?

Super Visa
100% Refund if
Visa Denied




உங்களுக்கு விரும்பிய காப்புறுதி
நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

போதுமான பாதுகாப்பே குடும்பத்தில்
நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான
பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா?
இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

**திலீபன் இராமநாதன்** BBM (Hons)
**(Thileepan Ramanathan)** Dir : (647) 381-8445
ஆயுள் காப்புறுதி முகவர் Email: itsthil@yahoo.ca

### ஆயுள் காப்புறுதி விலைவிபரங்கள்

| வயது | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200 000 | 10 | 15 | 11 | 15 | 12 | 15 | 14 | 19 | 18 | 26 | 21 | 34 | 26 | 62 | 45 | 99 | 71 | 167 | 113 | 294 | 204 |
| 500 000 | 10 | 28 | 18 | 28 | 19 | 29 | 23 | 36 | 8 | 51 | 37 | 76 | 54 | 143 | 99 | 232 | 163 | 405 | 270 | 705 | 491 |
| 200 000 | 20 | 17 | 14 | 18 | 15 | 20 | 16 | 26 | 21 | 40 | 29 | 63 | 43 | 116 | 79 | 204 | 137 | 309 | 208 | 481 | 316 |
| 500 000 | 20 | 34 | 23 | 34 | 24 | 37 | 28 | 50 | 38 | 80 | 54 | 136 | 83 | 268 | 178 | 482 | 324 | 734 | 500 | 1139 | 761 |
| 100 000 | ஆயுள்வரை | 49 | 44 | 58 | 52 | 69 | 61 | 81 | 69 | 103 | 86 | 122 | 107 | 154 | 128 | 201 | 168 | 269 | 229 | 360 | 308 |
| 250 000 | ஆயுள்வரை | 95 | 83 | 115 | 102 | 142 | 126 | 178 | 149 | 234 | 195 | 280 | 239 | 370 | 303 | 476 | 393 | 641 | 541 | 878 | 744 |

**Non medical- Term & Permanent Products**

| வயது | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 150 000 | 10 | 46 | 41 | 64 | 53 | 92 | 72 | 166 | 121 | 292 | 197 | 586 | 369 |
| 100 000 | 10 | 33 | 30 | 46 | 38 | 64 | 51 | 113 | 83 | 197 | 134 | 393 | 248 |
| 50 000 | 10 | 20 | 20 | 33 | 23 | 36 | 29 | 60 | 45 | 102 | 71 | 200 | 128 |
| 150 000 | 20 | 56 | 46 | 92 | 67 | 147 | 104 | 243 | 164 | 398 | 257 | 675 | 442 |
| 100 000 | 20 | 40 | 33 | 64 | 47 | 101 | 72 | 165 | 112 | 268 | 174 | 452 | 297 |
| 50 000 | 20 | 24 | 20 | 36 | 27 | 54 | 40 | 86 | 60 | 138 | 91 | 230 | 152 |
| 20 000 | ஆயுள்வரை | 45 | 37 | 49 | 41 | 61 | 52 | 80 | 66 | 111 | 86 | 157 | 117 |
| 30 000 | ஆயுள்வரை | 64 | 53 | 71 | 59 | 89 | 75 | 117 | 96 | 164 | 126 | 232 | 173 |
| 40 000 | ஆயுள்வரை | 84 | 69 | 92 | 76 | 117 | 98 | 154 | 126 | 217 | 167 | 308 | 229 |
| 50 000 | ஆயுள்வரை | 104 | 85 | 114 | 94 | 144 | 121 | 191 | 156 | 270 | 207 | 384 | 285 |
| 75 000 | ஆயுள்வரை | 153 | 124 | 169 | 139 | 214 | 178 | 283 | 231 | 402 | 308 | 573 | 425 |
| 100 000 | ஆயுள்வரை | 202 | 164 | 223 | 183 | 283 | 236 | 376 | 306 | 534 | 409 | 763 | 564 |

**Call me for your free consultation.**

Life100
INSURANCE & INVESTMENTS INC.

"Price are based on current rates and it may change time to time. condition may apply"





# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்ச்னைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

**V. SRI**
Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருக்கெடுக்கும் ஈழத்தமிழரின் வதிவிடங்கள்



இன்று ஸ்ரீலங்கா என்று அழைக்கப்படும் இலங்கைத் தீவு ஒரு ஜனநாயக நாடாக இருக்கின்றது. தொடக்கத்தில் சிறுசிறு குழுக்களுக்கான தலைவர்களாலும், அதன் பின் இனங்களுக்கான மன்னர்களாலும், தொடர்ந்து போத்துக்கேயர், ஒல்லாந்தர், அதன்பின் ஆங்கிலேயராலும் இந்தத் தீவு ஆளப்பட்டது. இந்த நாட்டில் இன்று பெரும்பான்மையினராக இருப்பவர்கள் சிங்கள மொழி பேசும் மக்கள். அடுத்ததாகத் தமிழ் பேசும் தமிழர்கள் இருக்கின்றார்கள்.

இந்த நாடு இருக்கும் தீவு எப்படி உருவானது என்பதில் பலருக்குச் சந்தேகங்கள் இருக்கின்றன. ஈழம் என்ற பெயர் ஏன், எப்போது பாவனைக்கு வந்தது என்பதும் பலர் அறியாததே. மகாவம்சத்தை மட்டும் வைத்தே சிலர் எங்கள் சரித்திரத்தைச் சொல்ல முற்பட்டார்கள்.

எங்களுக்கென்று சங்க இலக்கியங்கள், குகை ஓவியங்கள், புடைப்பு சிற்பங்கள், கல்வெட்டுக்கள், ஏடுகள் என்று பலவகையான ஆவணங்கள் இருப்பதைத் தொடக்கத்தில் யாரும் கண்டு கொள்ளவில்லை. இதைவிட தொல்பொருள் ஆய்வின் மூலமும், கடலோடிகளின் பதிவுகள் மூலமும் தமிழர்கள் வாழ்ந்த இடங்கள் பற்றிப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

எங்கள் வரலாற்றைச் சொல்ல இது போன்ற ஆவணங்களில் இருந்து பல ஆதார பூர்வமான விடயங்களை எடுத்துக் கொள்ள முடியும். இவை எல்லாம் தகுந்த முறையில் பாதுகாக்கப் படவேண்டுமாயின், இந்த அடையாளங்கள் அழிக்கப்படுமுன் நவீன தொழில் நுட்ப வசதிகள் மூலம் முடிந்தளவு பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும். எமக்கென்று ஒரு நாடு இல்லாததால் எமது ஆவணங்களைப் பாதுகாப்பதென்பது மிகவும் கடினமான காரியமாக இருக்கின்றது. ஆனாலும் புலம்பெயர்ந்த மண்ணில் இருக்கும் தமிழர்களால் இந்த ஆவணங்களைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

தமிழ் மொழியின் வரலாற்றைப் போலவே, இலங்கையின் வரலாறும் 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. மகாவம்சத்தின்படி இலங்கையின் வரலாறு கி.மு. 6ம் நூற்றாண்டில் ஆரம்பமாகினாலும், அதற்கு முன்பாகவே இயக்கர், நாகர் ஆகிய இரண்டு இனத்தவர்கள் இலங்கையில் வாழ்ந்ததாக மகாவம்சம் கூறுகிறது.

வடபகுதியில் வாழ்ந்தவர்கள் நாகர்கள் என்பது இன்றும் அங்குள்ள நாகவழிபாட்டின் மூலம் உறுதியாகின்றது. இதனால்தான் 'நாகதீபம்' என்ற பெயரும் வந்தது. சங்க இலக்கியத்திலும் 'ஈழம்' என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இதைவிட இலங்கை, இலங்காபுரி, சிறிலங்கா, லங்காதுவீபம், செரெண்டிப், தம்பபண்ணி, தப்பிரபோன், தாமரபரணி, மணிபல்லவம், தர்மதீபம், சிலோன், சேலான், இரத்தினதுவீபம் என்றெல்லாம் இலங்கை அழைக்கப்பட்டது.



தேவநம்பியதீசன் காலத்தில் இலங்கையில் இருந்த சமூகக் கட்டமைப்பில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. தமிழர் பண்பாட்டை பின்பற்றி வாழ்ந்த மக்களிடையே ஒரு பகுதியினரிடம் மௌரியப் பேரரசர் அசோகனின் புதல்வனான மகிந்ததேரரால் கி. மு. 3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பௌத்த மதம் அறிமுகம் செய்யப்பட்டது. இத்தனைக்கும் பிறப்பிலே புத்தபகவானும் ஒரு இந்துவாகத்தான் பிறந்தார்.

அனுராதபுரத்தில் கி.மு 200 முதல் கி.பி 1000 வரையும், பொலன்னறுவையில் கி.பி 1070 முதல் கி.பி 1200 வரையும் மன்னராட்சி நடைபெற்றது. அரசியற் காரணங்களால் பொலன்னறுவையில் உள்ள இந்து ஆலயங்கள் இன்று மெல்ல மெல்ல மண்ணுக்குள் மூழ்குவதை யாரும் கண்டுகொள்வதில்லை. இயற்கையின் துணையோடு இவை அழிக்கப்படுவதால், காலப்போக்கில் இப்படி ஒரு ஆலயம் அங்கு இருந்ததே தெரியாமல் போய்விடக்கூடும்.

ஈழத்தமிழர்கள் தங்கள் வரலாற்றை ஆவணப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டாததால், 14ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே இலங்கையின் வடபகுதியில் இருந்த தமிழர்களின் தனியரசு பற்றிய ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இவர்களில் எல்லாளன் கிமு. 205 ஆண்டு பதவி ஏற்று 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். மற்றும் சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற மன்னர்களையும் முக்கியமாக இங்கே குறிப்பிட வேண்டும்.

முதலாம் செகராசசேகரன் காலம் தொடக்கம் (1215) இரண்டாம் சங்கிலியன் வரை (1619) வடபகுதி தமிழ் மன்னர்களின் ஆட்சியின் கீழ்தான் இருந்தது. கண்டியின் கடைசி மன்னனும் தமிழனே, கண்ணுசாமி என்ற இயற்பெயர் கொண்ட தமிழனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் தான் கண்டியின் கடைசி மன்னனாக இருந்தான். கண்டியில் நடந்த இறுதிப் போரில் 1815 ஆம் ஆண்டு பிரித்தானியரால் தோற்கடிக்கப்பட்ட இவன் சிறை பிடிக்கப்பட்டு இந்தியாவிற்கு கொண்டு செல்லப்பட்டான்.

1505 ஆம் ஆண்டு போத்துகேயரின் வருகையோடு தொடங்கிய போர்த்துக்கேய, ஒல்லாந்திய, பிரித்தானிய ஆட்சியைத் தொடர்ந்து 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை அடைந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்தது என்று சொல்லப்பட்டாலும், சிறுபான்மை இனத்தவர்களால் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியாமலே போய்விட்டது. இலங்கை சுதந்திரமடைந்து சுமார் பத்து வருட காலத்திற்குள் எல்லாமே தலை கீழாக மாறிவிட்டது.

தொன்று தொட்டு தமிழ் மொழி இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் மிகவும் செழிப்பாக வளர்ந்து வந்தது. வடக்குக் கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் பரம்பரையாக அந்த மண்ணில் வாழ்ந்து வருபவர்கள். பல்லாயிரம் வருடங்களுக்கு முன் இந்திய துணைக் கண்டத்தில் இருந்து இயற்கை அனர்த்தத்தால் பிரிக்கப்பட்ட ஒரு சிறு பகுதியே இன்றைய இலங்கைத் தீவாகும்.

இப்பகுதியில் பூகம்பமும் அதைத் தொடர்ந்து ஆழிப்பேரலையும் ஏற்பட்டதால். சிறிய தீவாகத் தென்னிந்தியாவில் இருந்து பிரிக்கப்பட்டதற்கு இலக்கியச் சான்றுகள் பல உண்டு.

தென்னிந்தியாவை மூவேந்தர்களான சேர, சோழ, பண்டிய மன்னர்கள் ஆண்டதற்கான ஆதாரங்கள் பல உண்டு. தமிழர்களின் பண்பாடு, கலை, கலாச்சாரத்தை மட்டுமல்ல, தென்னிந்தியாவின் கன்னியாகுமரி பகுதி, மற்றும் சேரநாட்டு பகுதியில் இருக்கும் மரம் செடி கொடிகள் எல்லாம் அப்படியே இலங்கையின் வடபகுதியில் வளர்ந்திருப்பதையும் அவதானித்தால் நிலம் சார்ந்த தொடர்புகளையும் உங்களால் உறுதி செய்ய முடியும்.

அக்காலத்து சேரநாட்டுத் தமிழர்களின் பேச்சு வழக்கு இன்றும் யாழ்ப்பாணத் தமிழர்களிடம் இருப்பதை இலகுவில் இனங்காண முடியும். அதனால்தான் இன்று மலையாள மொழி என்று சொல்லப்படுகின்ற பேச்சுவழக்கில் இருந்த தமிழ் மொழியை யாழ்ப்பாணத் தமிழர்களால் இலகுவில் புரிந்து கொள்ள முடிகின்றது.

கேரளா பகுதியில் இருந்து தமிழ் சினிமாவில் நடிக்கும் நடிக, நடிகைகள் இலகுவில் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களாகப் பிறந்தவர்கள் தமிழர்களா அல்லது தமிழ் மொழியைப் பேசுபவர்கள் தமிழர்களா?

1983 ஆம் ஆண்டு தாய் மண்ணில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக ஈழத்தமிழர்கள் பலர் பல நாடுகளுக்கும் புலம் பெயர்ந்தார்கள். அப்படிப் புலம்பெயர்ந்து வாழும் மண்ணில் யார் தமிழர்கள் என்ற கேள்வி தற்போது எழுந்து நிற்கின்றது. தமிழர்களாகப் பிறந்தவர்கள் தமிழர்களா அல்லது தமிழ் மொழியைப் பேசுபவர்கள் தமிழர்களா என்பது பலராலும் கேட்கப்படும் கேள்வியாக இருக்கின்றது.

காரணம் புலம் பெயர்ந்த தமிழர்களின் அடுத்த தலைமுறையினர் சிலர் போதிய தமிழ் மொழி அறிவு இல்லாமல் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் கலப்புத் திருமணமும் செய்திருக்கிறார்கள். பல்வேறு மொழிகள் பேசப்படும் இனங்கள் இன்று தமிழ் மொழி பேசும் மக்களுடன் திருமண பந்தத்தின் மூலம் இணைந்திருக்கிறார்கள், பல்வேறு நாடுகளுக்கும் சென்று ஈழத்தமிழர்கள் குடியேறியதுதான் இதற்கு முக்கிய காரணமாக இருக்கின்றது.

இவர்களின் பிள்ளைகள் தமிழ் மொழியைப் பேசாவிட்டால் அவர்கள் தமிழர்களாக மாட்டார்களா? இவர்கள் தமிழ் மொழியைப் பேசாவிட்டால், இவர்களது குடும்பப் பெயர்கள் மட்டும் தமிழ் பெயர்களாக இருக்குமே தவிர இவர்கள் தமிழர்களாக இருக்க மாட்டார்கள் என்று விவாதிப்பவர்களும் உண்டு. புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்குமா என்ற கேள்வி தற்போது எல்லோர் மனதிலும் எழுந்து நிற்கிறது.

தமிழ் மொழி நிலைத்து நிற்க வேண்டும் என்ற சேவை மனப்பான்மையோடு தமிழர்கள் செயற்பட்ட காலம் புலம் பெயர்ந்த மண்ணில் முடிந்து விட்டது. அடுத்த தலைமுறையினர் வருவாய் இல்லாமல் எதையும் இலவசமாகச் செய்யத் தயாராக இல்லை. எனவே எமது முன்னோர்களால் பேணிக் காக்கப்பட்ட தமிழ் மொழி புலம்பெயர்ந்த மண்ணில் விரைவில் அழிந்து விடுமா என்ற பலரின் கேள்விக்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

மொழியைப் பேசுவதற்கும் காரணம் இந்த இரண்டு இடங்களுக்குமான மொழித் தொடர்புகளே ஆகும். மொழி, உணவு, உடை போன்ற விடயங்களிலும் தொடர்புகள் இருப்பதை அவதானிக்கலாம்.

எனவே தென்னிந்தியாவில் இருந்து இயற்கை அனர்த்தத்தால் பிரிக்கப்பட்ட தீவுதான் இலங்கைத்தீவு என்பதை உறுதி செய்ய முடியும். சங்க இலக்கியங்களில் இடம் பெற்ற 'இராமர் அணை' (கம்பராமாயணம்) என்று ஒன்று பாக்குநீரணையில் தண்ணீருக்குள் மூழ்கி இருப்பதை சமீபத்திய விண்கலங்களில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றன. இதைவிட பஞ்ச ஈஸ்வரங்கள் என்று தேவாரங்களில் பாடப்பட்ட மிகப்பழமை வாய்ந்த ஐந்து ஈஸ்வரங்களும் இலங்கையில்தான் இருக்கின்றன.

சங்க இலக்கியத்தில் தென்குமரிமலை என்று குறிக்கப்பட்ட மலைதான் இயற்கை அனர்த்தத்தால் நிலம் பிரிக்கப்பட்டபோது, இலங்கைத் தீவில் இருந்கும் தொன்று தொட்டு அழைக்கப்படும் சிவனொளிபாத மலைத் தொடராகும். எனவே இலங்கைத் தீவின் வடபகுதியில் வாழும் தமிழர்கள் பரம்பரையாக அந்த மண்ணில் வாழ்பவர்கள் என்பது உறுதியாகிறது.

அரசியல் காரணங்களுக்காகச் சிலர் இதை மறுத்தாலும் உண்மை அதுதான் என்பதை எல்லோரும் புரிந்து கொள்வார்கள். மலையகத்தில் வாழும் தமிழர்களில் அனேகர் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் 1820களின் பிற்பகுதியில் இருந்து தொடர்ச்சியாக மலையகப் பகுதிகளில் தொழில் நிமிர்த்தம் வந்து குடியேறியவர்கள். ஆனாலும் இவர்கள் எல்லோரும் தமிழ் மொழியையே தாய் மொழியாகக் கொண்டவர்கள். பேசும்போது வட்டார வழக்கு காரணமாகச் சில நேரங்களில் சில சொற்கள் வேறுபட்டிருந்தாலும், எழுதும் போது எல்லோரும் தூயதமிழிலேயே எழுதுகின்றார்கள். சிலருடைய மதங்கள் வேறுபட்டிருந்தாலும், இந்த மொழியின் ஒற்றுமையே தமிழர்கள் என்ற அடையாளத்தை முக்கியமாக இனம் காட்டி நிற்கின்றது.

மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர் காலத்தில் தமிழ்க் கலாச்சாரங்கள் ஆசியாவின் கீழை நாடுகளான ஈழம், ஜாவா, சுமத்திரா, பாலி, கம்போடியா, தாய்லாந்து மலேசியா, சீனம், வியட்நாம் போன்ற நாடுகளில் பரவி இருந்தன.

இது மட்டுமன்றி தமிழர்களுக்கு மேலே நாடுகளான உரோமம், கிரேக்கம், யவனம் போன்ற நாடுகளோடும் வணிகத் தொடர்புகள் இருந்தன. இந்துமாசமுத்திரம் தமிழர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்திருக்கின்றது.

நியூசிலாந்து, சீனா, கம்போடியா, தாய்லாந்து, மலேசியா, யாவா, சுமத்திரா, பாலித்தீவு போன்றவற்றில் தமிழரோடு தொடர்புடைய இந்து மதம் சார்ந்த ஆவணங்கள் பல கிடைத்திருக்கின்றன. உலகப் பெருங் கடல்களிலெல்லாம் மூவேந்தர் காலத்தில் தமிழனின் வாணிபக்கலங்கள் எல்லாம் வலம் வந்து கொண்டிருந்தன. இதனால்தான் 'ஈழத்துணவும் காளகத் தாக்கமும்' என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது.

இன்று தமிழர்கள் அதிகமாக வாழும் நாடுகள் என்று பார்த்தால் முதல் பத்து இடத்தில் இந்தியா, இலங்கை, கனடா, மலேசியா, தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், மியான்மர், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, மொரிஷஸ் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

இதைவிட அவுஸ்ரேலியா, பிஜி தீவுகள், ரிறினிட்டாட், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, சுவிஸ், டொபேக்கோ, ஹொலண்ட், நியூசிலாந்து போன்ற நாடுகளிலும், இன்னும் சில நாடுகளிலும் தமிழர்கள் சிறிய எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். சமீபத்தில் ஹவாய் தீவுகளுக்குச் சென்ற போது, தமிழர்களின் பாரம்பரிய தளிர் அணி அணிந்த பெண்களையும், அவர்களின் கோலாட்ட நடனத்தையும் அங்கே காணமுடிந்தது.

குரு அரவிந்தன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா இனி கஞ்சா தேசமா?





**மருத்துவர் போல் ஜோசேப் அவர்கள் கடந்த சில மாதங்களாக மரியுவானா என்ற கஞ்சாவுக்கு தனது எதிர்ப்புக்குரலை காட்டி பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களின் ஊடாக ஆணித்தரமான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். சில நாட்களுக்கு முன்பு நான் அவரைச் சந்தித்து தொடுத்த வினாக்களுக்கு அவர் அளித்த பதில்கள்...**

**கேள்வி : போதைக்கு எதிரான போராட்டம்! எப்படி ஆர்வம் வந்தது?**

பதில் : 1979 என்று நினைக்கிறேன், ஒருமுறை நானும் எனது சில நண்பர்களும் சேர்ந்து ஊரின் மூலையில் புதிதாக தொடங்கப்பட்ட ஒரு கள்ளுத்தவறணைக்கு தீமூட்டி அழித்து எதிர்ப்பை காட்டினோம். அப்போது எனக்கு வயது பதினாறு. அதன் பின்பு பொலிஸ் விசாரணையிலிருந்தும் தப்பவில்லை. கல்லூரி முதல்வராக இருந்த ஒரு ஃபாதர் எங்களுக்கு மிக ஆதரவாக இருந்து ஊக்கப்படுத்தினார்.

அதன் பின்பு ஊரில் என் வயது இளைஞர்களை ஒன்று திரட்டி புனித டொன்பொஸ்கோ கழகம் என்ற சமூகநல அமைப்பை உருவாக்கினேன். அதனூடாக ஆலயம் சார்ந்த ஆன்மீகப்பணி, நூல் நிலையம் கட்டியது, ஊர் துப்புரவு சிரமதானப் பணி, கலை கலாசார நிகழ்வுகள், மாணவர்களின் கல்வி முன்னேற்றப் பணிகள் என்று பல. ஏறக்குறைய முப்பது இளைஞர்களுடன் இணைந்து இந்த அமைப்பில் இருப்பவர்கள் எப்போதும் மது அருந்துவதில்லை என்ற உறுதிமொழி எடுத்தோம். இப்போதும் அந்த அமைப்பு ஊரில் செயற்படுகிறது. ஆனால் மது அருந்துகிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அப்போது இருந்தவர்களில் பலர் புலம்பெயர்ந்து பல தேசங்களிலும் வாழ்கிறார்கள். சிலர் மாவீரர்களாகி விடுதலைக்கான விதைகளானார்கள். சிலர் புலம் தேசங்களில் பல பணிகளிலும் ஈடுபட்டு வந்தாலும், ஊரிலுள்ள உறவுகளுக்கு எப்போதும் உதவிக்கரம் நீட்டி வருகிறார்கள். அதன்பின்பு நான் தமிழகம் சென்று மருத்துவரான பின்பு அன்னை தெரசா போதை மறுவாழ்வு மையம் தொடங்கி பல ஆண்டுகளாக இது தொடர்பான விழிப்புணர்வுப் பணிகளை செய்து வந்தேன்.

பல நாட்களுக்கு முன்பு இணையதளத்தில் யாரோ பதிவேற்றம் செய்த வீடியோவில் ஒருவர் சில குரங்குகளுக்கு மதுவைக் கொடுத்து விட்டு அவைசெய்யும் அட்டகாசங்களை வீடியோ பதிவு செய்து போட்டிருந்தார். நகைச்சுவையுடன் கூடியதாக வியப்பூட்டுவதாக இருந்தாலும் அது முற்றிலும் தவறானது; கண்டிக்கப்பட வேண்டியது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இங்கே Party Hall களில் Bar Open என்று சொன்ன சில மணிநேரத்தின் பின்பு நம்மவர் செய்யும் செயல்களை அது நினைவூட்டியது. ஆம்... இங்கும் இது தொடர்பான விழிப்புணர்வு அவசியம்.

**கேள்வி: மதுவும், புகையும், போதையும் கனடாவில் சட்டபூர்வமானது தானே?**

பதில் : ஆம். மது, போதை, புகைப்பழக்கமென்பது மனித வரலாற்றில் நாகரீகம் வளர்வதற்கு முந்திய காட்டுமிராண்டிகளாக நிர்வாணிகளாக இருந்த காலம் முதல் இருந்து வந்துள்ளது.

கனடாவில் மது விற்பனையும், குடித்தலும் சட்டத்திற்கு முரணானது அல்ல. கடைகளில் சிகரெட் போன்றவை காட்சிப்படுத்தாமல், விளம்பரங்கள் செய்யாமல் மறைத்து வைத்துத் தான் விற்பனை செய்யப்படுகிறது. சிகரெட்டை மூடி வைத்து சாராயத்தை திறந்து வைத்தும் விற்பனை செய்கிறார்கள். நம்ம ஊர்களில் சாராயக்கடையில் பணிசெய்வது கொஞ்சம் தரம் தாழ்ந்தது. ஆனால், இங்கு Bar Man என்று பெருமையாகச் சொல்கிறார்கள். அங்கு கஞ்சா என்றால் மிகக் கேவலம். ஆனால், இங்கு விற்பனை செய்வதற்கு நிறுவனங்கள் போட்டி போடுகின்றன. இதுவா நாகரீகம்?

இனி கனடாவில் "கஞ்சா வாங்கலயோ, கஞ்சா" என்று தெருத்தெருவாய் கூவிக்கூவி விற்பனை செய்யப் போகிறார்களாம் என்று நான் ஒருவரிடம் சொன்ன போது, அரசாங்கம் தானே விற்கச் சொல்லி அனுமதித்திருக்கிறார்கள். அதிலென்ன பிழை என்றார். அரசாங்கம் தானே வீடுகளுக்கு மின்சாரம் தருது. ஒருக்கா அதில தொட்டுப் பாருங்கோ என்றேன்.

ஆம். மேற்குலம், மேலத்தேய நாகரீகம், வளர்ந்த நாடுகள், கல்வி அறிவில் சிறந்த நாடுகள், பணக்கார நாடுகள் என்று பெருமை பேசும் வெறும் வங்கியின் கார்டுகளில் வாழும் இந்தக் கூட்டம் அடுத்த தலைமுறையை எவ்வாறு இந்த கஞ்சா பாதிக்கப் போகிறது என்பதை உணராமல் அமெரிக்காவை உதாரணம் காட்டி அங்கே கறுப்புச் சந்தையை ஒழித்து விட்டோம் என்றும், அதனால் இதன் விற்பனையால் அரசின் வருமானப் பெட்டகம் நிறைந்து கொழிக்கிறது என்றும், குற்றச் செயல்கள் குறைந்து விட்டது என்ற ஒரு போலி முன் மாதிரியை பின்பற்றத் தொடங்கி விட்டனர்.

**கேள்வி: ஏன் இதற்கு பெரிதாக எதிர்ப்புக் குரல்கள் எழும்பவில்லை?**

பதில்: ஆம். இதற்கு எதிராக, பெரிதாக எந்த எதிர்ப்புக்குரலோ, போராட்டங்களோ எதுவும் நடக்காதது வருந்தத்தக்கது. ஆனால் ஒரு சில ஊடகங்களில் சில மருத்துவர்களும், சமூக ஆர்வலர்களும் அவ்வப்போது குரல் கொடுத்தார்கள். ஊடகங்களில் அவ்வப்போது ஊறுகாய் போல ஏதோ குறுஞ்செய்திகள் பத்தோடு பதினொன்றாக தொட்டுச் செல்லப்படுகிறது. பல விடயங்களுக்காக போராடும் முற்போக்கர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் இதற்கு எதிராக இன்னும் குரல் எழுப்பாமல் தங்கள் வார்த்தைகளை குரல்வளைப் பெட்டிக்குள்ளே அடைத்து ஆணிகளால் அறைந்து விட்டது போல மௌனம் காப்பது தான் இன்னும் விளங்கவில்லை. இதற்கு பின்னால் இருக்கும் மாஃபியாக்களால் ஆபத்து வந்து விடுமோ என்ற பயமாக இருக்கலாம்.

இனிமேல் மருத்துவமனைகளில் அலைமோதும் கூட்டம் கண்டிப்பாக குறையப் போகிறது. ஏனென்றால், பலர் கஞ்சாவை அடித்து விட்டு சிரித்த முகத்தோடும், புரியாத புன்னகையோடும் வலம் வரப் போகிறார்கள், "புகையுங்கள், நன்றாகப் புகையுங்கள், இனி யாருக்கும் முதுமையே வராது! ஏனென்றால், இளமையிலேயே இறந்து விடுவதால்".

மன அழுத்தம் வராதாம், பல வலிகளுக்கும், நோவுகளுக்கும் நிவாரணியாக அமையப் போகிறதாம், குற்றச்செயல்கள் குறைந்து விடுமாம், இப்படி கஞ்சாவைப் பற்றி மிகைப்படுத்திக் கதை கட்டப்படுகிறது.

**கேள்வி: ஆம்! டாக்டர் அப்ப நல்லது தானே?**

பதில்: ஆம். இவையெல்லாம் நடக்கத்தான் போகிறது, எப்படியென்றால் கஞ்சாவை அடித்ததும் மூளையிலுள்ள நரம்பு மண்டலங்களில் பாரிய மாற்றத்தை உண்டாக்கி, சுயமாக சிந்திக்கும் ஆற்றலைக் குறைத்து செயற்கையான ஒரு மனமகிழ்ச்சியை தருவது போன்ற உணர்வினை உண்டாக்கி விடுகிறது. அதனால் சில மணிநேரங்கள் தன்னை மறந்து, கவலைகளை மறந்து, தனது பிரச்சினைகளுக்கான காரணங்களை புரிந்துக் கொள்ளவிடாமல் கஞ்சாவிலுள்ள THC என்ற Delta - 9 - Tetrahydro Canna Binol என்ற வில்லன் மூளையை தனது கட்டுப்பாட்டுக்குள்ளே கொண்டு வந்து விடுவான். தன்னிச்சையான ஒரு பைத்தியச் சிரிப்பினை உருவாக்கும். இந்த THC இன் தாக்கம் நரம்புக்கலங்களுக்குள்ளே இருக்கும் வரை வலியினை உணர முடியாது. புற்றுநோய் போன்ற நோய் நிர்ணயம் செய்யப்பட்டவர்களுக்கு தற்காலிகமாக வலியைப் போக்கும் நிவாரணியாகப் பயன்படலாம்.

வழக்கமாக எடுத்துக் கொள்பவர்க்கு அவர்களுக்கு வரும் வயிற்றி வலிக்கோக, நெஞ்சு வலி மற்றும் தலைவலியின் போது ஏன் இந்த வலியுணர்வு வருகிறது, உள்ளே உள்ள நோயின் பரிணாமம் என்ன, எந்த அளவுக்கு நோய் முற்றியுள்ளது, மாரணடைப்புக்கான நெஞ்சுவலியா அல்லது கான்சருக்கான வயிற்று வலியா? பேர்ன்ற எல்லா அறிகுறிகளையும் இந்த THC மறைத்து விடுவதால் இதனால் உயிர் ஆபத்தான நிலைகளுக்கும் வாய்ப்புள்ளது.

**ஏன் மதுபானம் கூட ஒரு அங்கீகரிக்கப்பட்ட போதை தரும் பொருள். விற்பனை செய்யப்படுகிறது தானே?**

ஆமாம்! உலக சுகாதார ஸ்தாபனம் (W.H.O) வருடந்தோறும் வெளியிடும் அறிக்கைகள், ஆய்வுகளின் முடிவுகள் புலி வாலைப்பிடித்த கதையாக அச்சுறுத்துகின்றது. இவற்றை யார் படிக்கிறார்கள், ஏன் மருத்துவர்களே படிப்பதில்லை.

நீங்கள் நினைக்கலாம், ஏதோ இயற்கை அழிகளால், விமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபத்துகளால், யுத்தங்களால் எங்கோ ஒரு இடத்தில் சிலர் இறந்துப் போனாலே சில நாட்கள் அது தலைப்புச் செய்தியாகிறது. இதோ இதைப் படியுங்க...

மதுபானத்தை அருந்துவதால் உண்டாகும் நோய்களின் பட்டியலில் ஈரல் அழற்சி, ஈரல் சுருக்கம் (Hepatitis and Liver Cirrhosis) மதுப் புற்றுநோய்கள், மது விபத்துகள் போன்றவற்றால் ஆண்டுதோறும் உலகில் 3.3 மில்லியன் இறப்புகள் ஏற்படுகின்றன. இதில் 25% இறப்புகள் 20 முதல் 40 வயதுடையோருக்குத் தான் நிகழ்கிறது என்பது அதிர்ச்சியான செய்தியல்லவா!

ஏன் கனடாவும் இதற்கு விதிவிலக்கல்ல. Chief Officer Public Health Canada - Alohol Consumption - Canada - 2015 - Report இன் கணிப்பின் படி கனடாவில் 35 மில்லியன் மக்கள் தொகையில் 22 மில்லியன் பேர் ஆண்டுதோறும் மதுபானம் அருந்தும் பழக்கம் உள்ளவர்கள். இவர்களில் 4.4 மில்லியன் பேர் ஆண்டுதோறும் மதுபானத்தினால் உண்டாகும் பல பாதிப்புகளால் சிகிச்சை எடுக்கிறார்களாம்.

மருத்துவமனைகளின், மருத்துவர்களின், ஆராய்ச்சியாளர்களின் புள்ளி விபரங்களில் எல்லாம் விளக்கமாக விலாவாரியாக இருந்தாலும், மனிதனின் பலவீனத்தைப் பணமாக மாற்றி விரைவில் பிணமாக்கி இதன்மூலம் ஆளும்

**அடுத்தவன் தலையில் மிளகாய் அரைத்து, யார் குடியையும் கெடுத்தாவது தங்களின் கஜானா என்ற அரசின் வருமானப் பெட்டகம் நிரம்பினால் போதும் என்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது.**

அரசுகளுக்கு வரும் வருமானத்தை மீண்டும் மருத்துவ சேவைக்கும், கல்விப்பணி மேம்பாடுகளுக்கும், பல நலத்திட்டங்களுக்கும் செலவிடும் சுழற்சி முறைதான் இன்னும் விளங்கவில்லை.

இதன் பின்னணியில் ஏதோ சதிவலை பின்னப்பட்டிருப்பதும் எல்லாமே ஏதோ ஒரு புள்ளியில் இணைகிறதோ என்று எண்ணத் தோறுவது மட்டுமல்ல, இவற்றை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் மதுபானங்கள் பெயரளவில் வெவ்வேறு பிராண்ட்களாக இருந்தாலும் பணம் மட்டும் போய்ச் சேருமிடம் ஒருசில குறிப்பிட்ட நபர்கள் என்பது உண்மையாகும். இதே போலத்தான் கஞ்சாவை விற்பனை செய்ய பல பெரிய நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு நிற்பதும் கண்கூடு. ஏனென்றால் ஒரு புள்ளி விபரம் சொல்கிறது இதை மொத்த விற்பனைக்கு எடுக்கும் நபர் சில மாதங்களிலேயே நம் பில்கேட்ஸ்சை முந்தி விடுவாராம் என்றால் பாருங்களேன்.

**கேள்வி: டாக்டர் அவர்களே! உங்கள் அனுபவத்தில் நமது தமிழ்ச் சமூகத்தில் இதன் பாதிப்புகள் எப்படி இருக்கப் போகிறது?**

பதில்: சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு உண்மை நிகழ்வினை நகரிலுள்ள ஒரு Party Hall அருகிலுள்ள கடைக்கு சென்ற போது, அந்த மண்டபத்தின் அருகிலே சத்தமாக இருந்தது. சரி என்ன தான் நடக்கிறது என்று வேடிக்கைப் பார்க்க எனக்கும் ஆசை இருக்காதா?

பெரும்பாலும் 17, 18 வயதுடைய இளசுகள், ஏதோ ஒரு கல்வி நிறுவனத்தில் படிக்கும் மாணவ, மாணவிகளின் விழா. பலருக்கு ஏற்கனவே போதை தலைக்குமேல், சில மாணவிகள் வாந்தியெடுத்து அரை மயக்கத்திலிருக்க, சிலர் முழுமயக்கத்தில் பரிணாமத்தை நினைவூட்டும் வகையில் தவழ்ந்து கொண்டிருந்தனர். மேலும் சில அசம்பாவிதங்கள் நடைபெற, சில நிமிடங்களில் பொலிசாரும் வந்து சேர்ந்தனர். சில மாணவர்களை பொலிசார் மண்டபத்தின் வாசலில் தடுத்து நிறுத்தி வெளியே பிடித்து வைத்திருந்தனர்.

கடுமையான குளிரின் தாக்கம் அவர்களில் யாருக்கும் தெரியவில்லை. எவருமே ஜாக்கெட் அணிந்திருக்கவில்லை. ஏனென்றால் அந்த இரவுக் குளிரின் இதமான காற்றால் அப்பகுதியில் அவர்கள் விடும் கஞ்சாப்புகையின் வாசனையை உணர முடிந்தது. இதில் என்ன கொடுமையென்றால், அங்கிருந்தவர்கள் பெரும்பாலும் நம்ம தமிழ் இளசுகள்.

**கேள்வி: கஞ்சா சட்டம் வரும் முன்னரே இப்படியென்றால், எமது வருங்கால தலைமுறையை எண்ணிப் பார்க்க பயமாக இருக்கிறது?**

பதில்: கொஞ்சம் பொறுங்கோ! பல்கலைக்கழகங்களில் முதல் இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே இந்த மரியுவானா பழக்கம் ஏற்பட்டு அதற்கு அடிமையாகி மீள முடியாத மனநோயாளிகளாய் நம்மவர் மத்தியில் இருக்கும் தமிழ் இளையோர் சில நூறுபேர் என்று சொன்னால் புருவத்தை உயர்த்தாதீர்கள். ஆம்.. கசப்பான உண்மையிது. கடந்த பத்தாண்டுகளாக எனது கனடிய புலம்பெயர் அனுபவத்தினால் கஞ்சாவால் பாதிக்கப்பட்டு செயற்கைச் சிரிப்புடன் தற்போது மனநோயாளிகளாக வாழுகின்ற நூற்றுக்கணக்கான இளையோரின் பெற்றோரின் இயற்கையான கண்ணீரைக் கண்டவன் என்ற முறையில்தான் இதைச் சொல்கிறேன்.

என்னிடமே இத்தனைபேரின் ஆதாரம் இருக்குமென்றால், மற்ற குடும்ப மருத்துவர்கள், மனநல மருத்துவர்கள், உளவியலாளர்கள் போன்றவர்களிடம் எத்தனை பட்டியல் இருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்.

**கேள்வி: ஒரு அனுபவத்தையாவது நம் வாசகர்களோடு பகிர்ந்துக் கொள்ள முடியுமா?**

பதில்: பொதுவாக நோயாளிகளின் விபரங்களை வெளியிடுவது இல்லை. அது நல்லதுமல்ல. ஆனால் பெயர்களைக் குறிப்பிடாமல் ஒருவரின் அனுபவத்தை சொல்லியாக வேண்டும். ஏனென்றால், அவர்தான் நான் செய்யும் இந்த விழிப்புணர்வுக்கு தூண்டுதலாக இருந்தவர், எங்கு, எப்போ, எந்த மேடையிலும் என் அனுபவத்தை வந்து பகிர தயாராக இருக்கிறேன், அதன் மூலம் பல இளையோர் காப்பாற்றப்பட உதவியாக இருக்கும் என்பதில் உறுதியாக இருக்கிறார். அவர் தன் சிறைக்கம்பிகளுக்கு பின்னால் நடந்த அனுபவத்தை கண்ணீரோடு பதிவு செய்தார்.

தான் இருபத்தாறு வயது வரை கஞ்சா அடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி பின் அதையும் தாண்டி பல போதை மருந்துகள், போதை தரும் ஊசி மருந்துகள் என்று ஒரு நீண்டப்பட்டியலையும், பின்பு அதிலிருந்து மீண்டு வந்த கதையையும் சொன்னார். அதனால் தனது கல்வி முற்றிலும் பாதிக்கப்பட்டு, நண்பர்களோடு பல தவறான பழக்கங்களில் ஈடுபட்டு, சில நோய்களுக்கும் ஆளாகி, அதுமட்டுமல்ல, அவ்வப்போது குற்றச்செயல்களிலும் ஈடுபட்டு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு சில மாதங்கள் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் இருந்த கசப்பான அனுபவங்களையும் பகிர்ந்துக் கொண்டார். மேலும், போதையினால் வாகன விபத்துகளிலும் இருந்து தப்பவில்லை என்று தன்னுடலில் இருந்த தழும்புகளையும் காண்பித்தார். கனடாவில் பிறந்து இது எப்படி என்று கேட்டபோது, தமிழின் மீதான, விடுதலையின் மீதான அவருக்குள்ளேயிருந்த ஆர்வத்தை சொன்னது ஆச்சரியமாக இருந்தது.

தற்போது ஒரு தொழிற்சாலையில் தொழிலாளியாய் தான்படும் வேதனைகளையும், தற்போது அவருக்கு இருக்கும் குணமாக்க முடியாத ஒரு நோயையும் பற்றிச் சொன்ன போது ஒரு கணம் நானே அதிர்ந்து போனேன்.

இத்தனை கதைகளையும் தாண்டி அவரை தற்போது மனிதனாய் மாற்றிய அவரின் பெண் தோழியும் அவர் அருகில் அமர்ந்திருந்தார். அவர் கண்களிலிருந்து ஒருதுளி கண்ணீர் கூட வரவில்லை. ஆம். அவளுக்குள்ளே அவ்வளவு தன்னம்பிக்கையும், தைரியமும் வேர் விட்டிருந்ததை கண்டேன்.

**கேள்வி: நீங்கள் சொல்வதெல்லாம் சரி, ஆனால் கஞ்சாவை சட்டப் பூர்வமாக்குவதால் கறுப்புச்சந்தை, கள்ளச்சந்தையெல்லாம் ஒழிந்து விடும் என்று தானே அரசு சொல்கிறது?**

பதில்: ஆம்! நீங்கள் சொல்வது ஒருபுறம் சரியாகத் தோன்றினாலும் இதன் இன்னொரு புறமும், முகமும் எதிர்விளைவுகளைத் தான் உண்டாக்கப் போகிறது. அது எப்படியென்றால், திட்டமிட்ட குற்றச்செயல்கள் மற்றும் கடத்தல் மாஃபியாக்களின் அட்டகாசங்கள் குறைந்துவிடும், கறுப்புச்சந்தை ஒழிந்து நல்ல தரமான கஞ்சா கிடைக்க வழி செய்யப்படும். தீவிரவாதிகளுக்கு செல்லும் பணம் தடுக்கப்படும் என்று திட்டமிட்டு அரச இயந்திரங்களினால் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகிறது.

அமெரிக்காவிலும், சில ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்கனவே இது சட்டப்பூர்வமாக்கப்பட்டு நடைமுறையிலுள்ளது. அதன் பின்பு மாஃபியாக்களின் வருமானம் குறைந்து இப்போது அரசின் வருமானப் பெட்டகம் அளவுக்கு மிஞ்சி நிறைந்து வழிகிறதாம். உதாரணமாக கொலராடே நகரத்தில் மட்டும் 2015இல் சட்டபூர்வ கஞ்சா வியாபாரத்தால் ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான வருமானம் கிடைத்துள்ளது. கலிபோர்னியாவில் மட்டும் வருடந்தோறும் சுமார் 14 பில்லியன் டொலர் லாபம் கிடைக்கிறதாம்.

அடுத்தவன் தலையில் மிளகாய் அரைத்து, யார் குடியையும் கெடுத்தாவது தங்களின் கஜானா என்ற அரசின் வருமானப் பெட்டகம் நிரம்பினால் போதும் என்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது.

பெரிய மாஃபியாக்கள் செய்த வேலையை இனி அரசும், முதலாளிகளும், நிறுவனங்களும் சட்டபூர்வமாகச் செய்யப் போகிறார்கள். ரொம்பவும் படுகேவலமாக இல்லை? இனி முன்பிருந்ததை விட சில்லறை கள்ளச்சந்தை வியாபாரம் இன்னும் சூடு பிடிக்கப்போகிறது என்கிறார்கள் குற்றவியல் நிபுணர்கள். அமெரிக்காவில் இந்த சில்லறைக் கள்ளச் சந்தையை ஒழிக்கவே முடியவில்லையாம்.

அதென்னவென்றால், 19 வயதிற்கு மேற்பட்டவர்கள் தான் நேரடியாகவும், ஆன்லைன் (Online) மூலமாகவும் வாங்க முடியும். அப்படி வாங்கி 19 வயதிற்கு குறைந்த வளரிளம் (Teenage) பருவத்தினருக்கு விற்பனை செய்வது இலகுவாகி விடும். இதனால் பெரிதும் பாதிக்கப்படப்போவது நம் இளைய தலைமுறையே என்பது மட்டும் உறுதி.

**கேள்வி: வீட்டிலேயே வளர்க்கலாம் என்று அனுமதிக்கப்படும் போது எப்படியும் கள்ளச்சந்தையும் ஒழிந்துவிடும் தானே?!**

பதில்: நம்ம நடிகர் வடிவேல் பாணியில் சொன்னா, இவனுக அடிச்சாலும் ரொம்ப நல்லவனுங்கப்பா, வச்சு வச்சு ரொம்ப நேரமாக அடிச்சாங்க.... ஆனாலும், இடையில (Gap) கொஞ்சம் இடைவெளி விட்டு விட்டு அடிச்சாங்கப்பா.... ரொம்ப நல்லவனுக மாதிரி தெரியுது! என்பது போல....

கஞ்சா சட்டம் Bill C-45 பல விடயங்களை உள்ளடக்கியிருந்தாலும் தனிநபர் ஒருவர் 30 கிராம் காய்ந்த கஞ்சாவை தன்னுடன் எப்போதுமே வைத்துக் கொள்ளலாம். இன்னும் அதிகமாக வீட்டில் வைத்திருக்கலாம். மேலும், தனது வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் ஆளுக்கு நான்கு கஞ்சா செடிகளை வளர்க்கும் தோட்டமும் அமைத்துக் கொள்ளலாம் என்கிறது சட்டம்.

இது வீட்டிலுள்ள சிறுவர்களுக்கும், வளரிளம் பருவத்தாருக்கும் ஒரு பாதுகாப்பற்ற செயலாகும். அது மட்டுமல்ல. பொது இடங்களில் புகைக்க அனுமதியில்லை. தங்களின் வீடுகளிலே புகைக்கலாம். இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது. ஏனென்றால், இதன் மணத்தை நுகரும் சிறுவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மூளையில் ஒருவிதமான இராசயன மாற்றங்களை உண்டாக்கும். இதனால் தம்மை அறியாமலேயே விரைவில் அருகிலிருப்போரும் அதை புகைக்க வேண்டும் என்ற எண்ணத்தை தன்னிச்சையாக உருவாக்கி விடும் என்பது நூறுவீதம் நிரூபணமான அதிர்ச்சியான விடயமாகும்.

அது மட்டுமல்ல, தற்போது 680 AM வானொலி உட்பட பல ஊடகங்களிலும் அடிக்கடி சொல்லப்படும் விடயம், ஒருவர் புகைப்பதால் அருகிலிருக்கும் கர்ப்பிணித் தாய்மார்களின் கருவிலுள்ள குழந்தையின் மூளை வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும் உடல் ஊனமாகலாம் என்றும் விழிப்புணர்வு விளம்பரங்கள் செய்யப்படுகிறது.

**Dr. போல் ஜோசேப்**

—இன்னும் தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரன் பொறிக்குள் சம்பந்தனா?



விக்னேஸ்வரன் ஒரு தெளிவான பிரிகோட்டை வரைந்திருக்கிறார். அபிவிருத்தி மைய அரசியல் அல்லது தீர்வுமைய அரசியல் என்ற இரண்டு தெரிவுகளை அவர் கூட்டமைப்பின் முன் வைத்திருக்கிறார். இதன் மூலம் இணக்க அரசியலா இல்லையா என்று கூட்டமைப்பே முடிவெடுத்து விட்டு விக்னேஸ்வரனை வெளித்தள்ளலாம். அவ்வாறு வெளித்தள்ளப்படுமிடத்து அவர் தன்னுடைய அடுத்த கட்டத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கும்.

மாகாண சபையின் காலம் முடிவதற்கு மிகக்குறுகிய காலமே இருக்கும் ஒரு பின்னணியில் கூட்டமைப்பின் முன்பு ஒரு முக்கியமான கேள்வி வீசப்பட்டிருக்கிறது. அரசியல் தீர்வொன்றைஉருவாக்குவதற்காககடந்த சில ஆண்டுகளாக சம்பந்தர் வழங்கி வந்த வாக்குறுதிகள் காலக்கெடுக்கள் போன்றவற்றின் பின்னணியில் ஓர் அரசியல் தீர்வைப் புறந்தள்ளிவிட்டு அபிவிருத்தி அரசியலுக்குள் மூழ்கிவிட முடியாது என்று விக்னேஸ்வரன் கருதுகிறார். தீர்வற்ற வெற்றிடத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தியானது ஒரு மாயைதான். இதை அதன் பிரயோக வடிவத்தில் சொன்னால் வலி நிவாரணியே நோய் நிவாரணி ஆகிவிடாது.

இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் முடிவதற்கு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் இருக்கும் ஒரு பின்னணியில் அபிவிருத்தியை முடுக்கிவிடுவது என்பது வடக்கு கிழக்கில் மட்டுமல்ல தெற்கிலும் அரசாங்கத்தின் வாக்கு வங்கியைப் பலப்படுத்தும்.

கஜேந்திரகுமார் அணியானது விக்னேஸ்வரனோடு இணையத் தயாராகக் காணப்படுகிறது. ஆனால் சுரேஸ் பிரேமச்சந்திரன் அணியோடு இணைவதற்கு அவர்கள் தயாரில்லை என்றே தெரிகிறது. இந்நிலையில் இவ்விரு அணிகளையும் ஒரே கூட்டுக்குள் வைத்திருப்பதற்கு விக்னேஸ்வரனால்தான் முடியும். அதற்கும் கூட கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். இது தவிர விக்னேஸ்வரனுக்கென்று ஓர் அணியுண்டு. ஐங்கரநேசன், அனந்தி, அருந்தவபாலன் போன்றவர்கள் அந்த அணிக்குள் வருவர். இவர்கள் அனைவரையும் திரட்டி கூட்டமைப்பிற்கு மாற்றாக ஒரு புதிய அணியை உருவாக்க விக்னேஸ்வரன் தயாரா?

வழமையாக தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர்தான் புதிய கூட்டுக்கள்; பற்றிய உரையாடல்கள் சூடு பிடிப்பதுண்டு. இப்பொழுது விக்னேஸ்வரன் தனது கடிதம் மூலம் தேர்தல் அறிவிக்கப் பட முன்னரே குறிப்பாக மாகாண சபையின் காலம் முடியவிருக்கும் ஒரு பின்னணியில் அதைத் தூண்டிவிட்டிருக்கிறாரா?

தமிழ்க்கட்சிகளில் பெரும் பாலானவை சிறுதிரள் எதிர்ப்பைக் காட்டும் கட்சிகள்தான். பெருந்திரள் மக்கள் மைய அரசியலை முன்னெடுக்க முடியாத கட்சிகள்தான். அது மட்டுமல்ல எல்லாக்கட்சிகளுமே தேர்தல் மையக்கட்சிகள் தான். எனவே கொள்கைப்பிடிப்புள்ள கட்சிகளும், இலட்சியப்பாங்கான கட்சிகளும் பெருந்திரள் மக்கள் மைய அரசியலை முன்னெடுக்கும் விதத்தில் பெரிய கூட்டுக்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும். இல்லையென்றால் தமிழ் வாக்குகள் சிதறிப்போய்விடும். தமிழ் வாக்குகள் சிதறுவது குடாநாட்டைவிட வவுனியாவின் எல்லைப்புறங்களிலும் கிழக்கிலும் பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

விக்னேஸ்வரன் தலைமையிலான ஒரு புதிய அணி பற்றிய எதிர்பார்ப்புக்கள் வடக்கு மையச் சிந்தனைகளாகச் சுருங்கக் கூடாது. தமிழ் மக்களின் அடுத்தகட்ட அரசியலைச் சிந்திக்கும் போது ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் பிரிக்கப்பட முடியாத தாயகம் என்ற அடிப்படையில் சிந்திப்பது அவசியம். அதாவது கூட்டமைப்பிற்கு மாற்றாக ஒரு புதிய தலைமையை அல்லது ஒரு புதிய அணியைக் குறித்து சிந்திக்கும் எவரும் வடக்கையும், கிழக்கையும் சேர்த்தே சிந்திக்க வேண்டும். வடமாகாண சபையின் காலம் முடியவிருக்கும் ஒரு பின்னணியில் அடுத்த கட்ட அரசியலைக் குறித்து அதிகம் விவாதிக்கப்படுகிறது. ஆனால் கிழக்கு மாகாண சபையின் காலம் முடிந்த பின் அந்தளவிற்கு விவாதங்கள் நடக்கவில்லை. கிழக்கை தமிழ்த்தேசிய நோக்கு நிலையிலிருந்து வென்றெடுப்பதற்கான தெளிவான ஒரு வழி வரைபடம் வேண்டும். முதலில் வடக்கைப் பார்க்கலாம்.

**விக்னேஸ்வரனை மையப்படுத்திச் சிந்திப்பது என்பது ஒரு தனிமனிதனை மையப்படுத்தும் சிந்தனையல்ல. அது மிகத் தெளிவான ஓர் அரசியற் செயல்வழியை மையப்படுத்திய சிந்தனைதான்.**

பிறகு கிழக்கைப் பற்றி யோசிக்கலாம் என்பது தாயக ஒருமைப்பாட்டிற்குப் பாதகமானது.

எனவே அபிவிருத்தி அரசியலுக்கு முன்பு தீர்வைக் கொண்டு வரவேண்டும். என்று கேட்கும் தரப்புக்கள் இரண்டு விடயங்களில் தெளிவாக இருக்க வேண்டும். முதலாவது பிரிக்கப்படவியலாத தாயகம். இரண்டாவது நோய் நிவாரணி கொடுக்கப்படும் வரையிலுமான வலி நிவாரணி அரசியலை எந்தளவிற்கு ஏற்றுக்கொள்வது என்பது.

தமிழ் அரசியல்வாதிகளும், கட்சித் தலைவர்களும், கருத்துருவாக்கிகளும், புத்திஜீவிகளும் ஊடக முதலாளிகளும் அநேகமாக நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். மிக அருந்தலான புறநடைகள் தவிர இவர்களில் பெரும்பாலானவர்கள் நடுத்தர வர்க்க வசதிகளோடு வாழ்க்கையில் 'செற்றில்ட்' ஆனவர்கள். ஆனால் இப்பொழுதும் உளவியல் ரீதியாக மீளக்குடியமராத ஒரு பெரிய தொகுதி மக்கள் உண்டு. நிரந்தரமற்ற வீடுகளில் வீட்டுத்திட்டங்களுக்காக காத்திருக்கும் மக்கள் உண்டு. கைவிடப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்கள் உண்டு. காணாமல் போனவர்களின் உறவினர்கள் பொருளாதார ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் நிவாரணமின்றித் தத்தளிக்கிறார்கள். இவர்கள் எல்லாருக்கும் வலிநிவாரணி தேவைப்படுகிறது. எனவே அடுத்த கட்டத் தமிழ் அரசியலைப்பற்றிச் சிந்திக்கும் எல்லாத் தரப்புக்களும் மேற்கண்ட இரண்டு விடயங்களிலும் தெளிவான வழி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.

விக்னேஸ்வரை மையப்படுத்திச் சிந்திப்பவர்கள் மேற்கண்ட இருவிடயங்கள் தொடர்பாகவும் தெளிவான வழிவரைபடங்களை முன்வைக்க வேண்டும். விக்னேஸ்வரனை மையப்படுத்திச் சிந்திப்பது என்பது ஒரு தனிமனிதனை மையப்படுத்தும் சிந்தனையல்ல. அது மிகத் தெளிவான ஓர் அரசியற் செயல்வழியை மையப்படுத்திய சிந்தனைதான். விக்னேஸ்வரனைக் குறித்து முடிவெடுப்பதை சம்பந்தர் நரசிம்மராவ் பாணியில் ஒத்திவைத்து வந்தார் ஆனால் இப்பொழுது விக்னேஸ்வரன் தன்னைப் பற்றி முடிவெடுப்பது என்பது ஓர் அரசியற் செயல் வழியைக் குறித்தும் முடிவெடுப்பதுதான் எனற ஒரு பொறிக்குள் சம்பந்தரைச் சிக்க வைத்துவிட்டாரா?

**நிலாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்கேஜ்



புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,

1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்

சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்

பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

# MORTGAGE NESAN 416-908-5656

## Residential / Commercial / Industrial / Investment Properties

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

### 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

### 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

### Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

### 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

### 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

### Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE

Thavanesan Subra

Independently Owned and Operated

Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1

www. nesan.ca

mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.

Office: 1-844-878-2721

Fax: 647-351-3099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Honda
2018
MODEL
CLEAROUT

# HURRY IN, THEY'RE GOING FAST!



ALL-NEW
2018 Accord LX
FROM
$75/1.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC
$0 SECURITY DEPOSIT
Conserve fuel with ECON mode. Standard on all Accord models.

2018 Pilot
GET $4,000 IN CASH INCENTIVES ON ALL 2018 Pilot MODELS*

2018 Civic LX
FROM
$56/1.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC
$0 SECURITY DEPOSIT
Conserve fuel with ECON mode. Standard on most Civic models.

INCLUDES THE $750 Civic BONUS


MODEL FC2E5JE

CASH INCENTIVES ON SELECT 2015 MODELS. MAXIMUM CASH INCENTIVE ONLY ON 2015 PILOT MODELS.

HONDA
## Formula Honda
*Where You're Treated like Family.*



**Shan Sarvananthan**
*Sales & Leasing Consultant*
Cell 416-720-1184

2240 Markham Road
Scarborough,
ON, M1B 2W4
Telephone:
416-754-4555




formulahonda.com



**Rajah Tharmalingam**
*Sales & Leasing Consultant*
Cell 647-833-4998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய அரசியலில் தமிழர்களை மலினப்படுத்த முனையும் தமிழெதிர்பாளர்கள்!

மார்க்கம் நகர 7ம் வட்டாரத் தேர்தல் தொடர்பாக திட்டமிட்டுப் பரப்பப்படும் சில தவறான செய்திகளின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள், இவர்களது நோக்கம் என்னவென்பதை ஒரு சில நொடிகளில் பார்ப்பதே எமது நோக்கம்.

தனது பெற்றோர்கள் தான் ஒரு மருத்துவராக வரவேண்டும் என்று விரும்புகின்றார்கள் என்பதை நன்கறிந்திருந்தும், இல்லையில்லை நான் சமூக அரசியல் கற்கப் போகின்றேன் என்று கற்றுத் தெளிந்த ஒரு பிள்ளை தேர்தலில் போட்டியிட முனையும் போது அவர் குடும்ப அரசியலைக் கொண்டு வர முனைகின்றார் என்ற காழ்ப்புப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

இவரது தந்தை கடந்த 12 வருடங்களிற்கு மேலாக தமிழர்களிற்காக உழைத்தவராகவும், மார்க்கம் நகரிற்கு அளப்பரிய சேவை செய்தவராகவும், இப்போது ஆளும் கட்சியில் மாகாணசபை உறுப்பினராகவும் இருக்கின்றார் என்பதற்காக, அவரது மகள் சமூக சேவையில் உள்ள ஆர்வத்தினால் தானாக விரும்பிப் போட்டியிடுகின்ற போது, இவர் போட்டியிடக்கூடாது என்று ஜனநாயக மறுப்பு மற்றும், பெண்ணுரிமைக்கு எதிரான கருத்துக்களை விதைக்கும் சில ஆண்கள் அந்தத் தொகுதியிலேயே வசிக்காதவர்கள். இவர்கள் தங்களிற்கென்றே ஒரு சுயநல நிகழ்ச்சி நிரலைக் கொண்டவர்கள். அப்படியானவர்கள் கவனிக்கத் தவறிய விடயங்கள் பல. சிலவற்றை நீங்களே ஆராயுங்கள்.



Kethika
**Logan Kanapathi**
FOR WARD 7 COUNCILLOR, CITY OF MARKHAM

சமீபத்தில் நடந்து முடிந்த ஒன்ராறியோ மாகாண சபைத் தேர்தல் உட்பட கடந்த இரண்டு தேர்தல் களங்களில் தனது நண்பர்களையும் இணைத்துக்கொண்டு ஓய்வு ஒழிவில்லாமல் பல மாதங்களாக வாரத்தில் ஏழு நாட்களும் வாக்காளர்களைச் சந்தித்து அந்தத் தொகுதி வாக்களிர்களிற்கு நன்கு பரிட்சயமான ஒரு பெண் பிள்ளை அரசியலிற்கு வருவதைத் தடுக்க முனைபவர்கள் ஜனநாயகத்திற்கு எதிரானவர்கள்.

ஒரு தமிழின இளைஞி, தகுதிகள் உள்ளவர், வட்டாரத்தின் சகல இன மக்களிற்கும் பரிட்சயமானவர், தேர்தலில் போட்டியிட்டால் வெற்றி பெற்றுவிடுவார் என்பதற்காக அவரது வெற்றியைத் தடுப்பதற்காக ஒரு குறிப்பிட்ட சிலர் மேற்கொள்ளும் விசமப் பிரச்சாரங்கள் தகுதியானவர்களை நிராகதிக்கும் ஆணாதிக்கவாதிகள் செயற்பாடு

ஏனைய வேட்பாளர்களை விட மிகவும் தகுதியானவர் என்பதற்கான சாட்சியமே இரண்டு தேர்தல் பிரச்சாரக்களங்களை தலைமையேற்று வழி நடத்தி, மக்களை சந்தித்து, பல ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. இத்தகைய சாதனையைப் புரிந்த அந்த இளைஞி அந்த வட்டார மக்களிற்காக தன்னை ஏற்கனவே அர்ப்பணித்தவர்.

அவரது தந்தை தமிழர் மரபுரிமை மாதத்தை கனடாவில் முதன் முதலில் அங்கீகரிக்க வழி செய்தவராகவும், உலகிலே-யே முதன்முறையாக இலங்கையில் 2009ல் இடம்பெற்றது இனப்படுகொலையே என்பதை ஒரு அரசவையில் தீர்மானமாக நிறைவேற்றியவராக இருந்ததை மறைக்க முயல்பவர்கள் சமுதாய நலன் விரும்பிகள் அல்ல, சமூகத்திற்கு எதிரானவர்கள்.

மார்க்கம் நகரின் வரவுசெலவுத் திட்டத் தலைவராக இருந்து வீட்டுவரியை உயர்த்தாத ஒரு நகராக மார்க்கத்தை வைத்திருந்ததையும், 76 மில்லியன் டொலர்கள் செலவில் ஒரு சனசமூக நிலையத்தை உருவாக்கியதையும், வன்னியின் நினைவாக வன்னி வீதியை உருவாக்கியதையும் வரலாற்றில் இருந்து மறைக்க முனையும் இந்த சில ஆணாதிக்கவாதிகள் இளம் சமுதாயத்தின் மீது குறிவைக்கின்றார்கள்

இதற்கான காரணம் இந்த இளைஞி தன்னை நிருபித்தவள். அரசியல் இவருக்கு சமுதாயத் தொண்டு என்கின்ற ஒரே காரணம். வட்டார மக்களின் தேவையை நன்கு அறிந்தவர். தனது எதிர்க்காலத்தை இதற்காக அர்ப்பணித்தவர்.

இவரின் திறமை, கற்கை மற்றும் மொழித்திறமை ஆகியவற்றையும், அதற்கும் மேலான மக்களின் ஆதரவையும் பெற்ற ஒருவரை தமிழர், அதுவும் பெண் என்ற காரணத்திற்காக மாத்திரம் குறைகூறும் சிலரின் நோக்கங்களையும் கடந்து, திறமைகளை நிருபித்த ஒருவரே எங்களின் தெரிவு!

**கீர்த்திகா கணபதி என்ற லோகன் கணபதியின் மகளே உங்களின் தெரிவு!!**

www.votekethika.com | 1-833-LOGAN-4-7 (1-833-564-2647) | info@votekethika.com

Approved by the Authorized Agent of the Kethika Logan Kanapathi Campaign

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org